# உதயன்

Uthayan - A lively National Tamil Daily

சுடர்: 30 கதிர்: 068 வள்ளுவர் ஆண்டு: 2046

தை 19, திங்கட்கிழமை 02.02.2015


வானிலை
மேகமூட்டமான வானிலை காணப்படும் மாலை, இரவு வேளையில் குளிரான கால நிலை காணப்படும்.

## விலகினார் பைஸர்

கொழும்பு, பெப், 2
விமான சேவைகள் இராஜாங்க அமைச்சர் பைஸர் முஸ்தபா தனது பதவியில் இருந்து விலகியுள்ளார். பதவி விலகல் கடிதத்தை அவர் நேற்று உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.
விமான சேவைகள் அமைச்சின் கீழ் வரவேண்டிய சில விடயங்களை துறைமுக மற்றும் கப்பல்துறை அமைச்சின் கீழ் இணைத்து வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டதால் ஏற்பட்ட அதிருப்தியை பக்.25

## தடை தொடரும்!

கொழும்பு, பெப்.2
முன்னைய அரசு புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீதும், தனி நபர்களின் மீதும் விதித்திருந்த தடை, நீக்கப்பட மாட்டாது என்று. தற்போதைய அரசு தெரிவித்துள்ளது.
விடுதலைப்புலிகள் மீண்டெழுவதற்கு உதவுகின்றன என்று தெரிவித்து புலம் பெயர் அமைப்புக்களையும், தனி நபர்களையும் மஹிந்த தலைமையிலான அரசு தடை செய்திருந்தது.
அந்தத் தடை நீக்கப்பட மாட்டாது என்று தற்போதைய அரசின் பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.
தடையை நீக்குவது குறித்து புதிய அரசு ஆலோசிக்கவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

# மைத்திரி–நிஷா இன்று முக்கிய சந்திப்பு





### அமெரிக்காவின் தற்போதைய நிலைப்பாடு குறித்து விரிவாக விளக்குவார்

❝ இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர், அமெரிக்காவின் உயர்மட்ட இராஜதந்திரி ஒருவர் கொழும்புவரும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

கொழும்பு, பெப்ரவரி 2
இரு நாள் பயணம் மேற்கொண்டு இன்று இலங்கை வந்துள்ள தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலர் நிஷா பிஸ்வால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இன்று பேச்சு நடத்தவுள்ளார்.
இந்தப் பேச்சின்போது, இலங்கையில் புதிய அரசு பதவியேற்றதன் பின்னர் அமெரிக்கா கொண்டுள்ள நிலைப்பாடு தொடர்பில் அவர் விரிவாக ஜனாதிபதிக்கு விளக்குவார் என்று தெரியவருகின்றது.
ஜெனிவா விவகாரம், புதிய அரசின் வெளிநாட்டுக்கொள்கை என்பன தொடர்பில் நிஷா பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஜெனிவா தொடர்பில் இலங்கை அரசின் முன்னெடுப்புகள் எத்திசையில் இருக்க வேண்டும் என்று அமெரிக்கா எதிர்பார்க்கின்றது என்பது பக்.25

## ஆளுநர், செயலர் இன்று கடமைக்கு

யாழ்ப்பாணம், பெப். 2
வடக்கு மாகாண ஆளுநராகப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள பளிகக்கார மற்றும் வடக்கு மாகாண பிரதம செயலாளர் பத்திநாதன் இருவரும், இன்று தமது கடமைகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கவுள்ளனர்.
ஜனாதிபதி மைத்திரிபால முன்பாக கடந்த 27 ஆம் திகதி இவர்கள் பதவியேற்றிருந்தனர்.
யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு மாகாண ஆளுநரின் செயலகத்தில், இன்று காலை 8.30 மணிக்கு ஆளுநர் பளிகக்கார தனது கடமைகளை ஆரம்பிப்பார். அதேபோன்று திருநெல்வேலியிலுள்ள பிரதம செயலாளர் அலுவலகத்தில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் பத்திநாதன் இன்று காலை 10.30 மணிக்கு தனது கடமைகளை ஆரம்பிப்பார். (உ–5)

## சர்வதேச தரத்தில் உள்ளக விசாரணை

### வலியுறுத்துகிறார் மூன்

கொழும்பு, பெப். 2
இலங்கையில் இடம்பெற்றது என்று கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் இலங்கை அரசு நடத்தும் விசாரணைகள் நம்பகமானதும் – பொறுப்புக் கூறக் கூடியதும் – சர்வதேச தரத்திலும் அமைய வேண்டும் என்று ஐ:நா. பொதுச் செயலர் பான் கீ–மூன் வலியுறுத்தியுள்ளார்.
இறுதிப் போரில் நடந்ததாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் குறித்து உள்ளக விசாரணைப் பொறிமுறை மூலம் விசாரணை பக்.25

## பதலளிக்க மறுப்பு!

கொழும்பு, பெப்.2
வடக்கில் மீண்டும் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு இரண்டு இராணுவ அதிகாரிகள் ஒரு குழுவுக்குப் பயிற்சிகளை அளித்து வருவதாக, அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறிய குற்றச்சாட்டுத் தொடர்பில் இராணுவப் பேச்சாளர் கருத்து வெளியிட மறுத்துள்ளார்.
வடக்கிலுள்ள இராணுவ முகாம்களின் மீது கற்களை வீசித் தாக்கி, மீண்டும் குழப்ப நிலையை ஏற்படுத்துவதன் மூலம், அடுத்த மூன்று மாதங்களுக்குள் ஆட்சியைப் பிடிக்க கோத்தபாய ராஜபக்ஷ சதித் திட்டம் தீட்டியுள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்திருந்தார். இதன் ஒரு கட்டமாக கோத்தபாய ராஜபக்ஷவுக்கு நெருக்கமான ஒரு பிரிகேடியர் மற்றும் ஒரு கேணல் என இரண்டு இராணுவ அதிகாரிகள் 400இற்கும் அதிகமா பக்.25

## குடாநாட்டுக்கும் வருவார் மோடி

யாழ்ப்பாணம், பெப். 2
இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டு வருகை தரும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி யாழ்ப்பாணத்துக்கும் வருகை தரவுள்ளார். கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.
அதிகாரபூர்வ பயணமாக அடுத்த மாதம் கொழும்பு வருகிறார் பிரதமர் நரேந்திர மோடி. இந்தியப் பிரதமர் ஒருவர் 28 வருடங்களின் பின்னர் இலங்கைக்கு நேரடியாக மேற்கொள்ளும் அதிகாரபூர்வ பயணம் என்று தெரிவிக்கப்படுகிறது. அடுத்த மாதம் 13 ஆம் திகதி வரும் மோடி மூன்று நாள்கள் இங்கு தங்கியிருப்பார். பக்.25

# வல்வைக் கடலில் மீண்டும் இந்திய ட்ரோலர் ஆக்கிரமிப்பு

### வலைகள் அறுத்தெறியப்படுவதாக மீனவர்கள் குமுறல்

யாழ்ப்பாணம், பெப்.2
வல்வெட்டித்துறை கடற்பரப்பிலும் இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளின் ஆக்கிரமிப்பு அதிகரித்துள்ளதால் தாம் மீண்டும் பெரும் பாதிப்புகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்று மீனவர்கள் தெரிவித்தனர்.
நேற்றுமுன்தினம் இரவு நூற்றுக்கு மேற்பட்ட இழுவைப் படகுகள் வந்தன. கரையிலிருந்து கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் அவை சுதந்திரமாக வந்து திரும்பின என்று வல்வெட்டித்துறை ஆதிகோயிலடி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் செயலாளர் மதியழகன் 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது.
எமது சங்கத்தின் கீழ் பக்.25

## நால்வரின் பெயர்கள் தீவிர பரிசீலனையில்

### கிழக்கு முதல்வர் பதவிக்கு

மட்டக்களப்பு, பெப், 2
கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவிக்கு நால்வரின் பெயர்கள் தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. நாளை செவ்வாய்க்கிழமை முடிவு அறிவிக்கப்படும் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.
கட்சியின் தற்போதைய நிலவரப்படி கிழக்கு மாகாண சபை அமைச்சர்களான ஹபீஸ் நஸீர் மற்றும் மன்சூர் ஆகிய இருவரினதும் பெயர்களும் முதலமைச்சுப் பதவிக்காக தீவிரமாகப் பரிசீலிக்கப்படு பக்.25

## பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் 6ஆம் திகதி யாழ். வருகின்றார்

யாழ்ப்பாணம், பெப். 2
பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன, எதிர்வரும் 6ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார். வடக்கின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பில் ஆராய்வதே அவரதுவருகையின்நோக்கம்.
மைத்திரி அரசு பதவியேற்ற பின்னர் மேற்கொள்ளப்படவுள்ள புதிய தேசியப் பாதுகாப்புத் திட்டத்துடன் தொடர்புபட்டதாக வடக்கின் நிலைமை குறித்து அவர் இங்கு ஆராய்வார். மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்படாமல் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் நிலப் பகுதிகளில் மீள்குடியமர்வு குறித்து ஆராய்வதும் அவரது பயணத்தின் ஒரு பகுதியாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.
மறுநாள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா படைத் தலைமையகங்களுக்கும் அவர் செல்வார். அங்குள்ள இராணுவ அதிகாரிகளின் கருத்துக்களையும் கேட்டறிவார். 8 ஆம் திகதி திருகோணமலைக்குச் செல்லும் அவர் கிழக்குப் படைத் தலைமையகத்திலும் இது போன்ற சந்திப்புக்களில் ஈடு படுவார். (உ–5)

## கொழும்பு அரசுடன் மிகவிரைவில் பேச்சு

### இந்திய மீனவர் அத்துமீறல் குறித்து மாகாண அமைச்சு நடத்தும் என்கிறார் அமைச்சர் டெனீஸ்

யாழ்ப்பாணம்.பெப்.2
இந்திய மீனவர்களின்வருகை மற்றும் தடை செய்யப்பட்ட மீன்பிடித் தொழில்களை நிறுத்தக் கோரி கொழும்பு அரசுடன் விரைவில் பேச்சு நடத்தப்படும் என்று வடமாகாண சபையின் மீன்பிடி, போக்குவரத்து, கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.
இந்திய மீனவர்களின் அத்துமீறல் – ஆக்கிரமிப்பு – அதிகரித்துள்ள நிலையில் அதனைக் கட்டுப்படுத்த அமைச்சு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்று அவரிடம் கேட்கப்பட்டது.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
கடற்றொழில் அமைச்சு கொழும்பு பக்.25

# செய்திகள்

## இந்தியப் பிரதமர் அடுத்த மாதம் இங்கு வருகிறார்



புதுடில்லி, பெப். 2

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, அடுத்த மாதம் இலங்கைக்கு பயணம் செய்வார் என்றும், அனேகமாக மார்ச் இரண்டாவது வாரத்தில் இங்கு வருவார் என்றும், ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியப் பிரதமரின் பயணம் குறித்து வெளிவிவகார அமைச்சு இந்த மாதம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதற்கு முன்னதாக, இப்போது சீனாவுக்குச் சென்றுள்ளவெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் அங்கிருந்து கொழும்பு செல்வார் என்றும் அறியப்படுகிறது.

இங்கு, இலங்கை அரச பிரமுகர்களுடன் கலந்தாலோசித்து, மோடியின் பயணத்துக்கான அட்டவணை தீர்மானிக்கப்படும்.

இதேவேளை, இந்தியப் பிரதமரின் பயணத்தின் பின்னர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புதுடில்லிக்கு பயணம் செய்வார் என்றும் அறியப்படுகிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் நரேந்திர மோடியுடன் நடத்தும் பேச்சுக்களின் போது, இனப்பிரச்சினை, தமிழ் நாட்டில் தஞ்சம் அடைந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவது, இரண்டு நாடுகளின் மீனவர்கள் சம்பந்தப்பட்டவிவகாரங்கள் குறித்துப் பேச்சு நடத்துவர் என்று ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தனர். (அ)

# குடிதண்ணீர் பிரச்சினைக்கு தீர்வு வேண்டிப் போராட்டம்

சுன்னாகம் உட்படப் பல பகுதிகளில் கிணற்று நீரில் கழிவு ஒயில் கலந்துள்ளதை அடுத்து, பாடசாலை மாணவர்களுக்கு சுத்தமான, போதிய குடிதண்ணீரை வழங்க வேண்டும் என்றும், இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைத் தரவேண்டும் என்று கோரியும் கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் வியாழக்கிழமை, சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோயிலுக்கு அருகில் இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது என்று இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சுன்னாகம் உள்ளிட்ட பல பகுதிகளிலுள்ள கிணறுகளில் எண்ணெய்க் கழிவு பரவியதனையடுத்து பாடசாலைகளிலுள்ள கிணறுகளிலும்கழிவு ஒயில்கலந்துள்ளது. அதனால் மாணவர்களுக்கு சுத்தமான, போதியளவான தண்ணீர் வழங்க வேண்டும் என்று அரசையும் வடமாகாண சபையையும் வலியுறுத்தி இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. அங்கு ஏற்கனவே குடிதண்ணீர்வழங்கப்படுகின்றபோதும் அது போதுமானதாக இல்லை. பாடசாலைகள் மாத்திரமன்றி ஏனைய இடங்களிலும் அந்தப் பிரச்சினை ஏற்பட்டுள்ளதனால் அதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்."– என்று அவர் தெரிவித்தார். (ற–4)

## மீள்குடியேற்ற அமைச்சர் இன்று யாழ். வருகிறார்

மீள்குடியேற்ற மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் டி.எம். சுவாமிநாதன், அமைச்சுப் பொறுப்பு ஏற்ற பின்னர் யாழ்ப்பாணத்துக்கு இன்று முதல் முதலாக வரவுள்ளார்.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் கும்பாபிஷேகத்தில் பங்கேற்கவே அவர் யாழ்ப்பாணத்துக்குவருகைதரவுள்ளார்.

மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசில், மீள்குடியேற்ற – மீள்நிர்மாண மற்றும் இந்து சமய விவகார அமைச்சராக டி.எம்.சுவாமிநாதன் பொறுப்பேற்றிருந்தார். (ற–5)

# ஆனந்தபுரத்தில் மக்கள் இன்று ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி, பெப்.2

கிளிநொச்சி ஆனந்தபுரம் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்படவுள்ளது.

இந்திய வீட்டுத்திட்டத்துக்குள் தாம் உள்வாங்கப்பட்டிருப்பதாக 2014ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை உறுதிப்படுத்தப்பட்டிருந்தபோதும், வீட்டுக்கான காணி அனுமதிப்பத்திரம் இல்லாத காரணத்தால் வீட்டுத்திட்டம் மறுக்கப்பட்டுள்ளதை கண்டித்தே மேற்படி ஆர்ப்பாட்டம் இடம்பெறுகின்றது.

காலை 9 மணிக்கு கிளிநொச்சி பிரதேச செயலகத்தில் இருந்து ஆரம்பிக்கும் ஆர்ப்பாட்டம் பேரணியாக கிளிநொச்சி கச்சேரிக்கு செல்லும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட 53 குடும்பங்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு தமக்கான காணி அனுமதிப் பத்திரத்தை கோரவுள்ளதுடன் ஆர்ப்பாட்டத்தின் முடிவில் மீள்குடியேற்ற இந்து கலாசார அமைச்சர் சுவாமிநாதனிடம் கிளிநொச்சி அரச அதிபர் கேதீஸ்வரன் ஊடாக மனுவொன்றையும் கையளிக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற–10)

# பொதுத் தேர்தலில் பொதுபல சேனா

எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடுவது குறித்து பொதுபலசேனா அமைப்பு பேச்சை ஆரம்பித்துள்ளது என்று அந்த அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பொதுத்தேர்தலில் பொது பல சேனா போட்டியிடுவது தொடர்பில் பலதரப்பினருடன் பேச்சில் ஈடுபட்டுள்ளோம். பொதுத் தேர்தலில் போட்டியிடுமாறு பல தரப்பிலும் இருந்தும் அமைப்புக்கு அழைப்புக்கள் விடுக்கப்பட்டுள்ளன. இந்த சந்தர்ப்பத்தில் நாம் சிந்தித்து சரியான தீர்மானம் ஒன்றை எடுப்போம். அந்தத் தீர்மானம்சிங்களபௌத்தமக்களுக்கான தீர்மானமாக இருக் கும்"– என்று தெரிவித்தார். (ற–10)

# அதிபர்கள் இடமாற்றத்தை சபையூடாக மேற்கொள்க

## இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 2

7 ஆண்டுகள் ஒரே பாடசாலையில் பணியாற்றிய அதிபர்களின் இடமாற்றங்கள் தொடர்பான பட்டியல் தயாரிக்கப்படுவது மற்றும் இடமாற்றங்கள் வழங்கப்படுவது, இடமாற்றச் சபையினூடாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது.

"இந்த இடமாற்றங்கள் விரைவில் வழங்கப்படவுள்ளன என்று அறிய முடிகின்றது. இத்தகைய இடமாற்றங்கள் இடமாற்றச் சபையினூடாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலனிடம் சங்கம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது"– என அந்தச் சங்கத்தின் பொதுச் செயலர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

"இலங்கை அரசின் தாபன விதிக்கோவை – அத்தியாயம் 3.1, 3.2 இன் அடிப்படையில் இடமாற்றங்கள் யாவும், இடமாற்றச் சபையின் அனுமதியுடனேயே செயற்படுத்தப்பட வேண்டும். அத்துடன், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாப்பினடிப்படையில் அதிபர்களும், ஆசிரியர்களும் இதில் அங்கத்துவம் பெற்றுள்ளனர். எனவே அதிபர் இடமாற்றங்களை, இடமாற்றச் சபையினூடாக மேற்கொள்ளுமாறு கோரியுள்ளனர்."– என்றும் அவர் குறிப்பிட்டார்.

"இடமாற்ற சபையினூடாகவே அதிபர், ஆசிரியர் இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று கல்வி அதிகாரிகளுக்கு ஏற்கனவே தெரியும். எனினும் இடமாற்றம் தொடர்பான பட்டியல் தயாரிப்பு சங்கத்துக்குத் தெரியாமல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு பட்டியல் தயாரிக்கப்பட்டிருப்பின் அந்தப் பட்டியல் நிராகரிக்கப்பட்டு ஆசிரிய தொழிற் சங்கத்தின் அனுமதியுடன் பட்டியல் மீளத் தயாரிக்கப்படவேண்டும்."– என்றும் அவர் குறிப்பிட்டார்.


இது தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளர் சத்தியசீலனுடன் தொடர்பு கொண்டபோதும் தொடர்பு கிடைக்கவில்லை. (ற–4)

# தமிழர்களின் நல்வாழ்வுக்காக யாழில் நேற்றுப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், பெப். 2

தமிழ் மக்களின் நல்வாழ்வுக்கான பிரார்த்தனை நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் இந்து சமய பேரவை மண்டபத்தில் நடைபெற்றது. இலங்கை இந்து அமைப்புக்களின் கூட்டமைப்பின் ஆதரவுடன் இந்து சமயப் பேரவைத் தலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மங்கல விளக்கேற்றல், பூசை வழிபாடுகள், மங்கல இசை ஆராதனை தமிழ் வேத அர்ச்சனைகள் இடம்பெற்றதுடன், துன்பம் தீர வேண்டி தேங்காய் அடித்து நெய்விளக்கேற்றப்பட்டது.

நீண்ட காலம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலைக்காகப் பிரார்த்திக்கப்பட்டதுடன், மக்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியேறவும் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதுடன் அனைத்து மக்களும் சமாதானமாக வாழவும், போர் முடிவுற்று ஆறு ஆண்டுகளில் இப்போது ஏற்பட்டுள்ள மாற்றம் மக்களுக்கு மகிழ்ச்சியான வாழ்வைத் தரவேண்டும் என்பதற்காக இந்தப் பிரார்த்தனை நடத்தப்பட்டது.



நிகழ்வில் ஆசியுரையை சுவாமி ஜாக்திரத சைதன்யா வழங்கினார். தலைமையுரையை பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் வழங்கினார்.

அதில், "அண்மைக்காலத்தில் ஏற்பட்ட போரின் சோதனைகள் மக்களின் வாழ்க்கையைச் சீர்குலைத்துவிட்டது. முறைப்படி நீண்டகாலமாக சிறையில் இருக்கும் தமிழர்களை விடுவிக்க இந்து சமய அமைப்புக்கள் கோரிக்கை விடுத்து வந்தன. அவர்களது விடுதலை துரிதப்படுத்தப்பட வேண்டும்.

இடம்பெயர்ந்து பாதிக்கப்பட்டுள்ள எமது சமுதாயம் எல்லாவற்றையும் இழந்து துன்பத்தில் ஆழ்ந்துள்ளது. நாட்டில் சட்டம் ஒழுங்கு நல்வாழ்வுக்காக இந்து அமைப்புக்கள் இந்த பிரார்த்தனையை முன்னெடுத்தன. பெருமளவு மக்கள் பிரார்த்தனையில் கலந்து கொண்டுள்ளனர். நாங்கள் நம்பிக்கையுடன் உள்ளோம். இந்துக்களின் அடையாளம் பேணப்பட வேண்டும். சர்வதேச இந்துக்களும் எமது கோரிக்கைக்கு இணைந்து செயற்பட வேண்டும்"– என்று தெரிவித்தார்.

நிகழ்வில் இந்து சமயப் பேரவைச் செயலாளர் சக்தி கிரீவன், சமாதான நீதிவான் ச.சற்குணராஜா, கலாபூசணம் கு.சரவணபவானந்தன், யோ. துஷ்யந்தன் ஆகியோரும் உரையாற்றினார்கள். (ற–7)

தலையில பேன் இல்லாத
பொண்ணுங்கள கூட பார்க்கலாம்,



ஆனா கையில போன் இல்லாத
பொண்ணுங்கள பார்க்க முடியாது...!

ஐயோ.. மனச..தளர விடாதீங்க.. கண்கலங்காதீங்க...
கவலைப்படாதீங்க மாமா... உங்க பொண்ணை நான் கண்
கலங்காம பார்த்துக்கிறேன்...!



அட நீங்கவேற மாப்பிள்ளை...! நான் கவலைப்படறது,
பாவம்.. உங்களுக்காகத்தான்...! ம்ம்ம்...நாங்க
தப்பிச்சோம்...நீங்க...என்ன பாடுபடப் போறீங்களோ..

# மீண்டும் மாணவனாக விஜய்



சிம்புதேவனின் 'புலி' படத்தில் பிசியாக நடித்து வருகிறார் விஜய். ஹன்சிகா, ஸ்ருதிஹாசன், சுதீப் நடித்து வரும் இந்தப்படத்தில் விஜய் இரட்டை வேடத்தில் நடித்து வருகிறார். தேவி ஸ்ரீ பிரசாத் இசையில் படத்தின் வெளியீட்டுக்கு முன்பே விநியோக ரீதியிலும் சூடு பிடிக்க துவங்கியுள்ளது. 'புலி' கோடை கால விடுமுறை கொண்டாட்டமாக வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் படத்துக்கு அடுத்து விஜய் அட்லீ இயக்கத்தில் நடிப்பார் என முன்பே அறிவிக்கப்பட்டது போல் 'புலி' படத்தின் படப்பிடிப்புகள் முடிவுக்குப் பிறகு இந்தப் படம் தொடங்கவுள்ளது.

'நண்பன்' படத்தில் கல்லூரி மாணவனாக நடித்த விஜய், இந்தப் படத்திலும் கல்லூரி மாணவனாக நடிக்க இருப்பதாக தகவல்கள் கசிந்துள்ளன. படத்தின் ஹீரோயின் , மற்ற தொழில்நுட்பக் கலைஞர்கள் குறித்து இன்னும் தகவல்கள் வெளியாகவில்லை. அட்லீ என்பதால் இந்தப் படத்தில் நயன்தாராவின் பெயரும் அடிபடுவதாக சினிமா வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# காதல் பசி



அன்பே நீ வடை,
நான் தான் சட்னி தொட,
அன்பே நீ பஜ்ஜி,
பண்ணவா நான் எச்சி,
அன்பே நீ முறுக்கு,
எனக்கு உன் மேல கிறுக்கு.
அன்பே நீ போண்டா,
ஆகாத காண்டா.
அன்பே நீ மசால் டீ,
எப்போ என் பொண்டாட்டி?
அன்பே நீ இட்லி,
உன் அண்ணன் தான் ஜெட்லி,
அன்பே நீ தோசை,
இது அடங்காத ஆசை,
அன்பே நீ அப்பம்,
ஒன்னா வாழ்ந்து பாப்போம்,
அன்பே நீ பரோட்டா,
பொண்ணு கேட்டு வரட்டா?
அன்பே நீ பூரி,
இத படிச்சுட்டு துப்பாத காரி,
*மொத்தத்தில் நீ கையேந்தி பவன்,*

# கொஞ்சம் சிரிங்க பாஸ்...

**கணவன்:** 'அம்மாவுக்கு உடம்பு சரியில்லையாம்... பணம் அனுப்பச் சொல்லி லெட்டர் போட்டிருக்காங்க...'
**மனைவி:** 'சுக்கு காய்ச்சி குடிக்கச் சொல்லுங்க... எல்லாம் சரியாப்போயிடும்.'
**கணவன்:** 'நீ சொல்றதும் சரிதான்.... நீ சொன்னபடியே உங்கம்மாவுக்கு எழுதிப் போட்டுர்றேன்.....'
மனைவி:–???????????

**காக்கா என்னதான் கறுப்பா இருந்தாலும் அது போடுற முட்டை வெள்ளை கலர் தான்....**

**முட்டை என்னதான் வெள்ளையா இருந்தாலும் உள்ள இருக்கிற காக்கா கறுப்புத்தான்..**



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேண்டிய உதவிகள் மேலதிகாரிகள் மூலம் கிடைக்கும். பொறுப்புக்கள் கூடும். சிலருக்கு எதிர் பார்த்த பதவி உயர்வும் கிடைக்கக்கூடும்.

**இடபம்:** உஷ்ண சம்பந்தமான நோய்வரக்கூடும். எச்சரிக்கையாக இருப்பதன் மூலம் அதைத் தடுக்க லாம். வீண் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்:** மனதில் உற்சாகம் பிறக்கும். தேவை யான உதவிகளும் கிடைக்கும். பொறுப்புக்கள் அதிக ரிக்கும். கல்வியில் முன்னேற்றமடைய தேவையான உதவிகள் கிடைக்கும்.

**கடகம்:** கவனமாக இருப்பது நல்லது. எதிர்ப்பு களைச் சமாளிக்கும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான செலவுகள் கூடும். கூட்டு தொழில் செய்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள்.

**சிங்கம்:** உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் வேலைச் சுமை இருக்கும். எப்படியும் செய்து முடித்து நல்ல பெயர் வாங்கி விடுவீர்கள். குடும்பத்தில் நல்ல காரியங்கள் நடக்கும். நிம்மதி ஏற்படும்.

**கன்னி:** உறவினர்கள் வருகையும் அவர்களால் உதவியும் கிடைக்கப் பெறுவீர்கள். பெண்களுக்கு வீண் அலைச்சலும், எதிர்பாராத செலவும் ஏற்படும். கவனம் தேவை.

**துலாம்:** துன்பங்கள் நீங்கி வாழ்க்கையில் இன்பம் உண்டாகும். நினைத்த காரியத்தைச் செய்து முடிப்பதில் வேகம் காட்டுவீர்கள். உடைமைகளை கவனமாகப் பாதுகாத்துக் கொள்வது நல்லது.

**விருச்சிகம்:** எதிரிகளும் நண்பராவார்கள். வேலையில் முன்னேற்றம் உண்டாகும். உங்களுக்கு பின்னால் உங்களைப் பற்றி புறம் பேசியவர்கள் உங்களிடம் சரண் அடைவார்கள்.

**தனுசு:** எதிர்பார்த்த காரிய வெற்றி உண்டாகும். உங்களுக்கு வரும் முன்கோபத்தை தவிர்ப்பது முன்னேற்றத்துக்கு உதவும். புதிய நண்பர்கள் சேர்க்கையும் ஏற்படும்.

**மகரம்:** எதிர்ப்புகள் நீங்கும். தொழில் வியாபாரம் சிறிது மந்தமான நிலையில் காணப்பட்டாலும், வருமா னம் குறையாத நிலை இருக்கும். உத்தியோகத்தில் இருப் பவர்களுக்கு வெளியூர் மாற்றங்கள் உண்டாகலாம்.

**கும்பம்:** சக ஊழியர்களிடம் பேசும்போது கோபப் படாமல் இருப்பது நன்மை தரும். குடும்ப உறுப் பினர்களிடம் இருந்த் மனத்தாங்கல் நீங்கி மகிழ்ச் சியும், சகஜ நிலையும் காணப்படும்.

**மீனம்:** கோபத்தைத் தவிர்ப்பது நல்லது. உங்களை எல்லோரும் நேசிப்பார்கள். எதிர்ப்புகள் நீங்கி எதிலும் உற்சாகம் உண்டாகும். நண்பர்கள் சேர்க் கையும் அவர்களால் உதவியும் கிடைக்கும்.

# செய்திகள்

## மருதடி விநாயகர் ஆலயத்துக்கு கலாசார உடையுடன் வருக

### தர்மகர்த்தா சபையினர் அறிவுறுத்தல்

வலி.தென்மேற்கு, பெப். 2
மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்துக்கு பெண்கள் கலாசார உடை அணிந்து வருமாறு தர்மகர்த்தா சபையினர் அறிவுறுத்தியுள்ளனர்.
தர்மகர்த்தா சபையினரின் புதிய நடைமுறையினால் பிள்ளையாருக்கு எண்ணெய்க் காப்பு சாத்த ஆவலுடன் கோயிலுக்குச் சென்ற நூற்றுக்கணக்கான இளம் பெண்கள் ஆலயத்துக்குள் செல்ல முடியாமல் வீதியில் நிற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.
மானிப்பாய் விநாயகர் ஆலயம் சுமார் 25 கோடி ரூபா செலவில் வடிவமைக்கப்பட்டு இன்று திங்கட்கிழமை மகாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. அதையடுத்து நேற்றும் நேற்று முன்தினமும் எண்ணெய்க் காப்பு சாத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன.
பத்து வருடங்களுக்கு மேலாக விநாயகரைத் தரிசிக்க முடியாமல் கவலையடைந்திருந்த அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததை அடுத்து யாழ். மாவட்டத்திலிருந்து மட்டுமல்ல வெளி மாவட்டங்களிலிருந்தும் நூற்றுக்கணக்கான அடியார்கள் ஆலயத்துக்கு வந்திருந்தனர்.
எதுவித முன்னறிவித்தலும் இன்றி சல்வார் அணிந்து கொண்டு ஆலயத்துக்குச் செல்ல வேண்டும் என்று தர்மகர்த்தா சபையினர் திடீரென தெரிவித்ததை அடுத்து ஆலயத்துக்கு வருகை தந்த நூற்றுக்கணக்கான பெண்கள் ஆலயத்துக்குள்ளே செல்ல முடியாமல் வீதியில் மணிக்கணக்கில் காத்து நின்று வீட்டுக்குத் திரும்பிச் சென்றனர். (வ–115)

## ரூபா 30 மில். செலவில் துணுக்காயில் பாற்பண்ணை

முல்லைத்தீவு, பெப்.2
முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் அனிஞ்சியன் குளம் பகுதியில் குறித்தொதுக்கப்பட்ட நிதியில் 30 மில்லியன் ரூபா செலவில் பாற்பண்ணை அமைக்கப்பட்டுள்ளதாக வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள பணிப்பாளர் எஸ்.வசீகரன் தெரிவித்தார்.
இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;
வடமாகாணத்தில் அமைந்துள்ள முதலாவது பாற்பண்ணை இதுவாகும். இங்கு முதற்கட்டமாக பிற மாவட்டங்களில் இருந்து 25 நல்லின பசுக்களைக் கொண்டுவந்து, அவற்றின் கன்றுகளை பண்ணையாளர்களுக்கு விநியோகிக்கும் திட்டத்தை மேற்கொண்டு வருகின்றோம்.
அவற்றில் இருந்து பெறப்படும் பாலை துணுக்காய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தில் உள்ள பால் பதனிடும் சங்கத்துக்குக் கொடுத்து வருகின்றோம். இந்த வருடம் இந்த பால் பாற்பண்ணையில் பால் பதனிடும் திணைக்களம் அமைப்பதோடு பால் உற்பத்திப் பொருள்களைத் தயாரித்து விநியோகிக்க வுள்ளோம்.
அத்துடன் இங்கு பண்ணையாளர்களுக்கு செயல்முறை பயிற்சிகள் வழங்குவதற்கும் தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் கூறினார். (வ)

## இரு வார காலம் அவகாசம் தேவை

### கூட்டுறவு பணியாளருக்கான சம்பள உயர்வு தொடர்பில் விவசாய அமைச்சர் கேட்டுள்ளார்

யாழ்ப்பாணம், பெப். 2
வடமாகாணத்தில் உள்ள கூட்டுறவுப் பணியாளர்களுக்கான முப்பது வீத அடிப்படை சம்பள உயர்வை நடைமுறைப்படுத்துவதற்கு குறைந்தது இரு வார கால அவகாசம் தருமாறு வடமாகாண விவசாய மற்றும் கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கேட்டுள்ளார்.
வட மாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்தின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை அமைச்சின் அலுவலகத்தில் அமைச்சர் பொ.ஐங்கரநேசனைச் சந்தித்து கூட்டுறவு பணியாளர்களுக்கான சம்பள உயர்வு குறித்து கலந்துரையாடினர். பணியாளர்களுக்கான 30 வீத அடிப்படைச் சம்பள உயர்ச்சிக்கான நகல் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பள உயர்ச்சி இந்த ஆண்டின் ஜனவரி மாதம் தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும்.
தற்போது தயாரிக்கப்பட்ட இந்த முப்பது வீத சம்பள உயர்ச்சிக்கான சுற்றறிக்கையை விரைவில் வெளியிடவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
குறிப்பாக இன்னும் 2 வாரங்களில் இந்த புதிய சுற்றறிக்கை வெளியிடப்படும். அதுவரைக்கும் எந்தவித தொழிற்சங்க போராட்டங்களிலும் ஈடுபட வேண்டாம் என்றும் கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்திடம் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.
அமைச்சரை சந்தித்த கையோடு கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்தின் அவசர கூட்டம் ஒன்று நடைபெற்றது.
வட மாகாண விவசாய மற்றும் கூட்டுறவு அமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்க தொழிற்சங்க போராட்டம் எவற்றையும் நடத்துவது இல்லையென்று முடிவு எடுக்கப்பட்டது. எனினும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களிலுள்ள தொழிற்சங்க உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து இந்தச் சம்பள உயர்வை நடைமுறைப்படுத்தாவிட்டால் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு பின்னர் தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்று கூட்டத்தில் வலியுறுத்தி கூறினார்கள்.
இதன்காரணத்தால் இந்த தொழிற்சங்க போராட்டத்தை வடமாகாண கூட்டுறவு அமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்க 2 வாரத்துக்கு பிற்போடவும் கூட்டத்தின் முடிவில் தீர்மானிக்கப்பட்டதாக தொழிற்சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (வ–17)



தற்போது தயாரிக்கப்பட்ட இந்த முப்பது வீத சம்பள உயர்ச்சிக்கான சுற்றறிக்கையை விரைவில் வெளியிடவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## கைதடி முதியோர் இல்லத்தில் மகிழ்வூட்டல் அரங்கு

யாழ்ப்பாணம், பெப்.2
கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோர்களின் வசதி கருதி மகிழ்வூட்டல் அரங்கு ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.
இல்ல வளாகத்தில் உள்ள கட்டடங்களில் ஒன்றே இந்த மகிழ்வூட்டல் அரங்காக மாற்றப்பட்டு வருகின்றது. இதற்கென இந்த அரங்குக்கு அகலத்திரை, ஒளி, ஒலி மற்றும் குளிரூட்டி வசதி என்பன ஏற்படுத்தப்படவுள்ளன.
இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோர்களின் பொழுதுபோக்கு மற்றும் அவர்களின் ஆற்றல் விருத்திக்காகவே மகிழ்வூட்டல் அரங்கு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த மகிழ்வூட்டல் அரங்கை விரைவாக திறந்து வைப்பதற்கு முதியோர் இல்ல நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. (வ–17)

## ஐ.தே.கவின் ஊழல்களை அம்பலமாக்கத் திட்டம்

### போடுகின்றனராம் சுதந்திரக் கட்சியினர்

கொழும்பு, பெப்.2
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஊழல் மோசடிகளை அம்பலப்படுத்த சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
ஐக்கிய தேசியக் கட்சியினர் எம்மை விளையாட்டுப் பொருளாக நினைத்து செயற்பட்டு வருகின்றனர் என முன்னாள் அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.
"எங்கள் அனைவரையும் திருடர்களாக ஐக்கிய தேசியக் கட்சியினர் சித்திரிக்கின்றனர். எமக்கு எதிராகக் கடுமையான சேறுபூசல்கள் இடம்பெற்று வருகின்றன. நாமும் அவர்களின் ஆவணங்களை எடுத்துக்கொண்டு கையூட்டல் மற்றும் மோசடி தவிர்ப்பு பிரிவுக்குச் சென்று முறைப்பாடு செய்ய வேண்டும்" – என்று டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.
அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் சந்தித்துப் பேசிய போது, இதனைக் குறிப்பிட்டுள்ளனர். குற்றச்சாட்டுக்கள் இருந்தால் நீங்கள் என்ன தூங்குகின்றீர்களா அவற்றை ஊடகங்களுக்கு வெளிப்படுத்துங்கள் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.
அதற்காகத்தான் தேசிய நிறைவேற்றுப் பேரவை அமைக்கப்பட்டுள்ளது. குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் முறைப்பாடு செய்யுங்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். (ற)

## ஜனாதிபதி செயலக வாகனம் மீட்பு

கொழும்பு, ஜன.2
ஜனாதிபதி செயலகத்துக்குச் சொந்தமானதெனச் சந்தேகிக்கப்படும் மேலும் ஒரு ஜீப் சிலாபம் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
வாகனம் பழுது பார்க்கும் நிலையம் ஒன்றில் மறைக்கப்பட்டிருந்த நிலையில், ஜீப்பை பொலிஸார் கண்டு பிடித்துள்ளனர்.
நேற்றுமுன்தினம் இரவு மீட்கப்பட்ட இந்த ஜீப் லாண்ட் ரோவர் ரக வாகனம் என்றும் அதன் இலக்கம் 32–5262 என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
சிலாபம், ஆரியகம பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் குறித்த ஜீப் வண்டியை வாகனம் பழுது பார்க்கும் நிலையத்துக்குக் கொண்டு வந்து ஒப்படைத்ததாக அதன் உரிமையாளர் தெரிவித்தார். சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணையை சிலாபம் பொலிஸார் மேற்கொள்கின்றனர். (ற)

## வீரவன்ஸவை தேர்தல் கூட்டில் இணைக்க எதிர்ப்பு


எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் விமல் வீரவன்ஸவின் தேசிய சுதந்திர முன்னணி மற்றும் உதய கம்மன்பில ஆரம்பித்துள்ள புதிய கட்சியை இணைத்துக் கொள்வது தொடர்பில் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாக சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
விமல் வீரவன்ஸ ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை விமர்சித்து வருவது மற்றும் உதய கம்மன்பிலவை கூட்டணியில் இணைத்து கொள்வ தில் ஜாதிக ஹெல உறுமய காட்டி வரும் எதிர்ப்பு என்பன இதற்கான காரணங்கள் எனக் கூறப்படுகிறது.
இதனிடையே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் இடதுசாரி கட்சிகளுடன் இணைந்து தேர்தலில் போட்டியிட ஜனாதிபதி இணக்கம் வெளியிட்டுள்ளார் என்று கூறப்படுகிறது. (ற)



# கடற்றொழில், விவசாயத்தில் அதிகமானோர் ஆர்வம்

## மண்ணெண்ணெய் விலை குறைப்பால்

யாழ்ப்பாணம், பெப்.2
மண்ணெண்ணெயின் விலை மேலும் குறைப்புச் செய்ததையிட்டு விவசாயிகள் மற்றும் கடற்றொழிலாளர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.
தற்போது மண்ணெண்ணெயின் விலைக் குறைப்பால் கடற்றொழில் மற்றும் விவசாயத்தில் கூடுதலானோர் ஈடுபடத்தயாராகி வருகின்றனர். இந்த விலைக் குறைப்பால் சிறு தொழில் வருமானம் அதிகரிக்கலாம் என்றும் எதிர்வு கூறப்பட்டது.
அத்தியாவசிய பொருள்களில் ஒன்றான இந்த மண்ணெண்ணெயின் விலைக் குறைப்பால் அதன் நுகர்வு மேலும் அதிகரித்துள்ளது. எரிபொருள் விற்பனை நிலையங்களிலும் அதன் விற்பனை மேலும் அதிகரிப்பதாக முகாமையாளர்கள் தெரிவித்தனர். மஹிந்த அரசின் கீழ் இந்த மண்ணெண்ணெய் முன்னர் லீற்றர் 106 ரூபாவாக விற்கப்பட்டது.
பின்னர் அந்த மண்ணெண்ணெய் ஜனாதிபதித் தேர்தலைப் பயன்படுத்தி திடீரென 20 ரூபாவால் குறைந்து 86 ரூபாவாக விற்கப்பட்டது. பின்னர் 5 ரூபாவாக குறைக்கப்பட்டு 81 ரூபாவாகவிலைநிர்ணயிக்கப்பட்டது.
தற்போது புதிய அரச பதவியேற்ற கையோடு முதலில் எரிபொருளில் கைவைத்து அதனை



அதிரடியாக விலைக் குறைப்புச் செய்ய மண்ணெண்ணெய் லீற்றர் 16 ரூபாவால் குறைந்து லீற்றர் 65 ரூபாவாக விற்கப்பட்டது.
மீண்டும் அத்தியாவசிய பொருள்களின் விலைக் குறைப்பில் மண்ணெண்ணெய் லீற்றர் 6 ரூபாவால் குறைக்கப்பட்டு தற்போது 59ரூபாவாக விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் மஹிந்த அரசின் கீழ் இந்தமண்ணெண்ணெய் இரட்டிப்பாக விலை நிர்ணயிக்கப்பட்டிருந்த காரணத்தால் மண்ணெண்ணெயின் நுகர்வு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்ததோடு விவசாயம், கடற்றொழில் மற்றும் சிறு கைத் தொழில் என்பனவும் பாதிக்கப்பட்டிருந்தன. (வ–17)

# வீட்டுத்திட்டப் பணிகள் அரியாலையில் மும்முரம்

கொழும்புத்துறை, பெப். 2
அரியாலை, நாவலடி மற்றும் அரியாலை கிழக்குப் பகுதிகளில் இந்திய வீட்டுத்திட்டப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. இரு கிராமங்களிலும் 60இற்கு மேற்பட்ட வீடுகள் தலா 5இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருவதாக வீட்டுத்திட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.
நாவலடிப் பகுதியில் 26 வீடுகளும் கிழக்கு அரியாலையில் 35 இற்கு மேற்பட்ட வீடுகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.
ஏற்கனவே இப்பகுதிகளில் 50 இற்கு மேற்பட்ட இந்திய உதவித் திட்ட வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுப் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
அதேவேளை அரியாலை பூம்புகார் கிராமத்தில் குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு இதுவரை காணிகளுக்கான உறுதிகள் வழங்கப்படாமையால் வீட்டுத் திட்ட உதவிகளைப் பெற முடியாதுள்ளதாக அந்தப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (வ–135)



# சங்கானை மருத்துவமனைக்கு சக்கர நாற்காலிகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், பெப்.2
ஜேர்மனிய நாட்டு புலம் பெயர் தமிழ் மக்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட சக்கர நாற்காலிகள் சங்கானை மருத்துவமனைக்கு வழங்கப்பட்டன.
வலி.மேற்கு பிரதேசத்தில் வலி மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சங்கானை மருத்துவமனைப் பொறுப்பதிகாரி மருத்துவ கலாநிதி பிரகாசன் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினரும் தற்போதய வடமாகாண சபை உறுப்பினருமான தர்மலிங்கம். சித்தார்த்தன், ஜேர்மன் நாட்டிலிருந்து வருகை தந்த சபாரட்ணம் ஜெயகுமார் (சாமியார்), திருமதி ஜெயகுமார் வசந்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.
குறித்த மருத்துவமனைச் செயற்பாடுகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பில் மேற்படி குழுவினர் ஆராய்ந்ததுடன் சிறு வேலைத்திட்டங்கள் தொடர்பில் தாம் உதவுவதாகவும் தெரிவித்துள்ளனர்.
இதேவேளை, மருத்துவமனை பொறுப்பு மருத்துவரது கோரிக்கைகளில் ஒன்றான கழிவுகள் போடுவதற்கான பிளாஸ்ரிக் பெட்டிகளைக் கொள்வனவு செய்யும் பொருட்டு மருத்துவமனை நலன்புரி சங்கத்துக்கு வழங்குவதற்கென சிறுதொகைப் பணத்தையும் ஜேர்மன் நாட்டின் தமிழ் உறவுகள் தொடர்பில் சபாரட்ணம். ஜெயகுமார் (சாமியார்) வழங்கினார். (வ)

# சட்டவிரோத மண் அகழ்வு தடுக்கப்படுமா?

## கேள்வி எழுப்பும் அரியாலை மக்கள்

கொழும்புத்துறை, பெப். 2
அரியாலைப் பகுதியில் சட்டவிரோத மண் அகழ்வு இரவு வேளைகளில் தொடர்ந்து நடைபெறுவதாக அந்தப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.
இரவு நேரங்களில் தனியார் காணிகள், தரவைகளில் அகழப்படும் மணல் குறிப்பிட்ட சில இடங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டுப் பின்னர் விற்பனை செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது.
இவ்வாறான சட்டவிரோத மணல் அகழ்வால் அந்தப் பகுதியின் இயற்கைச் சூழல் மாறுபடுவதுடன் கடல்நீர் கிராமங்களுக்குள் உட்புகுந்து நிலக்கீழ் நீரை உவராக்கும் அபாயம் தோன்றக் கூடிய வாய்ப்புக்கள் தென்படுகின்றன. அத்துடன் நெல் வயல் நிலங்களும் உவர்த் தன்மையடையும் ஆபத்தும் காணப்படுகின்றது.



அந்தப் பகுதியில் உள்ள மணல் கனிய வளம் பெரும்பாலும் தனியாருக்குச் சொந்தமானவையாக உள்ளது. போர்ச் சூழலுக்கு முன்னர் இவற்றை காணி உரிமையாளர்கள் விற்பனை செய்து வந்தனர்.
தற்போது நில உரித்துடையோர் வெவ்வேறு இடங்களில் உள்ளதால் சட்டவிரோதமாக மணல் அகழப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.
இது விடயத்தில் பிரதேச சபை நிர்வாகம் கவனம் எடுத்து கட்டடத் தேவைகளுக்கு உத்தரவுப் பத்திரங்கள் மூலம் மணலைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதன் வழியாக யாழ்ப்பாண பகுதியின் கட்டடட நிர்மாணப் பணிகளுக்கான மணல் தேவையை ஓரளவு பூர்த்தி செய்ய முடிவதுடன் சுற்றுச் சூழலையும் பாதுகாக்க வழி ஏற்படும் என்று சமூக ஆர்வலர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். (வ–135)

# தென்மராட்சியில் ஜனவரியில் 52 பேர் டெங்கால் பாதிப்பு

தென்மராட்சி, பெப். 2
தென்மராட்சி பிரதேசத்தில் ஜனவரி மாதத்தில் 52பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத் திணைக்கள புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.
மருத்துவமனைகளில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் பிரகாரம் நேற்று முன்தினம் நண்பகல் வரையான காலப்பகுதியில் டெங்கால் 52 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.
பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் பாதிக்கப்பட்ட நோயாளர் வசிக்கும் இடங்களில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டதாகவும், டெங்கால் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் யாழ். மாநகர சபைப் பகுதியில் உள்ள தனியார் கல்வி நிலையங்களில் கல்வி பயிலும் மாணவர்கள் மற்றும் உறவினர் வீடுகளில் தங்கியிருந்தோர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ–9)

# பண்பாட்டுக்கு ஏற்றவாறு கலாசார விழுமியங்களைப் பாதுகாப்பது கடமை

## யாழ். ப.நோ.கூ. சங்கத் தலைவர் கருத்து

யாழ்ப்பாணம், பெப். 2
தற்போதைய சூழ்நிலையில் தமிழ்பண்பாட்டுக்கு ஏற்றவகையில் நாம் சமூக கலாசார விழுமியங்களைப் பாதுகாப்பது முக்கிய கடமையாகும். அதிகரித்துச் செல்லும் இந்தக் கலாசார சீரழிவுகளைத் தடுப்பது மக்களின் தார்மிக கடமையாகும்.
அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் காந்தியம் பத்திரிகையை வெளியிட்டு வைத்து உரையாற்றும்போது யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் மு.ஜெ. சுஜிந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறுகையில்;
"இன்றைய கலாசாரத்தின் தேவைக்கேற்ப மக்களுக்கான சமூகப்பணி என்பது முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்த சமூகப் பணி மூலம் மக்களுக்கு சிறந்த சேவையை நாம் வழங்க வேண்டும்.
இந்தப்பணிக்கு சகலரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும். தற்போதைய சூழலில் எமது தமிழர் பிரதேசங்களில் தேவையற்ற கலாசார சீரழிவுகள் தினம் தினம் தலைதூக்கி செல்கின்றன. இந்த கலாசார சீரழிவுகள் தினமும் அரங்கேறிச் செல்வதை மக்கள் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.
இவற்றை எல்லாம் நாம் அடியோடு பிடுங்கித் தடுத்து நிறுத்த சமூகசேவை மன்றங்கள் முன்வர வேண்டும். இந்தசமூகசேவைகள் மன்றங்களை எதிர்காலத்தில் பலப்படுத்தி அவற்றின் மூலம் மக்களுக்கு சிறந்த சேவைகள் ஆற்றவேண்டும். குறிப்பாககாந்தி சேவா சங்கம் கூட மக்களுக்கு சிறப்பான சேவையாற்ற முன் வர வேண்டும்"—என்றார். (வ–17)

# செய்திகள்

## அம்புலன்ஸ்களுக்கு ஜி.பி.ஆர்.எஸ் கருவிகள்

யாழ்ப்பாணம், பெப்.2

வடமாகாண சுகாதார அமைச்சால் மருத்துவமனைகளில் உள்ள அம்புலன்ஸ்களுக்கு ஜி.பி.ஆர். எஸ். கருவிகள் நேற்று முன்தினம் பொருத்தப்பட்டன.

அம்புலன்ஸ்களின் சேவை அனைத்து மருத்துவமனைகளில் உள்ள நோயாளர்களுக்கு வினைத்திறன் மிக்க வகையில் கிடைக்கக் கூடியதாக அவற்றின் வருகையைக் கண்காணிக்கும் கருவிகள் பொருத்தப்பட்டன.

இந்தக் கருவி பொருத்தப்பட்டதால் ஒரு மருத்துவமனையிலிருந்து மற்றொரு மருத்துவமனைக்கு நோயாளர்களை ஏற்றிக் கொண்டு வரும் அம்புலன்ஸ் அதே மார்க்கத்தில் உள்ள ஏனைய மருத்துவமனைகளில் தங்கியுள்ள நோயாளர்களையும் ஏற்றிச் செல்லக் கூடிய வாய்ப்பு உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# பாடசாலை செல்லும் மாணவருக்கு கைபேசி கொடுப்பதைத் தவிர்க்குக

## கால்கோள் விழாவில் பெற்றோருக்கு ஆலோசனை வழங்கினார் சாவகச்சேரி வணிகர் மன்றத் தலைவர்

தென்மராட்சி, பெப்.2

மாணவர்கள் பல்கலைக்கழகம் அல்லது உயர்கல்வி நிலையங்களுக்குச் செல்லும் வரை அவர்களுக்கு கையடக்கத் தொலைபேசி வாங்கிக் கொடுப்பதை பெற்றோர் நிறுத்த வேண்டும். பிள்ளைகளுக்கு சிறுவயதில் தொலைபேசிகளை வாங்கிக் கொடுப்பதால் அவர்கள் கற்றல் மற்றும் இணைப்பாட விதானங்களில் கவனம் செலுத்துவது குறைந்து விடுகிறது.

இவ்வாறு தெரிவித்தார் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ்.

கையடக்கத் தொலைபேசிப் பாவனையை மாணவர்கள் பாடசாலை நேரங்களில் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ள போதிலும் மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களுக்கு அவற்றைக் கொண்டு செல்வதைக் காண முடிகிறது. பிள்ளைகளின் எதிர்காலக் கல்வி நிலையைக் கருத்தில் கொண்டு பெற்றோர்கள் அவர்களுக்கு கையடக்கத்தொலைபேசி வாங்கிக் கொடுப்பதை நிறுத்த வேண்டும்.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் இடம்பெற்ற தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

கணினியும் கையடக்கத்தொலைபேசியும் நன்மைதரும் பல விடயங்களுக்காக உருவாக்கப்பட்டவை. தற்போதைய பெற்றோர் பலருக்கு கணினியையோ தொலைபேசியையோ முழுமையாக இயக்கத் தெரியாது. ஆனால் வீட்டில் உள்ள அவர்களது 4 வயதுப் பிள்ளைக்கு அவற்றின் செயற்பாடுகள் அனைத்தும் தெரியும். இது விஞ்ஞான வளர்ச்சிக்கு எடுத்துக் காட்டாக இருந்த போதிலும், அதனைப் பயன்படுத்தும் முறைகளிலேயே மாணவர்கள் தவறிழைக்கின்றனர்.

ஐந்துவயது சிறுவனிடம் தொலைபேசியைக் கொடுத்தால் அதில் உள்ள பல்வேறு வகையான விளையாட்டுக் காட்சிகளை மணிக்கணக்கில் பார்க்கின்றான். இதே தொலைபேசியை கட்டிளம் பருவ மாணவர்களிடம் கொடுத்தால் அதில் உள்ள தேவையற்ற காட்சிகளைப் பார்க்கின்றனர்.

ஓர் இடத்தில் அமர்ந்திருந்து இவ்வாறான காட்சிகளைப் பார்ப்பதால் மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளிலும் இணைப்பாடவிதானங்களிலும் கவனம் செலுத்தாமல் விட்டு விடுகின்றனர்.

உரிய காலத்தில் கல்வி புகட்டும் பணி ஆசிரியர்களைச் சார்ந்த தென்ற போதிலும், அதற்குப் பெற்றோர்களாகிய நாங்களும் பங்களிப்புச் செய்தாலே எதிர்காலத்தில் வளமான நற்பிரஜைகளாக எமது பிள்ளைகளை உருவாக்க முடியும்" என்றார்.

## இருளில் மூழ்கும் கேரதீவு ஏ-32 வீதி

சாவகச்சேரி, பெப்.2

சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி உப எல்லைக்கு உட்பட்ட நாவற்குழி– கேரதீவு ஏ–32 பிரதான வீதி இரவு வேளையில் இருட்டில் மூழ்கியுள்ளது. அந்த வீதியில் போதியளவு வீதி விளக்குகள் பொருத்தப்படாமல் உள்ளதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

அந்த வீதியால் தற்போது பெருமளவு வாகனங்கள் மற்றும் பொதுமக்களின் போக்குவரத்து அதிகமாகி உள்ளன. குறித்த வீதியில் ஏற்கனவே பொருத்தப்பட்ட ஒருசில வீதி விளக்குகளும் ஒளிராது காணப்படுகின்றன. எனவே குறித்த பிரதான வீதியில் 3 மின் கம்பங்களுக்கு ஒரு வீதி விளக்குகளையாவது பொருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கை மின்சார சபை அதிகாரிகளையும், சாவகச்சேரி பிரதேச சபை அதிகாரிகளையும், தென்மராட்சி பிரதேச செயலரையும் அந்தப் பகுதி மக்கள் கோரியுள்ளனர். (வ-131)



வன்னிப் போரின்போது பல்வேறு வகையிலும் பாதிப்புக்குள்ளான பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களில் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த கேதீஸ்வரனும் ஒருவர். மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர் போரின்போது இரு கைகளையும் ஒரு கண் பார்வையையும் இழந்தவராவார். வாழ்வாதாரம் எதுவுமற்ற நிலையில் இவருக்கு ஜேர்மன் உதவும் இதயங்கள் அமைப்பினூடாக பெருமனத்துடன் உதவுவதற்கு முன்வந்த ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த மாறன் குடும்பத்தவரும் உதயகுமார் குடும்பத்தினரும் வழங்கிய ஒரு லட்சம் ரூபா நிதியை வலி.வடக்குப் பிரதேச சபையின் உப தலைவரும் வலி.வடக்கு மீள் குடியேற்ற அமைப்பின் தலைவருமான ச.சஜீவன் வழங்கினார். (வ)

## இரணை இலுப்பைக்கடவை மக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேறுமா?

வவுனியா, பெப்.2

வவுனியா இரணை இலுப்பைக் கடவைப் பகுதியில் மீளக் குடியமர்ந்தோருக்கான அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்படாததால் அவர்கள் பொருளாதார ரீதியில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

வவுனியா நகரப் பகுதியில் இருந்து 18 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள இரணை இலுப்பைக் கடவை பகுதியில் 400 குடும்பங்கள் வரை வசித்து வருகின்றனர்.

அவர்கள் போரால் பெரிதும் பாதிக்கப்பட்டு மீளக்குடியமர்ந்துள்ளவர்கள். அவர்களுக்கு எதுவிதமான நிவாரணங்களும் கிடைப்பதில்லை. தொழில் வாய்ப்பின்றிப் பல குடும்பங்கள் உள்ளன. அந்தக் குடும்பங்களில் பலர் அன்றாட கூலி வேலைக்குச் செல்பவர்கள்.

தற்காலிக வீடுகளில் வசித்து வரும் இவர்கள் கடும் வெயில், மழை, காற்று போன்ற இயற்கை இடர்களால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இங்குள்ள பாடசாலைகளில் அடிப்படை வசதிகள் போதிய அளவு இல்லை. வீதி வசதி மற்றும் போக்குவரத்து வசதி என்பன இந்தக் கிராமத்துக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. இதனால் பெருமளவு பணம் கொடுத்து பயணம் செய்யும் குறித்த கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வரவேண்டும் என்று பாதிக்கப்பட்டுள்ள குறித்த கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-402)

## வீடமைப்பதற்கு மணலைப் பெற பயனாளிகள் சிரமம்

வரணிப் பிரதேசத்தில் கரம்பைக் குறிஞ்சி மற்றும் இடைக்குறிஞ்சி கிராம அலுவலர் பிரிவினுள் இந்தியன் வீட்டுத்திட்ட பயனாளிகளின் தெரிவின் பட்டியல் வெளிவந்த நிலையில் குறித்த பயனாளிகள் வீட்டுத்திட்டத்துக்குத் தேவையான மணலைப் பெறுவதில் இக்கட்டான நிலையை எதிர் நோக்க நேர்ந்துள்ளது.

தற்போது வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் இருந்து பெறப்பட்டு வந்த மணல் பெறும் நடைமுறை தடைசெய்யப்பட்ட நிலையில், குறித்த வீட்டுத்திட்ட பயனாளிகள் எங்கிருந்து தமக்குத் தேவையான மணலைப் பெற்றுக் கொள்வது என்று திரிசங்கு நிலையில் உள்ளனர். இது தொடர்பில் அரச அதிபர் மற்றும் குறித்த பிரதேச செயலர்கள் தீர்க்கமான முடிவை எடுத்து குறித்த வீட்டுத்திட்டம் தொடர்பில் பயனாளிகளுக்கு உதவ வேண்டும் என்று கோரப்படுகின்றது. (வ-122)

## மட்டு.மாவட்டத்தில் 75 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை நாசம்

மட்டக்களப்பு, பெப்.2

மட்டு.மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட பெரு வெள்ளம் காரணமாக 75 ஆயிரம் ஏக்கரில் செய்கை பண்ணப்பட்ட பெரும் போக நெற்செய்கை நாசமாகியுள்ளதாக கமநல அபிவிருத்தித் திணைக்கள மட்டக்களப்பு மாவட்ட பிரதி ஆணையாளர் கே.சிவலிங்கம் தெரிவித்தார்.

தற்போது அறுவடை ஆரம்பமாகியுள்ள நிலையில் செய்கை பண்ணப்பட்ட பெரும்போகச் செய்கை முற்றாக நீரில் மூழ்கி அழிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அவ்வாறான நெற்செய்கையை சில விவசாயிகள் அறுவடை செய்கின்றபோது ஓர் ஏக்கருக்கு ஐந்து மூடை நெல்லையே அறுவடை செய்ய முடிவதாகவும் இதனால் அறுவடை இயந்திரத்துக்குச் செலுத்தும் வாடகைப் பணத்தால் தாம் நட்டமடைவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

வழமையாக ஓர் ஏக்கருக்கு முப்பது மூடைவரை அறுவடை பெறப்படுவது குறிப்பிடத்தக்கது. (வு)

## சாந்தநாயகி நற்பணி மன்றத்தால் மாணவருக்கு கற்றல் சாதனங்கள்



வவுனியா, பெப்.2

வவுனியா புளியங்குளத்தில் பழையவாடி அ.த.க பாடசாலையில் வறுமை நிலையில் கற்றல் செயற்பாடுகளை கிரமமாக முன்னெடுக்க முடியாத நிலையில் இருந்த 30 மாணவர்களுக்கு புத்தகப்பை உட்பட கற்றல் உபகரணங்கள் திருமதி ச.சாந்தநாயகி நற்பணி மன்றத்தின் சார்பில் லண்டனில் வசிக்கும் அவரது மகன் நிசாந்தனின் நிதி உதவியுடன் தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர்கள் அமைப்பின் ஊடாக அண்மையில் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பழையவாடி அ.த.க பாடசாலையின் அதிபர் அரவிந்தன், சமூக ஆர்வலர் செ.சபாநாதன், தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர்கள் அமைப்பின் தலைவர் சந்திரகுமார், செயலாளர் மாணிக்கம் ஜெகன் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-421)

## நான்கு விளையாட்டுக் கழகங்களுக்கு உபகரணங்கள்

தென்மராட்சி, பெப். 2
தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த பதிவு செய்யப்பட்ட 4 விளையாட்டுக்கழகங் களுக்கு நாடாளுமன்றஉறுப்பினர்களால் ஒதுக்கீடு செய் யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் அபிவிருத்தித் திட்டநிதியில் கொள்வனவு செய் யப்பட்ட விளையாட்டு உபகர ணங்கள் கடந்த வியாழக்கிழமை பிர தேச செயலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டன.

சாவகச்சேரி கோயிற்குடியி ருப்பு ஸ்ரீமுருகன் விளையாட் டுக்கழகம், சாவகச்சேரி டிறி பேக் தாரகை விளை யாட்டுக் கழகம், மட்டுவில் தெற்கு கதி ரொளி விளை யாட்டுக்கழகம், மட்டுவில் தெற்கு கலைவாணி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் ஆகிய வற்றுக்கு தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான விளை யாட்டு உபகரணங்கள் கையளிக் கப்பட்டுள்ளன.

இதேவேளை– வடக்கு மாகாண சபை உறுப்பினர்களால் ஒதுக்கீடு செய்யப்பட்ட பிரதே சத்தைச் சேர்ந்த ஆறு விளை யாட்டுக் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்களும் இரு கழகங்க ளுக்கான விளையாட்டு மைதான புனரமைப்பு நிதியும் இன்று பிர தேச செயலகத்தில் வைத்து வழங் கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டது. மட்டுவில் வளர்மதி விளை யாட்டுக்கழகம் , மீசாலை சீமா விளையாட்டுக்கழகம், மந்துவில் நவசக்தி விளையாட்டுக் கழகம், வரணி மதிஒளி விளையாட்டுக் கழகம், சாவகச்சேரி டிறிபேக் தாரகை விளையாட்டுக் கழகம் உட்பட ஆறு விளையாட்டுக்கழ கங் களுக்கு விளையாட்டு உப கரணங்கள் வழங்கப்படவுள்ள தாகத்தெரிவிக்கப்பட்டது. (வ–9)

## இணுவில் கந்தசுவாமி ஆலயத்தில் தைப்பூச தின உலகப் பெருமஞ்சத் திருவிழா

இணுவில் கந்தசுவாமி ஆலயத்தில் நாளைய தினம் செவ்வாய்க் கிழமை தைப்பூச புண்ணிய தினத்தில் மஞ்சத்திருவிழா நடைபெற வுள்ளது. அன்று காலை 6 மணிக்கு 1008 சங்காபிஷேகமும், விசேட பூசையும் நடைபெறும். மாலை 6 மணிக்கு சாயரட்டைப் பூசை நடைபெற்று 6.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம் பெறும். இரவு 7 மணிக்கு மின்சாரதீபங்களினால் அலங்கரிக்கப் பட்ட நூற்றாண்டுப் பழைமை வாய்ந்த உலகப் பெருமஞ்சத்தில் ஆறுமுருகப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதராய் வீதி வலம் வரும் அரும் காட்சியும் இடம்பெறும். இம்முறை பல்லாயிரக் கணக்கான அடியவர்கள் பங்குபற்றுவார்கள் என எதிர்பார்ப் பதனால் பொலிஸாரும் சாரணர் படையினரும் பாதுகாப்பு ஏற் பாடுகளை மேற்கொள்வார்கள். வாகன பாதுகாப்பு தரிப்பிடம், குடி தண்ணீர் சுகாதார வசதி தாகசாந்தி நிலையம் ஆகியனவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அத்துடன் ஆலயத்துக்கு வரும் அடியவர்கள் பெறுமதியான தங்க ஆபரணங்கள் அணிந்து வருவதை தவிர்க் குமாறும் ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

உ
சிவமயம்

இன்று நடைபெறும்
காரைநகர் முத்துமாரி அம்பாள் மகா கும்பாபிஷேகம்
இனிதே நடைபெற வாழ்த்துகிறேன்.

"பழமுதிர்சோலை"
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

கனகசபை தர்மகுலசிங்கம்
"பழமுதிர்சோலை"
அம்மன் வீதி, காரைநகர்.

(56389)(4.3.7)

உ
மருதடியான் துணை

## மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்
## ஆவர்த்தனப் பிரதிக்ஷ்டா நவகுண்டபக்ஷ
## மஹாகும்பாபிஷேக சிறப்பிதழ் – 02.02.2015

திங்கட்கிழமை புனர்பூச நட்சத்திரம் கூடிய காலை 9.45 மணி தொடக்கம் 10.45 மணி வரை உள்ள சுபவேளையில் மருதடியான் கும்பாபிஷேகம்

### பிரதமகுருவின் ஆசியுரை



மருதடியான்
மெய்யடியார்களே!

அடியவர்களின் நீண்ட நாளைய எண்ணம் இன்று ஈடேறுகின்றது. ஈழத்தின் முதன்மை விநாயகராலயமாக விளங்குகின்ற மருதடிப் பிள் ளையாரின் மஹாகும்பாபிஷேகம் இன்று சிறப் பாக நடைபெறுகின்றது. நமக்கும் மக்களுக்கும் மட்டுமல்ல முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் மகிழ்வைக் கொடுக்கின்ற நிகழ்வாக இது அமை கிறது. பூசலார் நாயனார் மனத்தில் கட்டிய கோயில் போல் அமைந்த பொற்கோயில் ராஜகோபுரங்கள் சூழ்ந்த பெருங்கற்கோயில் உலகெங்கும் பரந்து வாழ்கின்ற மருதடியானின் மெய்யடியார்கள் கொடுத்த பெரும் செல்வம் கொண்டு சிறப்பாக அமைக்கப்படிருக்கிறது. இது சிற்பிகள் செதுக்கிய கோயிலல்ல. மருதடியானே தமக்கு வேண்டியது இக்கோயில் என எண்ணம் கொண்டார் போலும். அவருடைய எண்ணப்படி அமைந்த இக் கோயிலின் மஹா கும்பாபிஷேகத்தைக் காண்பதுவும் கேட்பதுவும் மிகுந்த புண்ணியத்தைக் கொடுக்கும் என்பதோடு மட்டுமல்ல கடந்த பத்து வருடங்களாக மெய்துஞ்சாது ஊன் உறக்கம் தவிர்த்து மருதடிக் கோயிலே தமது கோயிலாக நினைத்து பணிபுரிந்த அனைவருக்கும் மருதடியான் திருவருள் என்றென்றும் கிடைக்க வேண்டும் எல்லா மக்களும் மருதடியான் சேவையில் இணைந்து நாம் வாழும் காலத்திலாவது நல்லதைச் செய்து சிறப்புற்று வாழ ஆசி கூறி அமைகிறேன்.

அராலியூர் சிவசிறீ.சிவஸ்வாமிக்குருக்கள்
பரமேஸ்வர ஜெயகுமாரக்குருக்கள்
கும்பாபிஷேக பிரதமகுருவும்
ஆலயபிரதமகுருவும்.






### தர்மகர்த்தா சபையினரின் செய்தி

மருதடியான் அடியார்களே!

வரலாற்றுப் புகழ்பெற்ற மருதடி ஆலயமானது மீண்டும் ஒரு சிறப்பு வரலாற்றினை தன் வரலாற்றுடன் சேர்த்துக் கொள்ள மருதடியான் துணை கொண்டு முற்றுமுழுதாக பொதுமக்களின் நிதி கொண்டு உள்ளூர், தென்னிந்திய சிற்பக்கலைஞர்கள் ஆக்கத்துடன் புதுப்பொலிவு பெற்று சிற்பக்கலைகள் நிறைந்த பொற்கோயிலாகக் காட்சி அளிக்கின்றது.

இந்த அரும்பெரும் ஆலயத்தினை ஒருமுறையேனும் தரிசித்து பாக்கியம் பெற மக்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டும். "தவமும் தவம் உடையார்க்கே." அதுவும் இறைவன் திருவருளால் மட்டுமன்றி அது நமக்கு கிட்டாது. இனிய கும்பாபிஷேகத்தில் பங்கு கொண்டு அருள்பெறும் அடியவர்க்கும் வர முடியாது வீட்டிலிருந்தே மருதடியானை நினைக்கும் அன்பர்களுக்கும் மருதடியான் அருட்கடாட்சம் கிடைக்கவும் விழா சிறப்புறவும் எல்லாம் வல்ல மருதடியானை வாழ்த்தி வணங்கி நிற்கின்றோம்.

என் இனிய அடியார்களே!

என் திருக்கோலம் காண நீவிர் உள் வீதி வர விரும்பின் நான் விரும்பும் இக்கோலத்தில் வந்தால் நான் உன்னைக் கண்டுகொள்ளவும் என்னை நீவிர் தரிசிக்கவும் இலகுவாக இருக்கும் என் இன்பமே உன் இன்பம். எனது விருப்பமே உனது விருப்பம். எனது நல்லாசிகள் உங்களை வாழவைக்கும். எனதருள் நீவிர் ஆலயம் வருவதை நான் விரும்புவேன்.

இவ்வண்ணம்

வேடமும் நீறும் விளங்க நிறுத்திக் கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும் பொருள் தன்னை நெஞ்சக் கரத்தின் நிலை அறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்து உனை ஆண்ட வித்தக மருதடி விநாயகன்.

ஆலய தர்மகர்த்தா சபை

மஹா கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துவோர்:

சுந்தர்சன்
சந்தை முன்பாக யாழ்.வீதி,
மானிப்பாய்.

PC SYSTEMS
Total IT Solution Providers
ஆலடி சந்தி, யாழ் வீதி, மானிப்பாய்.
Tel: 021 225 5445, Fax: 021 225 6261

ஐங்கரன் மோட்டோர்ஸ்
சந்தை முன்பாக யாழ்.வீதி,
மானிப்பாய்.

ஹோட்டல் பிறவுண்
மானிப்பாய் சந்தி,
மானிப்பாய்.

Micro System
Development Centre
ஆலடி சந்தி, யாழ் வீதி, மானிப்பாய்.

V.S.கணபதிப்பிள்ளை
பல்பொருள் வாணிபம்
மானிப்பாய்.

# முழு நிலா நாள் விஷேட கருத்தரங்கு

தென்மராட்சி, பெப்.2

மீசாலை உயர்கலைக் கல்லூரியின் ஜி.சீ.ஈ.உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான முழுநிலா நாள் விஷேட கருத்தரங்குகள் நாளை செவ்வாய்க்கிழமை மீசாலை, கிளிநொச்சி ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன.

மீசாலை உயர்கலைக் கல்லூரி மண்டபத்தில் புவியியல் பாடமும், கிளிநொச்சி மருத்துவமனைக்கு அருகில் உள்ள அன்னை இல்ல மண்டபத்தில் தமிழ் இலக்கண பாடமும் தொழில்நுட்பவியல் பாடத்தில் தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞான பாடமும் இடம் பெறும்.

கிளிநொச்சி அன்னை இல்லத்தில் இடம் பெறும் கருத்தரங்கில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள கிளிநொச்சி முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் மாணவர்கள் இலவசமாகப் பங்குபற்றாலாம் என்று கல்லூரி நிர்வாகி எஸ்.வீரசுதாகரன் அறிவித்துள்ளார்.

மீசாலை உயர்கலைக் கல்லூரியால் கடந்த 4 வருடங்களாக ஜி.சீ.ஈ சாதாரண தரம், உயர்தரம் ஆகிய பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு முழுநிலா நாள்களில் விஷேட கருத்தரங்குகள் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (வ-9)

## மரண அறிவித்தல்



### திருமதி தையல்நாயகி அருள்பிரகாசம்

திருநெல்வேலி, சிவன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடத்தை, தற்காலிக வசிப்பிடமாகவும் தற்போது இராமநாதன் கலட்டி கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தையல்நாயகி அருள்பிரகாசம் நேற்று (01.02.2015) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அருள்பிரகாசத்தின் அன்பு மனைவியும், செல்வநாயகம் (ஓய்வுபெற்ற ஊழியர், நிலஅளவைத் திணைக்களம்), அருள்நாயகி, அருள்மாலினி (பிரான்ஸ் - ஓய்வுபெற்ற தாதி உத்தியோகத்தர்- யாழ். போதனா வைத்தியசாலை), அருட்செல்வி (கனடா), அருள்மலர் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், இந்திராணி, குலசபாநாதன், பாலசுப்பிரமணியம் (பிரான்ஸ்), சற்குணராஜா (கனடா), காலஞ்சென்ற பிரபாகரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராமநாதன் ஒழுங்கை,
கோண்டாவில் வீதி,
கோப்பாய் தெற்கு,
077 248 7619
077 711 4184

தகவல்:
கு.அருள்நாயகி (குஞ்சு - மகள்)
கு.குலசபாநாதன் (மருமகன் - நரினாந்வு)
(56430) (45.)



### சின்னவன் அப்பையா

வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னவன் அப்பையா 01.02.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னவன் - வள்ளி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முருகன் - சின்னம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற தெய்வானையின் அன்புக் கணவரும் செல்வராசா, செல்வராணி காலஞ்சென்ற புஸ்பமலர் மற்றும் செல்வரத்தினம், செல்வகுமார், செல்வமதி ஆகியோரின் பர்சமிகு தந்தையும் சுசிகலா, தங்கராசா, குமுதினி, சிவதர்சினி, பன்னீர்ச்செல்வம் ஆகியோரின் பாசமிகு மாமனும் மெலனி, திபேனி, திஷானி, தனிஸ்ராஜ், சதீஸ்ராஜ், திபேஸ் ராஜ், ரஜிதா, றொஷானி, நிஷானி, சுவேன், சுவேனுகா, நிலக் சன், நிலானி, நிருன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற நாகம்மா மற்றும் மகாலிங்கம், செல்லையா, கனகம்மா ஆகியோ ரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2015) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கச்சாய் எறியால்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


வெள்ளாம்போக்கட்டி,
கொடிகாமம்.

(56427)

தகவல்:
குடும்பத்தினர்.

### கிருஸ்ணசாமி (பத்தர்) கந்தசாமி (பத்தர்)

(வைரமாளிகை, அன்னை நாகா பூட்சிற்றி (முன்னாள் ஊழியர்)



யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு, CCTMS Lane ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணசாமி கந்தசாமி நேற்று (01.02.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணசாமி - இந்தி ராணி தம்பதியரின் புதல்வனும், பவளவல்லியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கப் பத்தர்- முத்தம்மா (மட்டக் களப்பு) தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான குண சிங்கம், புஸ்பராணி மற்றும் பவளராணி வெற்றிவேலாயுதம் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற முகிலன் மற்றும் இராஜ பாமினி (சிந்து), தர்சினி (ஆஸ்தி ரேலியா), துஸியந்தி ஆகியோ ரின் தந்தையும், பிரபாகரன், சுகந்தன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமனும், அபினா, அபிசயன், அஸ்வின் (ஆஸ்திரேலியா)ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.02.2015) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சி.சி.த.க. பாடசாலை ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(56428) (45.3)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்



### பரமசாமி சந்திரகுமார்

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் ஸ்ரேசன்றோட், சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பரமசாமி சந்திரகுமார் 30.01.2015 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமசாமி - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு புதல்வனும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் வரதலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், ரஜனியின் அன்புக் கணவரும், சாம்ராஜ் (இத்தாலி), சஞ்சிகா, சாரங்கன், சரண்ராஜ், சாகித்தியா ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருபாகரன் (பிரான்ஸ்), கிருசாந்தி ஆகியோரின் அன்பு மாமனும், அபிசா, ஆகாஷ் ஆகியோரின் அன்புப் பேரனும், அருணகிரிநாதன், காலஞ்சென்ற ஜெயக்குமார் மற்றும் இலங்கேஸ்வரன் (கனடா), ராஜினி, காலஞ்சென்ற சூரியபிரபா, ஜெயந்தி (கனடா), காலஞ்சென்ற ஸ்ரீஜெயன் மற்றும் மகேஸ்வரன், ரதி (கனடா) ஆகியோரின் சகோதரரும், ராஜீவன் (டென்மார்க்), கிருஸ்ணவேணி, சஞ்சீவன் (லண்டன்), சுமைதி, ஜெஜீவன் (லண்டன்), மாலதி, ஜீவன் (டென்மார்க்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (02.02.2015) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் சுன்னாகம் கொத்தியாலடி இந்து ம்யானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.

(56422) (45.3)

தகவல்:
குடும்பத்தினர்.



### திருமதி எலிசபெத் ஜேம்ஸ்

(ஓய்வுபெற்ற ஆசிரியை, புனித சாந்த மரியாள் பாடசாலை)

ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் மண்குழி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி எலிசபெத் ஜேம்ஸ் 31.01.2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சவரிமுத்து ஜேம்சின் அன்பு மனைவியும், இயூஜின் (ஆசிரியை, சண்முகநாதன் மகா வித்தியாலயம்), காலஞ்சென்ற ஜேம்ஸ் அனித்தா மற்றும் ஜெயசீலன் (Australia), கஸ்ரின் கமிலஸ் (கனடா) ஆகியோரின்அன்புத் தாயாரும், அருஜூனன், நீற்றா (Australia), சுமணா (Canada) ஆகியோரின் அன்பு மாமியும், டண்ஸ்ரன், ஜெரோம், யூலியன், ஜெருசா (Australia), ஷாலிக்கா, சஞ்ஜெய் (Canada) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02.02.2015) திங்கட்கிழமை மாலை 4.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து புனித சூசையப்பர் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பின்னர் ஊர்காவற்றுறை பொது சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மண்குழி வீதி,
ஊர்காவற்றுறை.

(56424) (4.3.7)

தகவல்:
குடும்பத்தினர்.

# தைப்பூசத் திருவிழா

யாழ்ப்பாணம், பெப்.2

மயிலிட்டி வீரமாணிக்கதேவன் துறை கண்ணகாதேவி ஆலயம், மயிலிட்டி முனையன் வளவு முருகன் ஆலயம் ஆகியவற்றில் தைப்பூசத் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

குறித்த இரு ஆலயங்களும் உயர் பாது காப்பு வலயத்தில் உள்ளன. எனினும் பூசை நடத்துவதற்குப் படையினர் அனுமதி வழங்கியுள்ளனர். (வ)

◆◆◆

பண்டத்தரிப்பு காலையடி மறுமலர்ச்சி மன்ற கந்தசுவாமி ஆலயத்தில் எழுந்தருளியுள்ள வெற்றிவேல் முருகனுக்கு தைப்பூச தினமான நாளை விசேட அபிஷேக ஆராதனை கள் முற்பகல் 9 மணியளவில் இடம்பெறவுள்ளன.

அதனைத் தொடர்ந்து இந்தப் பெரு விழாவைச் சிறப்பிக்கும் முகமாக எஸ். சிவானந்தராஜாவின் பக்தி இசை விருந்தும், சொல்லருவி க. ஜெசிந்தன் தலைமையில் சண்டிலிப்பாய் அமரிசை விவாதக் குழுவினரின் விவாத அரங்கும் இடம் பெறவுள்ளன. (வ)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப்.2

தேசிய கல்வி நிறுவகத்தால் நடத்தப்படும் கல்விமாணி கற்கை நெறியில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மற்றும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிராந்திய நிலையங்களில் கல்வி பயிலும் முதலாம் வருட ஆசிரிய மாணவர்களுக்கான விஷேட கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் முதலாம் வருட இறுதிப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படவுள்ளமையால் அனைத்து ஆசிரிய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு இணைப்பாளர் கேட்டுள்ளார். (வ)

# உழவர் தின விழா

தென்மராட்சி, பெப்.2

சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையச் சிறார்களின் உழவர் தின விழா நாளை செவ்வாய்க்கிழமை தைப்பூச தினத்தன்று இடம் பெறும்.

நிலையத் தலைவர் வை.இராச ரத்தினம் தலைமையில் இடம் பெறும் நிகழ்வில் உழவுத் தொழிலின் பாரம்பரியங்கள் தொடர்பாக சிறார்கள் மூலம் வயல் உழவு, நெல்விதைத்தல், களைபிடுங்குதல், அறுவடை செய்தல், நெல் வீட்டுக்குக் கொண்டுவருதல், உரலில் இடித்தல், பொங்கலிடல், உறவினர்களுடன் உண்ணல் போன்ற நிகழ்வுகள் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி (தேசிய பாடசாலை)

# 03.02.2015 இன்று மணிவிழாக்காணும்

## எமது கல்லூரி அதிபர் உயர்திரு.

# அருணாசலம் கயிலாயபிள்ளை (SLEAS III) அவர்களின்

# மணிவிழாச் சிறப்பிதழ்

Best Wishes




### ஆசியுரை

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நீண்ட காலமாக அதிபராகக் கடமையாற்றிய திரு.அ.கயிலாயபிள்ளை அவர்களின் சேவையை நயந்து ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். திரு.அ.கயிலாயபிள்ளை அவர்கள் ஆளுமை மிக்க அதிபர். எல்லோருடனும் இனிமையாகப் பழகுவதிலும் தெய்வ பக்தியிலும் சிறந்தவர். கல்விப் பணியில் பல நிலைகளில் பணியாற்றி தனது அறுபதாவது ஆண்டு நிறைவில், நிறைவாகப் பணிசெய்த திருப்தியோடு ஓய்வு பெறுகின்ற திரு.அ.கயிலாயபிள்ளை அவர்களின் சேவையைப் போற்றுகின்றேன். பெருந்தொகையான மாணவர்களையும் ஆசிரியர்களையும் சிறந்த முறையிலே வழிநடத்தி சாவகச்சேரி இந்துக் கல்லூரியை உயர் நிலைபெறச் செய்த பெருமைக்குரியவர்.

அதிபர் அவர்கள் இளைப்பாறிய காலத்திலும் இயன்ற கல்வித் தொண்டாற்றி மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகளுடன் நோய் நொடியின்றி மகிழ்ச்சியாக சகல போகம் மிக்க நல்வாழ்வு வாழ எல்லாம்வல்ல மாவடிப் பிள்ளையாரின் திருவடிகளை வழுத்தி எனது ஆசியையும் தெரிவித்து அமைகின்றேன்.

'வாழ்க வளமுடன்'

கல்வயல. **சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக்குருக்கள்**

---

### தன்னலம் கருதாத சேவையாளன்

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் ஒரு தசாப்தத்திற்கு மேலாக அதிபராகத் திகழ்ந்து தனக்கெனத் தனித்தடம் பதித்து கல்விச் சமூகத்தினரின் பெரு மதிப்பைப் பெற்ற மணிவிழா நாயகனும் எனது நண்பனுமான அருணாசலம் கயிலாயபிள்ளை அவர்களது மணிவிழா மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். திரு.அ.கயிலாயபிள்ளை அவர்கள் கல்வித் துறையில் முதலில் பல்கலைக்கழக உதவி விரிவுரையாளராக நுழைந்து பின்னர் சிறந்த ஓர் ஆசிரியராக, முதன்மை ஆசிரியராக, கொத்தணி அதிபராக, அதிபராக, கோட்டக்கல்விப் பணிப்பாளராக சிறந்த சேவையாற்றி மீண்டும் மாணவர்களது கல்விக்கு நேர்த்தியாக உதவ வேண்டுமென்று தான் கல்வி கற்ற தேசிய பாடசாலையான சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு அதிபராக நியமனம் பெற்று, பல தேசிய மட்ட சாதனைகளை மாணவர்கள் பெற வழிவகுத்து நற்சேவையாற்றி 03.02.2015 இல் ஓய்வு பெறுகின்றார்.

ஜனாதிபதி அவர்களது பிரதீபா பிரபா விருதுகள் பெற்றது மட்டுமல்லாமல், தென்மராட்சி அதிபர் சங்கத் தலைவராகவும் தென்மராட்சிக் கல்வி வலய பரீட்சைச் சபையின் நீண்டகால உறுப்பினராகவும் ஆன்மீகத் துறையாளராகவும், சமூக சேவையாளராகவும், சமதான நீதிவானாகவும் கௌரவத்தினைப் பெற்றுள்ளார். இவர் தனது சேவைக் காலத்தில் பல பட்டங்களைப் பெற்று சிறப்படைந்ததுடன் திறமை, சேவைமூப்பு, போட்டிப் பரீட்சை அடிப்படையில் கல்விச் சேவையின் உயர் நிலையான இலங்கைக் கல்வி நிர்வாக சேவைத் தரத்தினையும் பெற்று சிறப்பாக ஆற்றிய சேவையைப் பாராட்டி இவரது ஓய்வு காலம் சிறப்படைய வாழ்த்தி இறைவனை வேண்டுகின்றேன்

**கு.சிவானந்தம்**

கோட்டக்கல்விப் பணிப்பாளர்.தென்மராட்சி.

---

### செயற்றிறன் மிக்க அதிபர்

திரு.அருணாசலம் கயிலாயபிள்ளை அவர்கள் 15.07.2004 ஆந் திகதி அன்று எமது கல்லூரியில் அதிபராகப் பொறுப்பேற்றார். 2000 ஆம் ஆண்டில் ஏற்பட்ட தென்மராட்சி இடப்பெயர்வின் தாக்கங்களிலிருந்து முழுமையாக மீளாத நிலையில் கல்லூரியைப் பொறுப்பேற்றதால் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டி இருந்தது. பௌதிக வளங்களை விருத்தி செய்ய வேண்டிய நிலைமை, கல்வி அபிவிருத்தியில் முன்னேற்றம் காணவேண்டிய நிலைமை என்பன இவர் எதிர்நோக்கிய முக்கிய பிரச்சினைகளாகும். இவை எல்லாவற்றையும் தனது நிர்வாகத் திறனாலும் கல்லூரிச் சமூகத்தினருடன் கொண்ட சிறந்த தொடர்பாடல் ஊடாகவும் வெற்றி கொண்டு மிகச் சிறந்த முறையில் இந்துக் கல்லூரியை உயர்வு நோக்கிய பாதைக்கு இட்டுச் சென்ற பெருமை அதிபர் அவர்களையே சாரும். இவரது காலத்தில் கல்லூரி ஈட்டிய சாதனைகள் அத்தனையும் இவரது செயலாற்றலுக்கு சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும். மனித நேயமும், சமூகப் பணி செய்வதில் ஈடுபாடும் கொண்ட அதிபர் அவர்களின் ஓய்வு காலம் மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்தோடும் அமைய இறையாசியை வேண்டுகின்றேன்.

**திரு.த.பாலசண்முகநாதன்,**

பிரதி அதிபர் (கல்வி அபிவிருத்தி),

---

### பன்முக ஆளுமை கொண்ட அதிபர்

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அதிபர் கப்டன் அ.கயிலாயபிள்ளை அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அளவிலா ஆனந்தமடைகின்றேன். தேசிய பாடசாலை அதிபர் எவ்வாறு பன்முக ஆளுமை கொண்டவராக விளங்க வேண்டும் என்பதற்கான உதாரண புருஷராகத் திகழ்ந்து பாடசாலையின் கல்விச் செயற்பாடுகளுக்கும் இணைப்பாடச் செயற்பாடுகளுக்கும் அவர் ஆற்றிய பணிகள் மறக்கமுடியாதவையாகும். பாடசாலையின் பௌதிகவள அபிவிருத்தியிலும் ஆளணி அபிவிருத்தியிலும் அவர் பல சாதனைகளை நிறைவேற்றியுள்ளார். பாடசாலையின் ஆசிரியர்களை வழிநடத்துவதிலும், மாணவர்களை நிர்வகிப்பதிலும் பாடசாலைச் சமூகத்தை அரவணைப்பதிலும் அவர் கொண்டிருந்த பன்முக ஆளுமையே அவரை தேசிய இந்து அன்னையின் புகழ்பூத்த அதிபராக உயர வைத்தது. மாணவரின் உயர்ச்சிக்காக அரும்பாடுபட்ட சேவையாளர் கல்விப் பணிகளிலிருந்து ஓய்வுபெற்ற பின்னரும் இந்துவின் வளர்ச்சிக்குப் பணிபுரிய நல்ல உடலாரோக்கியத்துடனும் மகிழ்வுடனும் பல்லாண்டு காலம் வாழ மாவடிப் பிள்ளையாரின் அருளாசி வேண்டி அவரை வாழ்த்தி நிற்கின்றேன்.

**செல்வி.இ.நடராசா**

பகுதித் தலைவர் (உயர்தர கணித. விஞ்ஞானம்)யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

---

### எங்கள் அதிபர் - சமூக சிற்பி

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் புகழ்பூத்த அதிபர்களில் ஒருவராக விளங்கிய அதிபர் திரு.அ.கயிலாயபிள்ளை அவர்களது மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன். ஒரு நிறுவனம் அதன் வாடிக்கையாளரை முதன்மைப்படுத்தியதாக இருந்தாலே அந்நிறுவனத்தின் விளைதிறன் உயர்வாகக் காணப்படும். இந்தவகையில் இப்பாடசாலை என்ற நிறுவனத்திலும் மாணவர்களது உயர் சித்திகள், அடைவு மட்டங்களுக்கு இவரது முதன்மையான வகிபாகம் மனங்கொள்ளத்தக்கது. புவியியல் சிறப்புப் பட்டதாரியான எமது அதிபர் பாடசாலையை சமூகத்தோடு இணைந்த வகையில் வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச்சென்ற பெருமைக்குரியவர். இத்தகைய சிறப்புமிக்க அதிபர் சமூகச் சிற்பியாக விளங்கியமையால் பாடசாலையின் பௌதிக மனிதவள மேம்பாட்டை உயர்வடையச் செய்தமை யாவரும் அறிந்ததே. இந்த வகையில் இவரது ஓய்வுக் காலம் சிறப்புற அமைய மாவடிப் பிள்ளையாரை வேண்டி நிற்கின்றோம்.

**திரு.ந.இரவிக்குமார்,**

பகுதித்தலைவர்,யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

---

### தென்மராட்சியின் கலங்கரை விளக்கு

தென்மராட்சியின் கலங்கரை விளக்காகத் திகழ்ந்து கொண்டிருக்கும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி இன்று மணிவிழாக் காணும் திரு.அ.கயிலாயபிள்ளை அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் பெருமகிழ்வும், திருப்தியும் அடைகின்றேன்.இந்தக் கல்லூரியில் தனது கல்வியைக் கற்றவர். ஆசிரியராக அதிபராக, கோட்டக் கல்வி அதிகாரியாக தம்மைப் பலபதவிகளில் உயர் நிலைப்படுத்திக் கொண்டவர்.

இராணுவ தலைமைத்துவப் பயிற்சி பெற்று 'கப்டன்' என்ற பதவி நிலைப் பெயரையும் பெற்றுக் கொண்டவர்.

திரு.அ.கயிலாயபிள்ளை அதிபர் அவர்களின் சேவைக் காலத்தில் கல்லூரி அன்னை நூற்றாண்டு விழாவை கோலாகலமாகக் கொண்டாடியமை பெருமைக்குரிய விடயம். அதிபர் அவர்களின் சிறந்த சேவையின் மதிப்பீடாக மூன்று தடவைகள் அவருக்குப் பிரதீபா விருது கிடைக்கப் பெற்றது.அதிபர் அவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அரவணைத்து கல்லூரியின் உயர்விற்காக மனித நேயத்துடன் உழைத்த உத்தமராவார்.

எம் கல்லூரியில் இறுதிக்காலத்தில் சேவையாற்றி எம்முடன் இணைந்து மணிவிழாக் காணும் நிகழ்வு எம் வாழ்வில் என்றும் மறக்க முடியாத விடயமாகும்.

அகவை அறுபதிலும் இளமைத் துடிப்புடனும் உற்சாகத்துடனும் செயற்படும் அதிபர் தங்கள் ஓய்வு காலத்திலும் கல்விப் பணிகள் சமூகப்பணிகளில் ஈடுபட்டு தம் குடும்பத்தாருடன் ஆரோக்கியமாகவும் மகிழ்வாகவும் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி.ப.இரத்தினசிங்கம்**

பகுதித்தலைவர் (இடைநிலைப் பிரிவு)

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

---

## சேவை விவரம்

யாழ் பல்கலைக்கழகம்
விரிவுரையாளர் 1980 – 1981 நவம்பர்

நு/சென்ஜோசப் தமிழ் ம.வி
ஆசிரியர் 17.02.1982 – 26.05.1986

கிளி/வன்னேரிக்குளம் ம.வி
ஆசிரியர் 27.05.1986 – 28.02.1989

கிளி/பூநகரி நல்லூர் அ.அ.க.பாட.
ஆசிரியர் / ISA 01.03.1989 – 31.12.1990

கிளி/கிளாலி றோ.க.த.க.பாட.
ஆசிரியர் / ISA 01.01.1991 – 31.01.1992

கிளி/முரசுமோட்டை முருகாந்தா ம.வி
ஆசிரியர் / ISA 01.02.1992 – 23.08.1992

கிளி/முழங்காவில் ம.வி
கொத்தணி அதிபர் 24.08.1992 – 06.01.1994

கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி
அதிபர் 07.01.1994 – 17.03.1996

கிளி/பளை மத்திய கல்லூரி
அதிபர் 18.03.1996 – 31.06.1998

Divisional Education office Palai
DEO 01.07.1998 – 14.07.2004

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
அதிபர் 15.07.2004......

- களனி பல்கலைக்கழகம் - B.A (Hons) Geography – 1979
- பட்டப்பின் கல்வி டிப்ளோமா – 1989 / 1991 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
- முதுகல்விமாணி – 2002 யாழ் பல்கலைக்கழகம்
- இலங்கை அதிபர் சேவை வகுப்பு I 1991
- இலங்கை கல்வி நிர்வாக சேவை – தரம் III – 2009
- பிரதீபா பிரபா விருது – 2012, 2013, 2014
- ஆலயப் பணி – மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடி பிள்ளையார் ஆலய வழிபடுவோர் சபைத் தலைவர்
- சமாதான நீதிவான்
- தேசிய பயிலிளவல் படையணி (கடேற்) பயிற்சியும் கப்டன் தரமும் - 2013

---

### அர்ப்பணிப்பான சேவையாளன்...

கடந்த ஒரு தசாப்த காலத்திற்கும் மேலாக எமது கல்லூரியில் அதிபராக அரும்பணியாற்றியவர் மதிப்பிற்குரிய கப்டன் அ.கயிலாயபிள்ளை அவர்கள். தனது ஆளுமைத் திறனாலும், அர்ப்பணிப்பான சேவையாலும், கல்லூரி பல நிலைகளிலும் வளர்ச்சிப் பாதையை நோக்கிச் செல்வதற்கு வழிவகுத்தவர். கல்லூரியின் அபிவிருத்தி நோக்கிய திட்டங்களுக்குத் துணிந்து செயல்வடிவம் கொடுத்தவர். சிறந்த நிர்வாகியாகவும், மனித நேயப் பண்பு மிக்கவராகவும் விளங்கிய அதிபர் அவர்களின் உயர்ந்த பணி இந்து அன்னையின் வரலாற்றில் நிலைவழியாத் தடமாய் ஆழப் பதியப்படும் என்பது உறுதி.

"உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்".

என்ற பொய்யாமொழிக்கு இலக்கணமாய் விளங்கும் அதிபர் அவர்களின் ஓய்வு காலம் அமைதியும், மகிழ்ச்சியும் ஆரோக்கியமும் மிக்கதாய் அமைய மாவடி விநாயகன் பாதம் பணிகின்றோம்.

**திருமதி.வி.மகேந்திரன்**

பகுதித்தலைவர். யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

---

### ஆளுகைத் திறன் + தலைமைத்துவப் பண்புகள் + மனித நேயம் = அதிபர் அ.கயிலாயபிள்ளை

"நாம் உண்மையாக வாழ்வது என்றால் கடமையைச் செய்வது என்றுதான் பொருள் புகழையும் பழியையும் எல்லாம் வல்ல ஆண்டவனின் திருவடிகளில் சமர்ப்பித்துவிட்டு என் பாதையில் நான் நடந்து செல்கின்றேன்".

- மகாத்மாகாந்தி – யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபரின் மணிவிழா சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதையிட்டு மகிழ்வடைகின்றேன்.

ஏறக்குறைய 4000 நாட்கள் இந்துவில் தன்னை இணைத்து அர்ப்பணிப்புடன் சேவை ஆற்றி கல்லூரித் தாயின் புகழை உயர்த்திய ஒரு மாண்புடைய மனிதனின் மணிவிழா என்பது வரலாற்றுப் பதிவுதான். இவர் யா/சாவகச்சேரியில் பதவி ஏற்ற காலம் சவால்கள் சூழ்ப்பங்கள், ஆபத்துக்கள் நிறைந்த காலம். வெடி ஓசையும் விதித் தடைகளும் ஆங்காங்கே கேட்டுக் கொண்டிருப்பது சகஜமாக இருந்தது. அதே வேளை நிறைந்த மாணவர் தொகைக்கு ஏற்ப வளங்களைக் கொண்டிருந்த தன்மையும் நிலவிய காலம் அது. ஆரோக்கியமான எண்ணங்கள் ஊற்றெடுக்கும் மனதில் இருந்து தான் நல்ல நோக்கங்களும் உருவாகும் என்பதனை தனது செயலால் நிரூபித்திருக்கின்றார் எமது மதிப்பிற்குரிய அதிபர் திரு.அ.கயிலாயபிள்ளை அவர்கள். திரு.அ.கயிலாயபிள்ளை அவர்களது சேவை ஓய்வுக் காலம் அவரது ஆளுமையின் இன்னுமொரு பரிமாணத்தை எமது தேசத்திற்கு அடையாளம் காட்டும் காலமாகவும், மகிழ்ச்சி நிறைந்த காலமாகவும் அமைய வெள்ளை மாவடி விநாயகனது பாதம் பணிந்து வேண்டி நிற்கின்றேன்.

**திரு.சு.கிருஸ்ணகுமார்**

வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி.

---

### பல்வகைத் திறமைகளைக் கொண்டவர்

திரு.அ.கயிலாயபிள்ளை அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி தெரிவிப்பதில் பேருவகை கொள்ளுகின்றேன். அவர் தீர்க்க தரிசனமான முடிவுகளை மேற்கொள்ளும் ஆற்றலைக் கொண்டவர். எந்த விடயங்களிலும் சடுதியான முடிவாகக் காணப்பட்டாலும் அது ஒரு நீண்டகால சிந்தனை கொண்டதாக எம் நிறுவனத்திற்கு நன்மையானதாகவே அமையும். அவர் பிரச்சினைகளைக் கண்டு ஒதுங்கியது கிடையாது. முனைப்போடு செயற்படுவார். கல்லூரியையும் வீட்டையும் சமமாக நோக்கியவர் அவருடைய சேவைக் காலத்தில் பெரும்பாலான காலம் கல்லூரியிலேயே செலவழித்துள்ளார். கல்லூரி நாட்களாயினும் சரி கல்லூரி விழாக்களாயினும்சரி நேரம் தவறமாட்டார். அவருடைய நேர முகாமைத்துவம் என்னை வியக்க வைத்துள்ளது. கல்வியமைச்சினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் அத்தனை சுற்று நிருபங்களும் அவருக்கு மனப்பாடம். கல்லூரியை நிர்வகிக்கின்ற பொழுது அதன்படி ஆற்றுகை செய்வார். அலுவலகத்தைப் பொறுத்தவரை கோவைகள் திறம்பட வரிசைப்படுத்தி நிர்வாக இலக்கிற்கு வழியமைத்தார். கல்லூரியின் இணைப்பாடவிதான வெற்றிகளுக்கும் திறம்பட வழிகாட்டியுள்ளார். கல்லூரிச் சமூகத்துடன் மட்டுமன்றி திணைக்கள அதிகாரிகளுடனும், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திக்குழு, சமூக குழுக்களுடனும் நல்லுறவைப் பேணி கல்லூரியை ஒரு நேரிய வழியில் கொண்டு சென்றுள்ளார்.சமூகத்திலும் வெள்ளைமாவடிப் பிள்ளையார் வழிபடுவோர் சபைத் தலைவராகவும் இருந்து பல அரிய சேவைகளைச் செய்துள்ளார். இது மட்டுமன்றி தனது குடும்ப வாழ்விலும் தனது புதல்வர்களை நல்வழிப்படுத்தி உயர்த்தியுள்ளார். அவரின் குடும்பத்தினரும் அவரும் சகல சௌபாக்கியங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றேன்.

**திரு.ந.பாலச்சந்திரன்.**

பிரதி அதிபர் (நிர்வாகம்)யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

---

### பல்பரிமாணமுடைய அதிபர்

யாழ். மாவட்டத்தில் முன்னிலை வகிக்கின்ற ஒரு தேசிய பாடசாலையாக இருந்து கல்வி ஒளி வீசிக் கொண்டிருக்கும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் பதின்மூன்று வருடங்களுக்கு மேலாக அதிபர் பதவிவகித்து, இருமுறை தொடர்ச்சியாக பிரதீபா பிரபா விருதைப் பெற்ற எங்கள் மனங்கவர்ந்த மதிப்புக்குமுரிய அதிபர் உயர்திரு அருணாசலம் கயிலாயபிள்ளை அவர்களின் மணிவிழா நிகழ்விற்கு வாழ்த்துச் செய்தி வழங்கக் கிடைத்ததையிட்டு நான் பெருமகிழ்வடைகின்றேன். அதிபர் சேவையில் முதலாந்தர (SLPS – I) அதிபராகவும் கல்வி நிர்வாக சேவையில் (SLEAS-III) எனுந் தகுதிகளைப் பெற்று தென்மராட்சிக் கல்வி வலயத்தின் அதிபர் சங்கத் தலைவராகவும் அவர் அண்மைக காலங்களில் உலா வந்திருப்பது இப்பாடசாலைக்கு அவரின் கீழ்ப் பணியாற்றுகின்ற எங்களிற்குக் கிடைத்த பெரிய கௌரவமாகும். தனது அறிவாற்றலாலும் பண்பாலும் அனைவரையும் அன்புடன் அரவணைத்துக் கருமமாற்றிய எங்கள் அதிபரின் ஓய்வு, எமது பாடசாலைக்கு பாரிய வெற்றிடம் ஒன்றை ஏற்படுத்தும் என்பது மிகையல்ல.இவர் பளைக் கோட்டக் கல்வி அதிகாரியாகக் கடமையாற்றிய காலப்பகுதியில் இவரின் கீழ் பணியாற்றக் கிடைத்த அரிய சந்தர்ப்பத்தில் நான் அவரது அன்பு, அரவணைப்பு, கண்டிப்பு, நிர்வாகத்திறமை என்பவற்றை உணர்ந்து கொண்டிருக்கின்றேன். இப்பாடசாலைக்கு அவர் ஆற்றிய பணி மிகவும் மகத்தானது அவருடைய நிர்வாகத்திறமை எல்லோருடனும் பேணுகின்ற சுமுகமான உறவும் பலரையும் ஒன்றிணைத்து ஒரு குறிக்கோளை நோக்கிப் பயணித்து அதில் வெற்றி காணும் தகைமை என்பன இப்பாடசாலைக்கு பல கோணங்களிலும் பல உயர்வுகளை ஈட்டித் தந்திருக்கின்றன. அவருடைய ஓய்வு காலம் சிறப்பாக மகிழ்ச்சியாக அமையவும். அவரும் அவருடைய குடும்பத்தவரும் சகல சீரும் பெற்று சிறந்த ஆரோக்கியத்துடன் வாழவும் எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**திரு.க.ஜெயவீரசிங்கம்**

தலைவர் - ஆசிரிய சகோதரத்துவம், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

---

### அதிபர் கயிலாயபிள்ளை அவர்களின் அகவை அறுபதில் வாழ்த்துரை

தென்மராட்சியின் தேசிய பாடசாலையாகிய சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் ஒரு தசாப்த காலப்பகுதியில் கண்ணியம் மிக்க அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெறும் எமது மதிப்புக்குரிய உயர்திரு. அருணாசலம் கயிலாயபிள்ளை அவர்களின் கல்விச் சேவையைப் பாராட்டி வாழ்த்துரை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன். இவர் எமது கல்லூரியில் கடமையேற்கும் போது இலங்கை அதிபர் சேவை (SLPS-I) தரத்திலிருந்து பின்னர் பதவியுயர்வு பெற்று இன்று இலங்கை கல்விநிர்வாகசேவை (SLEAS-III) அதிகாரியாக, உயர் நிலை அதிபராக விளங்குகின்றார்.

இவர் எமது கல்லூரியின் பௌதிக, மனிதவள விருத்தியில் மிகவும் அக்கறையுடன் செயலாற்றியுள்ளார். இதனால் இவரது காலப்பகுதியில் க.பொ.த சாதாரண, உயர்தர பெறுபேறுகள் மிக உயர் நிலையில் காணப்பட்டன. இவரது பதவிக்காலப்பகுதியில் மாணவர்களாக இருந்த பலர் இன்று மருத்துவர்களாகவும், பொறியியலாளர்களாகவும், கணக்கியலாளர்களாகவும், வங்கியாளர்களாகவும், மற்றும் உயர் பதவி வகிப்பவர்களாகவும் நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் சேவை புரிந்து வருகின்றனர். இவர்களே எமது அதிபரின் அர்ப்பணிப்பான சேவைக்குச் சான்றுகளாக உள்ளனர்.

இவரது சேவைக்காலம் கல்லூரி வரலாற்றின் பொற்காலமாகும். எமது கல்லூரியில் நவீன யுகத்துக்கு அடிப்படையாக அமையும் தொழிநுட்பக்கற்கைநெறி இவரது முயற்சியின் பயனாக உருவாக்கப்பட்டது. இன்று கணித, விஞ்ஞான, கலை, வர்த்தக துறைகளை விட கூடியளவு மாணவர்கள் தொழிநுட்பத்துறையில் கல்வி பயில்கின்றனர். இத்துறைசார்ந்த முதலாவது அணியினர் இவ்வருடம் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். இந்த மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவார்கள் என நாம் அனைவரும் எதிர்பார்க்கின்றோம். எமது கல்லூரியின் 111 ஆவது ஆண்டு நிறைவு நாளில் எமது கல்லூரி அதிபரின் அகவை அறுபது அண்மித்துள்ளது. எனவே இவரது நிறைவான சேவையைக் கௌரவிக்கு முகமாக இந்தவாழ்த்துமடலை வரைந்து பிறந்த தின வாழ்த்துக்களையும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கின்றேன். எமது கல்லூரி அதிபரின் ஓய்வுக்காலம், அவருக்கும் அவரது குடும்ப உறவுகளுக்கும் மகிழ்ச்சியுடையதாக வும், நிறைவான வளங்களை வழங்குவதாகவும் அமைய வேண்டுமென மீசாலை வெள்ளை மாவடி விநாயகனின் பாதங்களைப் பணிந்து வேண்டி வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

**திரு.ஓ.விஜயரத்தினம்**

பகுதித்தலைவர் (உயர்தர கலை, வர்த்தகப் பிரிவு)

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி.

---

### சிறந்த நிர்வாகி

திரு.அ.கயிலாயபிள்ளை அவர்கள் ஒரு தசாப்த காலமாக எமது கல்லூரியில் சேவையாற்றி தமது சேவையை நிறைவு செய்து ஓய்வு பெறுகின்றார் என்ற விடயம் என் போன்ற பழைய மாணவர்களுக்கெல்லாம் பெரும் கவலை தருவதாக உள்ளது.

அதிகளவான ஆண் பெண் பிள்ளைகள் கற்கின்ற கலவன் பாடசாலையாகிய இந்துக் கல்லூரியைச் சிறப்பாக வழிநடத்தியவர் என்ற பெருமைக்குரிய அதிபர் திரு.அ.கயிலாயபிள்ளை அவர்கள், பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டு நெஞ்சுரத்துடன் வெற்றி கண்ட அதிபர் அவர்கள் கல்லூரிச் சமூகத்துடன் ஒத்திசைந்து சமூகப் பாங்குள்ள நிர்வாகியாக சிறப்புறப் பணியாற்றியவர்.

அதிபர் சேவையுடன் மட்டும் தனது பணியை வரையறுக்காது சமூக, சமய சேவைகளில் மிகவும் ஆர்வத்துடனும் துடிப்புடனும் செயற்படும் அற்புதமான மனிதராக விளங்கியவர். அதிபர் அவர்களின் ஓய்வு காலம் எல்லா நலன்களும் நிறைந்ததாய் அமைய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**திரு.யோ.ஜெயக்குமார்**, செயலாளர், பழைய மாணவர் சங்கம், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

## வதிவிட கருத்தரங்கு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வருடந் தோறும் நடத்தப்படும் இந்து அறநெறி ஆசிரியர்களுக்கான வதிவிடக் கருத்தரங்கு இந்த வருடமும் நடத்தப்ப டவுள்ளது. இதில் பதுளை, பொலனறுவை மாவட்ட அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான வதிவிடக் கருத்தரங்கு நாவற்குடா இந்து கலாசார நிலையத்தில் சனிக்கிழமை ஆரம்பமாகியது. நாளை செவ்வாய்க்கிழமை வரை நடைபெறவுள்ளது. (வ–14)

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி




தோற்றம் 1959.11.15 மறைவு 2009.02.08

தோற்றம் 1984.02.03 மறைவு 2009.02.10

அமரர் கனக சபாபதிக்குருக்கள் இரகுநாதக்குருக்கள்

அமரர் இரகுநாதக்குருக்கள் கேசவசர்மன்

திதி: பூர்வபக்க சதுர்த்தசி (02.02.2015)

எம் குடும்பத்தின் குல விளக்குகளே! பகலவனாய் நீங்கள் இருந்து
பகிர்ந்து கொண்ட பாசம் இன்று தகர்ந்து போனதுவே!
தாங்கவில்லை எமது உள்ளம் ஆண்டுகள் ஆறுதான் ஆகிடினும்
அகலுமோ எங்கள் துயர்

இல.205/1, முரசுமோட்டை, பரந்தன். குடும்பத்தினர்.

(51341)(4.3.7)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி செல்லம்மா நடேசு



பிறப்பு 28 . 10 . 1935

இறப்பு 26 . 01 . 2013

திதி: சதுர்த்தசி

பாசத்தின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து வழிகாட்டிய எங்கள் தெய்வமே!
ஆண்டிரண்டு சென்றாலும் உங்கள் நினைவுகளில்
நாம் என்றும் வாழ்கின்றோம்.

நந்தாவில் ஒழுங்கை, கொக்குவில். என்றும் நினைவில் குடும்பத்தினர்.

(5642l)(4.3)

## உன் பிரிவின் வடு இதயத்தில் இன்னும் விலகவில்லை



அமரர் **வைரமுத்து பாலச்சந்திரன்**

தோற்றம் 01 . 12 . 1966

மறைவு 14 . 01 . 2014

புன்னகை சேர்ந்த உன் முகமும்
இரக்கம் நிறைந்த மனமும் நிமிர்ந்த உன் நடையும்
நெஞ்சத்தில் இன்னமும் நினைவாய் இனித்திருக்க
நீ மட்டும் எமை விட்டு தொலைவானது ஏன்?
ஓராண்டு கடந்தாலும் உன் பிரிவின் வடு - இதயத்தில்
இன்னும் விலகிடவில்லை
இல்லையென்பது உடலுக்காக இருக்கட்டும்
நீதந்த நினைவுகளும்
உன் உருவம் கழன்ற உயிரும்
எமை உணர்வுகளாய் தழுவியபடி இருக்கட்டும்.

துயருடன்
உன் உடன் பிறப்புக்கள்.

(56425)(4.3.7)

## பயிற்சி வகுப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப்.2

சின்மயா மிஷன் யாழ் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்ய சுவாமிகளால் தைப்பூச தினமான நாளை செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு இல 9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூரில் அமைந்துள்ள சின்மயா ஞானவேல் ஆச்சிரமத்தில் மந்திரம், ஸ்தோத்திரம் ஓதுதல் பயிற்சிக்கான இலவச வகுப்பு ஆரம் பிக்கப்பட உள்ளது.

ஆர்வலர்கள் அனைவரும் வருகை தந்து பயனடையலாம். பின்பு பிரதி செவ்வாய்க் கிழமைகளில் மாலை 4 மணி தொடக்கம் 5 மணி வரை இந்த வகுப்பு ஆச்சாரியாரினால் தொடர்ந்து நடத்தப்படவுள்ளது. (வ)

## கண்ணீர் அஞ்சலி



யா/அருணோதயா கல்லூரியில்
தற்போதைய ஆசிரியரும், முன்னாள்
யா/யூனியன் கல்லூரியின் பௌதீக
வியல் ஆசிரியருமான
**பா.தர்மசீலன்** அவர்களின் திடீர்
மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த
துயரும் அடைகின்றோம்.

அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குவதோடு, அவர்தம் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் பணியாற்றி இடம் மாற்றம் பெற்ற ஆசிரிய நண்பர்கள்.

(56433)(4.3.7)

## 10 ஆம் ஆண்டு நினைவலைகள்

வித்தியாபுரம் ஒட்டுசுட்டானைப்
பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும்
கொண்ட

**இராசையா யோகேஸ்வரன்**



பிறப்பு 1965.01.30 இறப்பு 2005.02.02

நாள்கள் மாதங்களாகி பத்தாண்டுகள் உருண்டோடி விட்டதப்பா
ஆனாலும் உங்கள் நினைவுகள் எம் நெஞ்சை விட்டு அகலவில்லை
நெஞ்சம் பதைக்கின்றது. அந்தக் கொடூர நாளை நினைக்கையிலே- அப்பா!
நீங்கள் எங்களுடன் வாழ்ந்த இனிமையான நாள்களை நினைக்கும் போது
நெஞ்சம் நெருப்பாய் சுடுதைப்பா! யார் கண் பட்டதோ எம் குருவிக் கூடு
கலைந்தது இந்த மண்ணில் உங்களைப் போல்
இனி யாரை நாங்கள் காண்போம் அப்பா!

நித்தம் உங்கள் நினைவுகளுடன்

மனைவி, பிள்ளைகள், மருமகன்மார்.

(C/19231)(4.6.3)

## 31 ஆவது நினைவு நாளும் நன்றி நவிலலும்

அமரர் **கமலா சுப்பிரமணியம்**



அன்னை மடியில் 09 . 08 . 1949

ஆண்டவன் அடியில் 01 . 01 . 2015

"தர்மத்தின் வள்ளலார் நீங்கள்
தவிப்பவர் நிலை கண்டு
இருப்பதைக் கொடுப்பதில்
இன்பம் கண்டவர் நீங்கள்"

கடந்த (01.01.2015) வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குல விளக்கின் வீட்டுக்கிரியைகள் இன்று (02.02.2015) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் வருகை தந்து அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நேரிலும் தொலை பேசி ஊடாகவும் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குமரகோட்டம், வட்டுக்கிழக்கு, வட்டுக்கோட்டை. குடும்பத்தினர்.

(56426)(4.7.3)

## அராலி மேற்கு முன்பள்ளி கட்டட திறப்பு விழா

வட்டுக்கோட்டை, பெப்.2

அராலி மேற்கு சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் முருகேசு தம்மையா ஞாபகார்த்த "மலரும்மலர்கள்" முன்பள்ளியின் கட்டடத் திறப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு முன்பள்ளி பொறுப்பாசிரியை திருமதி சத்தியசீலன் சிவறஞ்சினி தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் வலிமேற்கு பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி கி. செந்தூரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். சிவஸ்ரீ ச.மு.பாஸ்கரக் குருக்கள் ஆசியுரை வழங்குவார். சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறும். (ஒ)

## அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல்


அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்த பூரணைத் தினத்தில் நடத்தி வரும் "அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல்" "பன்னிரு திருமுறைப் பாராயணம்" யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலைய ஆதரவுடன் நாளை செவ்வாய்க்கிழமை காலை 7 மணிமுதல் யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலைய நாயன்மார் மண்டபத்தில் மன்றத் தலைவர் டண்டீஸ்வரி பநாயகம் தலைமையில் மிகச் சிறப்பாகக் கொண்டாட உள்ளனர்.

விரும்பும் அடியார்கள் பங்கு பற்றி பயன்பெறுமாறு மன்ற அமைப்பாளர் சி. கிருஷ்ண மூர்த்தி அறிவித்துள்ளார். (வ)

### மணவாளக் கோல விழா

நீர்வேலி கந்த சுவாமி கோயிலில் தைப்பூசத்தினத்தை முன்னிட்டு மணவாளக்கோல விழா இடம்பெறவுள்ளது. நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது. தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு அன்னதானம் இடம்பெறவுள்ளதுடன் மாலை 5.00 மணிக்கு விசேட பூஜைவழிபாடுகள் இடம்பெறவுள்ளன. இதனைத்தொடர்ந்து சுவாமி மஞ்சத்தில் வீதி வலம் வரவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (வ–10)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



## அமரர் சின்னத்தம்பி இராஜரத்தினம்

அன்னை மடியில்
21 . 09 . 1948

ஆண்டவன் அடியில்
04 . 01 . 2015

சுமை தாங்கியாய் எமக்கிருந்து
பலவழிகள் காட்டி எம்மைப்
பார் போற்ற வழிகாட்டி– இன்று
பரிதவிக்க விட்டு விட்டுப் பறந்தோடி
மறைந்ததென்ன...
தினம் தோறும் உங்கள்
நிகழ்வுகளை மறக்கத்தான்
முடியவில்லை...
உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனை வேண்டுகின்றோம்.

கடந்த 04.01.2015 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் சின்னத்தம்பி இராஜரத்தினம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (02.02.2015) திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (03.02.2015) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம்வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வருகை தந்து அஞ்சலி செலுத்தியோருக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் சகல வழிகளிலும் உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

**தாமரைக்குளத்தடி, துன்னாலை, கரவெட்டி.** (56342)(4.3.7) **குடும்பத்தினர்.**





## உதயனின் 30ஆவது ஆண்டில் மாபெரும் கலை, இலக்கிய போட்டிகளும் ஊக்குவிப்பு பரிசுகளும்!

### மாகாண மட்டத்தில் நீங்கள் பெறப்போகும் பரிசில்கள்

| போட்டிகள் | பிரிவு | தரம் | 1ஆம் பரிசு | 2ஆம் பரிசு | 3ஆம் பரிசு |
|---|---|---|---|---|---|
| சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம் | A | 10.11.12.13 | ரூ.10000 | ரூ.7000 | ரூ.5000 |
| கட்டுரை, ஓவியம் மட்டும் | B | 6. 7. 8. 9 | ரூ.7000 | ரூ.5000 | ரூ.4000 |
| ஓவியம் மட்டும் | C | 3. 4. 5 | ரூ.5000 | ரூ.4000 | ரூ.3000 |

### கவிதைப் போட்டி

பிரிவு A பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று.
கவிதைகள் 40 வரிகளுக்குக் குறையாமலும் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். மரபுக் கவிதையாகவோ, புதுக் கவிதையாகவோ அமையலாம்.
1. ஒழுக்கமே கல்விக்கு உன்னதமாம்.
2. கற்றதன் வழி உயர்வு காண்போம்.

### கட்டுரைப் போட்டி

பிரிவு Aபின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 600 - 750 சொற்கள்.
1. பூகோளமயமாதல்: தமிழர் எதிர்கொள்ளும் சவால்கள்.
2. மாகாணத்திற்கான நிலைபேண்தகு அபிவிருத்தி நடவடிக்கைகள்
3. எமது சடங்குகளில் புலம் பெயர்வினால் ஏற்பட்ட தாக்கங்கள்
4. எமது பண்பாடும் நாம் படும்பாடும்
5. நமது நவீன வாழ்க்கை முறைமையும், விவசாய விளை நிலங்களும்.

பிரிவு B பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 400- 550 சொற்கள்
1. எதிரகாலச் சந்ததியினருக்கான உலகு
2. கிராமியம் எம் உயிர் மூச்சு
3. சுற்றாடல் பேணுவோம்
4. தமிழர் வாழ்வும் வளமும

மூன்று பிரிவுகளாக நடைபெறும் இந்தப் போட்டியில், வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் முதல் 10 இடங்கள் பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும், மாவட்டத்தில் முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே ரூ.3000, ரூ.2000, ரூ.1000 பரிசும் வழங்கப்படும். மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 10 ஆக்கங்கள் மாகாண மட்டப் போட்டி தேர்வில் உள்ளடக்கப்படும்.

### ஓவியப்போட்டி

பிரிவு A தரம் 10.11.12.13 — தமிழர் பாரம்பரிய விளையாட்டில் ஈடுபடுவோர்

பிரிவு B தரம் 6. 7. 8. 9 — பனை வளமும் நாமும்

பிரிவு C தரம் 3. 4. 5 — பண்டிகை நிகழ்வு

உங்கள் ஓவிய ஆக்கங்கள் 35 செமீ x 45 செமீ (14 x18) அளவுடைய வெள்ளை பிறிஸ்டல் போட் அல்லது வெள்ளை நிற கென்ற் (kent) தாளில், நீர் வர்ணம், பேஸ்டல் கலர் சோக் என்பன பயன்படுத்தி வரையலாம்.

### மக்கள் வங்கி அனுசரணையுடன் மாபெரும் சிறுகதைப் போட்டி

பிரிவு A தரம் 10.11.12.13 மாணவர்களுக்கானது. சிறுகதையானது, மாணவர் பிரச்சினையையோ சமூகப் பிரச்சினையையோ மையமாகக் கொண்டு அமையலாம். சிறுகதைகள் ஏ-4 தாளில் இரண்டரைப் பக்கம் தொடக்கம் நான்கு பக்கங்களுள் அடங்கியிருத்தல் வேண்டும். கையால் எழுதியோ, கணினியில் தட்டச்சுச் செய்தோ அனுப்பலாம்.

People's Bank Sisu Udana

#### உதயன் 30ஆவது ஆண்டு ஆக்க இலக்கியத் தேர்வுகள்

பங்குகொள்ளும் ஆக்கம்: சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியம்
(பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறி வெட்டிவிடவும்)
பங்குகொள்ளும் பிரிவு:
தரம் 10, 11, 12, 13 A-பிரிவு / தரம் 6,7,8,9, B-பிரிவு / தரம் 3, 4, 5 C-பிரிவு (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறிவிடவும்)
பங்குபற்றும் மாணவர் பெயர்:-
செல்வன்/செல்வி ..........
சிறுகதை/கவிதை/கட்டுரை/ஓவியத் தலைப்பு
..........
கற்கும் பாடசாலை: ..........
தரம்: ..........
பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்: ..........
வழிப்படுத்திய ஆசிரியர் பெயர்: ..........
ஆசிரியரின் பாடத்துறை: ..........

அதிபர் பரிந்துரை:
மேற்படி ஆக்கம் எமது பாடசாலையில் தரம் ........ இல் கல்வி கற்கும் செல்வன்/செல்வி .......... அவர்களது சுய ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

அதிபரின் ஒப்பமும்
பதவி முத்திரையும்

உதயன்

ஆக்கம் தொடர்பான பணிமனைப் பாவனைக்கு

ஆக்கங்கள் அனைத்தும் உரிய விண்ணப்பப்படிவத்தில், பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு 28.02.2015 ஆம் திகதிக்கு முன் அனுப்ப வேண்டிய முகவரி:

30 ஆவது அகவையில் உதயன்,
மாணவர் இலக்கியத் தேர்வுகள்
ஆசிரியர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

30 அகவையில் உதயன்

# உலகச் செய்திகள்

## தமிழகத்தில் தொழில் வளர்ச்சி முடக்க நிலை

### - கருணாநிதி குற்றச்சாட்டு

சென்னை, பெப். 2
தமிழகத்தில் தொழில் வளர்ச்சி முடங்கியிருப்பதாக தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி குற்றம் சாட்டியுள்ளார்.
அ.தி.மு.க. ஆட்சியில் தொழில் வளர்ச்சி வீழ்ச்சி 3 சதவிகிதமாகவும், வேளாண்மை வளர்ச்சி வீழ்ச்சி 12 சதவிகிதமாகவும் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். வளர்ச்சி இல்லாததால் தமிழகம்; எதிர்மறைத் திசையில் சென்று இருளில் மூழ்கியுள்ளது.
நாட்டை பிற்போக்குத் திசைக்கு இழுத்துச் செல்லும் எதிர்மறைக் கருத்துக்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி மறுப்பு தெரிவிக்காமல் அமைதியாக இருப்பது அதிர்ச்சியளிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (14)

## குழந்தையை தத்தெடுத்த அமெரிக்க பாடகி

காந்திநகர், பெப்.2
பெற்றோரால் கைவிடப்பட்ட இந்தியக் குழந்தையை அமெரிக்க பாடகி ஒருவர் தத்தெடுத்துள்ளார்.
குஜராத் மாநிலம் புஜ் நகரிலிருந்து 130 கி.மீ. தொலைவில் உள்ள ஒரு நகரில் பிறந்து சில தினங்களே ஆன பெண் குழந்தை புதரிலிருந்து கண்டெடுக்கப்பட்டது. பூச்சிகள் கடித்ததால் மூக்கில் பயங்கர காயங்களுடன் இருந்த அந்தக் குழந்தையைக் கண்டெடுத்த உள்ளூர் தொண்டு நிறுவனம் அந்தக் குழந்தையை வளர்த்து வந்தது. இந்நிலையில், அமெரிக்காவைச் சேர்ந்த பாடகியான கிறிஸ்டியன் வில்லியம்ஸ் அந்தக் குழந்தையைத் தத்தெடுத்துள்ளார்.

# கழிவு நீரில் மூழ்கி 10 பேர் உயிரிழப்பு

### உறக்கத்தில் இருந்தவர்களுக்கு நேர்ந்த கதி
### வேலூர், ராணிப்பேட்டையில் பரிதாபச் சம்பவம்



வேலூர், பெப். 2
தோல் கழிவு சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிப்பு தொட்டி உடைந்ததில் அதிலிருந்து வெளியேறிய கழிவு நீரில் மூழ்கி பரிதாபகரமாக 10 பேர் உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் வேலூர் மாவட்டத்தை அடுத்துள்ள ராணிப்பேட்டை சிப்காட் தோல் கழிவு சுத்திகரிப்பு நிலையத்தில், நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.
தோல் தொழிற்சாலைகளின் கழிவுநீர் தேக்கி வைக்கப்பட்டு இருந்த தொட்டி நள்ளிரவு திடீரென வெடித்து, இடிந்து விழுந்தது. இதிலிருந்து வெளியேறிய கழிவுநீர் அருகிலிருந்த தோல் தொழிற்சாலையில் புகுந்ததில் அங்கு உறங்கி கொண்டிருந்த 10 தொழிலாளர்கள் அதில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர்.
ராணிப்பேட்டை சிப்காட்டில், 500க்கும் மேற்பட்ட தோல், இரசாயன தொழிற்சாலைகள் உள்ளன. இதில், 200 தொழிற்சாலைகள் அனுமதியின்றி இயங்கி வருகின்றன. 300 தொழிற்சாலைகளில், அடிப்படை வசதிகள் காணப்படவில்லை என தொழிற்சங்கத்தினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
குறித்த தொழிற்சாலையின் உரிமையாளர்களிடம், மாசு கட்டுப்பாட்டு அலுவலர்கள், சுகாதார அலுவலர்கள், இலஞ்சம் பெற்று வருவதால் நடவடிக்கை எடுக்காமல் உள்ளனர். விபத்து நடந்த சுத்திகரிப்பு நிலையத்தில், அனுமதி பெறாமல் புதிய தொட்டி கட்டப்பட்டுள்ளதும், அதை பயன்பாட்டுக்கு கொண்டு வந்தது குறித்தும், மாசு கட்டுப்பாட்டு வாரியத்துக்கு புகார் அனுப்பப்பட்டுள்ளது. கழிவு நீர் தொட்டி உடைந்ததில் தொழிலாளர்கள் இறக்கநேரிட்டுள்ளதாகவும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
சம்பவத்தில் உயிரிழந்த 10 தொழிலாளர்களில் மேற்கு வங்கத்தைச் சேர்ந்த 9 பேரின் உடல்கள் நேற்றிரவு, ரயில் மூலம் சொந்த ஊருக்கு அனுப்பிவைக்கப்பட்டன. சென்னை மத்திய ரயில் நிலையத்தில் இருந்து கோரமண்டல் விரைவு ரயில் மூலம் உடல்கள் அனுப்பிவைக்கப்பட்டன.
உயிரிழந்த 10 பேரின் குடும்பங்களுக்கு தலா 3 லட்சம் ரூபா நிதி உதவி வழங்கப்படும் எனத் தமிழக அரசு அறிவித்துள்ளது. இதனிடையே, உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு தலா 7 லட்சம் ரூபா நிதியுதவி அளிக்கப்படும் என தென்னிந்திய கழிவு நீர் சுத்திகரிப்பு நிறுவனங்களின் சங்கம் அறிவித்துள்ளது.
இதேவேளை – சுத்திகரிப்பு ஆலையில் ஏற்பட்ட விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு வழங்கும் இழப்பீடு தொகையை அதிகரித்து வழங்கக் கோரி. விடுதலைச்சிறுத்தை கட்சி மற்றும் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் சிட்காட் பொலிஸ் நிலையம் அருகே நேற்று திடீர் சாலைமறியலில் ஈடுபட்டனர். கழிவுநிலைய சுத்திகரிப்பு நிலைய நிர்வாகிகள் மற்றும் மாசு கட்டுபாட்டு வாரிய அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் போராட்டத்தில் வலியுறுத்தியுள்ளனர். (14)

## அத்துமீறி நுழைந்த விமானம் வீழ்த்தப்பட்டது

கராகஸ், பெப். 2
வெனிசுலா வான் எல்லையில் அத்துமீறி நுழைந்த விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டதாக அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
அருபா தீவு அருகே, தங்களது வான் எல்லையில் அத்துமீறி விமானம் ஒன்று நுழைந்த தாகவும் தரையிறக்கும்படி இராணுவம் கூறியதை ஏற்க மறுத்து விமானம் தொடர்ந்து பறந்ததால் அதனை சுட்டு வீழ்த்தியதாகவும் பாதுகாப்புத் துறை அமைச்சர் விளாடிமீர் புட்ரினோ தெரிவித்துள்ளார். (14)

## மொடல் அழகிகள் அதிரடி கைது!

கொச்சி, பெப்.2
போதைப் பொருள் வைத்திருந்தது தொடர்பாக பிரபல மலையாள இளம் நடிகர் ஷைன் டோம் சாக்கோ மற்றும் நன்கு மொடல் அழகிகளை கேரள பொலிஸார் கைது செய்துள்ளனர்.
அடுக்குமாடி குடியிருப்பு காவலாளி கொலை வழக்கு தொடர்பாக, முகம்மது நிஜாம் என்பவரை பொலிஸார் கைது செய்தனர். இது குறித்த விசாரணையில் கொச்சியில் உள்ள நிஜாமுக்கு சொந்தமான அடுக்குமாடி குடியிருப்பை பொலிஸார் நேற்று முன்தினம் சோதனையிட்டனர். இதன்போது கேரளாவை சேர்ந்த புதுமுக இளம் நடிகர் ஷைன் டோம் சாக்கோ, மொடல் அழகிகளான சினேகா, டின்சி, ரேஷ்மா மற்றும் துணை இயக்குநரும் மாடல் அழகியுமான பிளஸ்சியும் இருந்தனர்.
அவர்கள் தங்கிருந்த அறையில் சோதனை நடத்தியபோது 10 லட்சம் மதிப்புள்ள 'கொக்கைன்' என்ற போதைப் பொருள்களுடன் அவர்களை கைது செய்துள்ளனர். (14)

## அக்னி-5 ஏவுகணை சோதனை வெற்றி



டில்லி, பெப். 2
முற்றிலும் உள்நாட்டு தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட, கண்டம் விட்டு கண்டம் பாயும் அக்னி–5 அதிநவீன ஏவுகணை, நேற்றுமுன்தினம் முதன்முறையாக நடமாடும் வாகனத்திலிருந்து ஏவி வெற்றிகரமாகப் பரிசோதித்துப் பார்க்கப்பட்டது.
இது ஒரு தொன் அணு ஆயுதங்களைச் சுமந்துகொண்டு சுமார் 5 ஆயிரம் கி.மீ. தொலைவில் உள்ள இலக்கை தாக்கும் திறன் கொண்டது.
ஒடிஸா மாநிலம் வீலர் தீவில் உள்ள ஐடிஆர் மையத்தின் 4–ஆவது வளாகத்தில் அக்னி–5 ஏவுகணை ஏவப்பட்டது.
3 நிலைகளைக் கொண்ட இந்த ஏவுகணை முதல் முறையாக நடமாடும் செலுத்து வாகனத்தின் மூலம் ஒரு உருளைக்குள் வைத்து ஏவப்பட்டது. மற்ற அக்னி ஏவுகணைகளைவிட இது அதிநவீன வசதிகளைக் கொண்டது. இந்த ஏவுகணை திட்டமிட்டபடி குறிப்பிட்ட இலக்கை தாக்கி வெற்றி பெற்றது என ஒருங்கிணைந்த சோதனை மைய இயக்குநர் எம்.வி.கே.வி.பிரசாத் தெரிவித்துள்ளார். பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக் கழகத்தால் வடிவமைக்கப்பட்ட இந்த ஏவுகணை, 50 தொன் எடையும், 17 மீற்றர் நீளமும் உடையது. இது ஒரு தொன் அணு ஆயுதங்களைச் சுமந்து கொண்டு, தரையிலிருந்து 5 ஆயிரம் கிலோமீற்றர் தொலைவில் உள்ள மற்றொரு தரைப் பகுதியைத் தாக்கும் திறன் கொண்டது. மேலும், சில பரிசோதனைக்குப் பிறகு இந்த ஏவுகணை இராணுவத்தில் சேர்க்கப்படும்.

# உலகச் செய்திகள்

## எரிமலை அருகே பறக்கும் குதிரை



சிட்டி,பெப்.2
மெக்ஸிக்கோவில் எரிமலை அருகே பறக்கும் குதிரையை பெண் ஒருவர் படம்பிடித்தது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.
மெக்ஸிக்கோ சிட்டியில் இருந்து 300 மைல் மேற்கே உள்ள கோலிமா என்ற எரிமலை கடந்த வாரம் வெடித்தது. தற்போதும் புகையை கக்கிக்கொண்டிருக்கும் அந்த எரிமலைக்கு அருகே பறக்கும் குதிரை போன்று தோற்றமளிக்கும் உருவம் ஒன்றை லயோலா என்ற பெண் பார்த்துள்ளார். அப்போது அந்தக் காட்சியை புகைப்படம் மற்றும் வீடியோவாக தனது கமராவில் பதிவு செய்துள்ளார். ஆனால் அதை உற்றுப்பார்த்தபோது குறுகிய மேல்பாகம், பருத்த மத்திய பாகம், கூர்மையான கீழ் பாகம் இருந்ததாகவும் நிச்சயமாக அது பறவை இல்லை என்றும் – அந்த உருவத்தில் எந்த அசைவும் இல்லை என அவர் கூறியுள்ளார். மேலும் சில நிமிடங்களில் அது அவரது பார்வையிலிருந்து மறைந்துள்ளதால், அது நிச்சியம் வேற்றுகிரகவாசி தான் என இணையத்தில் வீடியோவை பார்த்தவர்கள் திட்டவட்டமாகக் கூறியுள்ளனர். (14)

# மசூதியில் குண்டுவெடிப்பு

## 61 பேர் சாவு



இஸ்லாமாபாத்,பெப்.2
பாகிஸ்தானின் சிந்து மாகாணம் ஷிகார்பூரில் உள்ள ஷியா பிரிவு முஸ்லிம்களுக்கான மசூதியில் கடந்த வெள்ளிக்கிழமை சக்திவாய்ந்த வெடிகுண்டு வெடித்துள்ளது. இந்த குண்டுவெடிப்பில் சுமார் 50 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த தோடு பலர் படுகாயம் அடைந்துள்ளனர்.
இதையடுத்து படுகாயம் அடைந்தவர்களுக்கு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வரும் நிலையில், சிகிச்சை பயனின்றி மேலும் 11 பேர் உயிரிழந்துள்ளனர். இதனால் உயிரிழந்தோர் எண்ணிக்கை தற்போது 61 ஆக உயர்ந்து உள்ள நிலையில், இந்த வெடிகுண்டு தாக்குதலுக்கு, தலிபான் தீவிரவாத அமைப்பிலிருந்து பிரிந்து வந்த 'ஜன்துல்லா' என்ற அமைப்பு தற்போது பொறுப்பு ஏற்றுள்ளது.
குண்டுவெடிப்பு நடந்த மசூதியை சிந்து மாகாண முதலமைச்சர் குலாம் அலி ஷா பார்வையிட்டதோடு உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 20 லட்சம் ரூபா நிவாரணம் வழங்க உத்தரவிட்டுள்ளார்.
இந்த நிலையில் இந்த குண்டுவெடிப்பு சம்பவத்தைக்கண்டித்துநேற்று முன்தினம் சிந்து மாகாணத்தில், தலைநகர் கராச்சிமற்றும்பல்வேறு இடங்களில் பொது மக்கள் பெருமளவில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.இந்தப்போராட்டத்தில் நூற்றுக்கணக்கான ஷியா பிரிவினர் கலந்து கொண்டுள்ளனர். மேலும், இந்தக் குண்டுவெடிப்பில் 8 ஆயிரம் பேரை விசாரணைக்காக பொலிஸார் சுற்றிவளைத்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (14)





## 2 ஆவது பத்திரிகையாளரும் தலை துண்டித்துக் கொலை

டமஸ்கஸ்,பெப்.2
சிரியாவில் உள்ள ஐ.எஸ். தீவிரவாதிகள், ஜப்பானைச் சேர்ந்த பத்திரிகை ஒளிப்படக்காரர் கெஞ்சி கோடோவின் தலையை வெட்டி கொலை செய்து காணொலியை வெளியிட்டுள்ளனர்.
ஜப்பானைச் சேர்ந்த பத்திரிகை ஒளிப்படப்பிடிப்பாளர் கெஞ்சி கோடோ மற்றும் தனியார் பாதுகாப்பு துறை நிறுவனர் ஹருணா யுகாவா ஆகிய இருவரையும் ஐ.எஸ்.தீவிரவாதிகள் பிணைக் கைதிகளாக வைத்திருந்தனர். மேலும், ஜப்பானிடம் ஆயிரத்து 225 கோடி பணயத் தொகை கேட்டு 72 மணிநேர கெடுவும் விதித்திருந்தனர்.
இந்தநிலையில், முதலில் அந்த கெடு முடிந்ததாக அறிவித்து ஹருணா யுகாவாவை தலை துண்டித்து கொலை செய்த காணொலி ஒன்றை வெளியிட்டனர். இதையடுத்து மற்றொரு பணயக் கைதியான கெஞ்சி கோடோவை விடுவிக்க ஜோர்டான் சிறையில் இருக்கும் ஐ.எஸ்.தீவிரவாத இயக்க தலைவரின் தங்கை சஜிதா அல்–ரிஷாவியை விடுதலை செய்ய வேண்டும் என நிபந்தனை விதித்திருந்தனர்.
இந்நிலையில்கெஞ்சிகோடோவை உயிருடன் விடுவிக்க ஜப்பான் அரசுக்கு ஐ.எஸ்.தீவிரவாதிகள் விடுவித்த கெடு முடிவடைந்ததால் கெஞ்சி கோடோவை ஐ.எஸ்.தீவிரவாதிகள் தலையை வெட்டி கொலை செய்துள்ளனர்.
மேலும்,இதுதொடர்பானகாணொலியை ஐ.எஸ். தீவிரவாதிகள் நேற்று முன்தினம் இரவு வெளியிட்டுள்ளனர் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.
ஜப்பான் அரசுக்கு ஒரு செய்தி என்று வெளியிடப்பட்டுள்ள இந்த காணொலியில் பேசும் முகத்தை மூடிக்கொண்ட தீவிரவாதியின் வார்த்தை உச்சரிப்பு பிரித்தானியரைப் போல இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேலும், ஐ.எஸ். தீவிரவாதிகளின் இந்த கொடூரச் சம்பவத்துக்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ள நிலையில், ஜப்பான் அரசு தற்போது தீவிரவாதிகளால் வெளியிடப்பட்டுள்ள காணொலி உண்மைதானா என்ற ஆய்வில் இறங்கியுள்ளது. (14)

## ஆணாகப் பிறந்த பெண்ணுக்கு இரட்டைக் குழந்தைகள்

லண்டன்,பெப்.2
பிரித்தானியாவில்பிறப்பால்ஆணாகப்பிறந்த பெண் நபர் ஒருவர், அழகான இரட்டை குழந்தைகளை பெற்றெடுத்துள்ளது மருத்துவ துறையில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. பிரிட்டனில் உள்ள பெட்போர்ட் நகரில் வசித்து வரும் ஹைலி ஹயனாஸ் (வயது–28) என்பவர் பிறப்பால் மரபணு ரீதியாக ஆண் ஆவார்.
இவர் பிறக்கும்போதே, பெண்களுக்குரிய கர்ப்பப்பை, இனப் பெருக்க உறுப்பு இல்லாமல், ஆண்களுக்கு இருக்கக் கூடிய ஓலு குரோமோசோம்களுடன் பிறந்துள்ளார்.
இவரது, 19 வயதில் மருத்துவர்கள் மேற்கொண்ட சோதனையில், இவரால் கர்ப்பம் தரிக்க முடியாது என தெரிவித்ததால், மனமுடைந்து இவர், விரக்தியின் உச்சத்துக்கேசென்றிருந்தார். இருப்பினும் நம்பிக்கையை இழக்காத அவர் பல தொடர் பரிசோதனைகளை மேற்கொண்டார். கடைசியாக பிரிட்டனில் உள்ள மருத்துவமனையில் பரிசோதித்தபோது, அவரது வயிற்றுக்குள் புதிதாக 'மில்லி மீற்றர்' அளவுள்ள கர்ப்பப்பை வளர்வதை மருத்துவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
மில்லி மீற்றர் அளவுள்ள கர்ப்பப்பை மேலும் வளர வாய்ப்பு இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்ததை தொடர்ந்து, சுமார் 4 வருடங்கள் கர்ப்பப்பை ஆரோக்கியமாக வளர காத்திருந்தார்.



அதன் பின்னர் 'ஆணின் உயிரணுக்களை பெண்ணின் கர்ப்பப்பைக்குள் செலுத்திகுழந்தைபெறும் சிகிச்சைக்கு மருத்துவர்கள் பரிந்துரைத்தனர். சில மாதங்களுக்குப் பின்னர் அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள், அவரது கர்ப்பப்பைக்குள் இரண்டு குழந்தைகள் ஆரோக்கியமாக வளர்வதாகத் தெரிவித்தனர். இந்த செய்தியை கேட்டதும் தான் மகிழ்ச்சியின் எல்லைக்கே சென்றதாகவும் தெரிவித்துள்ளார் ஹயனாஸ். (14)

# கருத்து

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## புதிய பிரதம நீதியரசர் சமூகத்துக்கு பெருமை சேர்க்க வாழ்த்துவோம்

மின்னாமல் முழங்காமல் மழைபெய்வதுபோன்று, இலங்கையின் மிக உயர் நீதிமன்றத்தின் 44 ஆவது பிரதம நீதியரசராக, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழரும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் மாணவருமான கே.ஸ்ரீபவன் அவர்களின் நியமனமும், அவர் பதவி ஏற்ற வைபவமும் நடந்தேறியுள்ளன.

இந்த நியமனத்தில் எதுவித அரசியல் கலப்பும் இருந்ததில்லை. திறமை, முதுநிலை மற்றும் சட்ட ரீதியாக இந்த நியமனம் இடம்பெற்றுள்ளது. அதனால், அரசியல் ஆடம்பரங்களோ பெரிதா ஊடக விளம்பரங்களோ காணப்படவில்லை. அது மட்டுமன்றி, இந்த நியமனத்தில் அரசியல் தலையீடு இருக்கவில்லை என்பது முக்கிய அம்சம்.

நிறைவேற்று அதிகாரத்தை ஓரங்கட்டி 18 ஆவது திருத்தத்தை ஒழிப்பதாக வாக்குறுதியளித்துப் பதவிக்கு வந்துள்ள மைத்திரிபால - ரணில் விக்கிரமசிங்க அரசு, நீதித்துறையில் தலையிடுவதில்லை என்ற கோட்பாட்டை இதில் நிலைநிறுத்தியிருப்பது வரவேற்கத்தக்கது. பாராட்டுக்குரியது.

உயர்நீதிமன்றத்தின் 43 ஆவது பிரதமநீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க அப்பதவியில் அமர்த்தப்பட்ட விதமும், பின்னால் அப்பதவியிலிருந்து அவர் தூக்கி எறியப்பட்ட விதமும் நாட்டில் பெரும் சர்ச்சைகளைத் தோற்றுவித்திருந்தன. அவர் நியமனத்தை அப்போதைய சட்ட த்தரணிகள் சங்கமே எதிர்த்துக் குரல் எழுப்பியிருந்தது. முதுநிலையாளர்கள் இருக்கக்கூடிய தாக அவருக்கு அப்பதவி வழங்கப்பட்டிருந்தது என்பது அவர்களது குற்றச்சாட்டுக்களில் ஒன்று. பின்னர் வாழ்வின் எழுச்சி (திவிநெகும) சட்டவிவகாரத்தில் அவர் மேற்கொண்ட நிலைப்பாடு அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குப் பிடிக்காததால், தனது நிறைவேற்று அதிகாரத்தையும் நாடாளுமன்றத்தில் தமக்கிருந்த பலத்தையும் வைத்து அவரைப் பதவி நீக்கம் செய்தார்.

அத்தோடு தரிக்காமல், சட்டமா அதிபராக இருந்த மொஹான் பீரிஸை உயர் நீதிமன்ற பிரதம நீதியரசராக நியமித்துக்கொண்டார். நீதித்துறையில் ராஜபக்ஷ அரசினரின் இந்த வித தலையீடு இலங்கைசட்ட அறிஞர்களாலும் சர்வதேச மற்றும் பொதுநலவாய நாடுகளின் சட்ட நிபுணர்கள் அமைப்புக்களாலும் கடுமையாக விமர்சிக்கப்பட்டு வந்தது.

புதிய அரசு பதவி ஏற்றபோது புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதம நீதியரசராகவிருந்த மொஹான் பீரிஸை புறக்கணித்துவிட்டு, சிரேஷ்ட நீதியரசரான கே.ஸ்ரீபவன் முன்னிலையிலேயே பதவி பிரமாணம் செய்து கொண்டார். இந்த நிலையில் மொஹான் பீரிஸ் தாமாகவே பதவி விலகுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. சட்டத்தரணிகள் சங்கமும் அவரைப் பதவி விலகும்படி கோரி ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டது.

அவர் அசையவில்லை. பதவி விலகுவதற்காக பல்வேறு கோரிக்கைகளையும் நிபந்தனைகளையும் கூட அவர் முன்வைத்தார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அதைவிட தேர்தல் முடிவுகள் வெளிவந்து கொண்டிருந்த வேளையில் அலரி மாளிகையில் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் சதி முயற்சியின் போது விடியற்காலை நேரத்தில் மொஹான் பீரிஸும் அங்கிருந்துள்ளார் என்பது மிகப்பெரும் ஒழுக்க மீறல் என்பது குற்றச்சாட்டு. இதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவே சாட்சி கூறுபவராக உள்ளார்.

இந்தச் சூழ்நிலையில் மொஹான் பீரிஸ் ஜனாதிபதியால் பதவி நீக்கப்பட்டு கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டார். அவர் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயம் கிடைத்தமையில் திருப்தி கொண்டு பதவி ஏற்ற மறுநாளே அதிலிருந்து விலகிக் கொண்டார்.

இந்த நிலையில் அரசியல் தலையீடு இன்றி அரசமைப்புக்கு உகந்த முறையில் கே.ஸ்ரீபவன் பிரதம நீதியரசராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய அரசு பதவி ஏற்ற வேளையில் உயர் நீதிமன்றத்தின் புதிய பிரதம நீதியரசராகத் தமிழர் ஒருவர் நியமனம் பெற்றிருப்பது, தமிழர்களுக்குப் பெருமை சேர்ப்பதாகும். அத்துடன் அப்பதவியை அவர் மேலும் சிறப்புறச் செய்து தமக்கும், சமூகத்துக்கும் நாட்டுக்கும் பெருமை சேர்க்க வாசகர்களின் சார்பில் வேண்டும் என்று வாழ்த்துவோம்.

# தமிழர் வழி தனிவழி உணருமா தமிழர் தலைமை?

■ சேரலாதன்



கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன ஒன்றிணைந்து ஆட்சியமைக்கப் போவது ஓரளவு உறுதியாகிவிட்டது. இதனால் அந்த மாகாண சபைகளில் அதிகளவு உறுப்பினர்களைக் கொண்டுள்ள தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் திட்டம் நிராசையாகவே மாறியுள்ளது.

கடந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தலின்போது முஸ்லிம் காங்கிரஸுடன் இணங்கிச் செயற்படுவதற்கான தனது விருப்பத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பகிரங்கமாகவே தெரிவித்து வந்தது. முதலமைச்சர் பதவியை மு.காவுக்கு விட்டுக்கொடுக்கவும் அது உடன்பட்டது.

ஆனால், தேர்தல் முடிவுகள் வெளியாகியதன் பின்னர் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தமது உண்மையான சுயரூபத்தைக் காட்ட ஆரம்பித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதுகில் குத்திவிட்டு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் ஐக்கியமாகிவிட்ட அவர் தமது கட்சிக்கு அமைச்சர் பதவிகளைப் பெற்றுக்கொடுத்ததுடன் திருப்தியடைந்துவிட்டார்.

அப்போது முதலமைச்சர் பதவி தொடர்பாக அவர்வாயைத்திறக்கவேயில்லை.தமது அமைச்சர் பதவியைத் தக்க வைப்பதிலேயே அவரது முழுக் கவனமும் இருந்தது. கிழக்கு மாகாணசபையின் அமைச்சரவையில் ஒரு தமிழர்கூட இடம் பெறாத அவலநிலைகூட அப்போது காணப்பட்டது. இதனால் கிழக்கில் வாழுகின்ற தமிழ் மக்கள் கொதித்துப் போய்க் காணப்பட்டனர்.

ஆனால் கூட்டமைப்பின் தலைவர்கள் கிழக்கில் வாழுகின்ற தமிழ் மக்களின் மன நிலையைக் கருத்தில் கொள்ளாது முஸ்லிம் மக்களுடன் இணைந்து அரசியல் வேலைகளை மேற்கொள்வது தொடர்பாகக் கருத்துக்களைக் கூறி வந்தனர். இதற்கு அங்குவாழும் தமிழர்களிடமிருந்து எதிர்ப்பும் கிளம்பியது.

கடந்த மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது வடக்கு, கிழக்கில் வாழுகின்ற தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குத் தமது அமோக ஆதரவை வழங்கியதன் காரணமாகவே அவரால் மஹிந்த ராஜபக்ஷவை வீழ்த்த முடிந்தது. கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும், முஸ்லிம் கட்சித் தலைவர்களும் மஹிந்தவுக்கு எதிராக வாக்களிக்குமாறு கூறியிராது விட்டாலும் தமிழர்களும், முஸ்லிம்களும் மைத்திரிபால சிறிசேனவுக்கே வாக்களித்திருப்பார்கள். ஏனென்றால் பாதிப்புக்களின் வலி அவர்களுக்குத்தான் தெரியும்.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் தமிழர்களும், முஸ்லிம்களும் இணைந்து செயற்படுவதன் அவசியம் குறித்து மீண்டும் ஆர்வத்துடன் கருத்துக்கள் பகிரப்பட்டன. இதற்கொரு சிறந்த சந்தர்ப்பமும் விரைவில் வாய்த்தது. கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பும், முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து ஆட்சியமைக்க வேண்டும் என்ற கோரிக்கை மீண்டும் எழுந்தது. ஆனால் முதலமைச்சர் பதவி யாருக்கு என்பதில் இழுபறி நிலை ஏற்பட்டது. இந்த விடயம் ஜனாதிபதி வரை சென்ற போதிலும், அவர் நழுவல் போக்கையே கடைப்பிடித்தார். பிரதமர் ரணில் கூட்டமைப்பினரின் கோரிக்கையைத் தாம் ஏற்பதாகக் கூறினார்.

ஆனால் தற்போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும், ஐக்கிய தேசியக் கட்சியும், முஸ்லிம் காங்கிரஸுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளமை தமிழர்களை ஏமாற்றும் ஒரு செயலெனவே எண்ணத் தோன்றுகின்றது.

ஆகவே தமிழ்த் தலைவர்கள் இனியும் தமிழ், முஸ்லிம் ஐக்கியம் என்ற வெற்றுக் கோஷங்களை எழுப்புவதில் பயனொன்றும் கிடைத்துவிடப் போவதில்லை.

புதிய ஜனாதிபதிகூட தமிழர் களின் வாக்குகளால் தாம் வெற்றி பெற்றதை மறந்து செயற்படுவதாகவே தோன்றுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியும் கிழக்குத் தமிழர்களின் முதுகில் குத்திவிட்டது.



ஆகவே தமது அரசியல் எதிர்காலம் தொடர்பாகத் தமிழர்கள் தனிவழியில் செல்ல வேண்டிய நிலை உருவாகிவிட்டது என்பதை தமிழ்த் தலைவர்கள் உணர்ந்துகொண்டால் அதுவே போதும்.

சிங்கள மூலம் -
சீ.ஜே.அமரதுங்க
(லங்காதீப)
தமிழில் - வீ. எஸ். ரீ.

# நல்லாட்சிக்கு பாதகம் வருமா?

## நூறுநாள் வேலைத்திட்டம் எதிர்நோக்கும் சவால்கள்

ஜனாதிபதி மைத்திரிபால, தாம் சுதந்திரக்கட்சியின் தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டமை தொடர்பான விமர்சனங்களுக்குப் பதிலளிக்கும் வகையில், தாம் அவ்விதம் செயற்பட்டிருக்காது விட்டால் தமது நூறுநாள்கள் வேலைத்திட்டத்தை நிறைவேற்றுவதில் சங்கடங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும் எனத் தெரிவித்துள்ளார். ஆனால் அதன்மூலம் அவரது நல்லாட்சி என்ற முன்னெடுப்புக்குப் பாதகம் ஏற்படக்கூடும் என்பதே இன்றுள்ள பிரச்சினையாகும். நாட்டு மக்களில் பெரும்பாலோர் அவரது அந்தச் செயற்பாடு தமக்குத் துரோகம் இழைக்கும் ஒன்றாக அமைவதாகக் கருதுவதையும் அவதானிக்க முடிகின்றது.

புதிதாக பொறுப்பேற்ற இந்த அரசு, கடந்தகாலத்தில் பல தரப்பட்ட வழிகளில், ஊழல்கள் புரிந்த அரசியல்வாதிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும் என்பதே இந்த நாட்டு மக்களது எதிர்பார்ப்பாக அமைந்திருந்தது. ஜனாதிபதித் தேர்தலில் அவர்கள் இந்த அளவுக்கு உத்வேகத்துடன் பொது எதிரணி வேட்பாளருக்கு ஆதரவு வழங்கியதே, ஊழல் புரிந்த அரசியல்வாதிகளைத் தோற்கடித்தாக வேண்டும் என்பதற்கு மேலாக, அவர்கள் மேற்கொண்ட குற்றங்களுக்கு உரிய தண்டனை வழங்கப்படவேண்டும் என்ற நோக்கிலுமே ஆகும்.

தேர்தலின்போது வாக்காளர்கள் மத்தியில் நாட்டில் ஜனநாயக வாதம் நிலைநாட்டப்பட வேண்டுமென்ற எதிர்பார்ப்பே பெருமளவில் காணப்பட்டது. அரசமைப்பு விதிகளின் மூலம் நிறைவேற்று அதிகாரம் கிட்டியிருந்ததன் காரணமாகவே எதேச்சதிகார நிர்வாகத்தை ஒரு தரப்பினராலோ அல்லது ஒரு குடும்பத்தினராலோ முன்னெடுக்க முடிந்தது என்பதால் நிறைவேற்று அதிகார நடைமுறை ஒழிக்கப்பட வேண்டும் என நாட்டு மக்களில் பெரும்பாலோர் கருதினர். அதற்காக சுயாதீன ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படுமெனவும், நூறு நாள்கள் வேலைத்திட்டத்தில் அது உள்ளடக்கப்படுவதாகவும் பொது வேட்பாளரது தேர்தல் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் மீது நம்பிக்கை வைத்தே நாட்டு மக்கள் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்தனர். பொதுமக்களது அந்தத் தேவையை முன்னிறுத்தியே ஏனைய முக்கிய அரசியல் கட்சிகளும், பொது அமைப்புக்களும் பொதுவேட்பாளருக்கு தேர்தலில் ஆதரவு வழங்கின.

அந்த வகையில் மேற்குறித்த தரப்புக்களுடன் சர்வதேச தரப்புக்களும்கூட இந்த மக்கள் எழுச்சிக்குப் பின்புலமாக நின்று குறித்த இலக்கை எட்ட ஆதரவு வழங்கும் வகையில் செயற்பட்டனவே தவிர, அவற்றுக்குத் தமது தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் இலக்கை இரண்டாம் பட்சமாகக் கருத வேண்டியே ஏற்பட்டது. அந்த நிலையில் நாட்டு மக்களது உத்வேகம் மிக்க எழுச்சியால் பெறப்பட்ட இந்த அதிகாரத்தை முன்னெடுத்து, முன்கொண்டு செல்வது குறித்தே தற்போது கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

ஒருவகையில் இது முன்னைய அரசின் ஏகாதிபத்தியப் போக்குக்கு எதிரான, சட்டத்தின் ஆட்சியை நலிவுறச் செய்து குடும்ப ஆட்சிமுறையை முன்னெடுக்க முயன்றமைக்கு எதிரான, பொது மக்களது நிதியை ஊழல், முறைகேடுகள் மூலம் கொள்ளையடித்ததற்கு எதிரான, பொது மக்களது எழுச்சிக்குக் கிட்டிய வெற்றியாகக் கொள்ளத்தக்கதே. நாட்டின் நல்லாட்சிக்கான அவசியம் குறித்து பொது வேட்பாளருக்கு ஆதரவான கட்சிகளும், பொது அமைப்புக்களும், பொது மக்களது பேராதரவுடன் எழுச்சி கொண்டு செயற்பட்ட அதேவேளை, தமது நிர்வாக அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ளவும், தொடர்ந்து சுக போகங்களை அனுபவிக்கும் நோக்கிலுமே முன்னைய அதிகாரத் தரப்பு செயற்பட்டது.

இடம்பெற்ற ஊழல்கள், மோசடிகள் நிறைந்த நிர்வாகத்தை மாற்றியமைக்க எழுச்சியுடன் செயற்பட்ட மக்களது நோக்கம் கடந்த அரசின் நிர்வாகத்தின் கீழ் இடம்பெற்ற இலஞ்சம், ஊழல், முறைகேடுகளைப் பகிரங்கப்படுத்தி அவற்றுக்குப் பொறுப்பானவர்களுக்கு உரிய தண்டனை பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்பதே. அவ்விதம் அவர்கள் தண்டிக்கப்பட்டால்தான் எதிர்காலத்தில் அத்தகைய குற்றங்கள் இடம்பெறாது தவிர்க்கப்படமுடியும் என்பது பொது மக்களது ஆணித்தரமான நம்பிக்கையாகும்.



ஆனால் இன்று நடப்பதென்ன? லஞ்சம், ஊழல், முறைகேடுகளுக்கு எதிராகச் சகல சக்திகளையும் ஒன்றிணைத்துச் செயற்பட்ட இன்றைய ஜனாதிபதி, அத்தகைய செயற்பாடுகளை மேற்கொண்டவர்கள் அடங்கிய சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பைக் கையேற்றுள்ளார். அந்த வகையில் குற்றமிழைத்தவர்களை அவர்களது குற்றங்களினின்றும் பாதுகாக்கும் நிலைக்குத் தம்மை உட்படுத்திக் கொண்டுள்ளதை நாட்டு மக்களால் ஜீரணிக்க இயலாது போயுள்ளது.

ஜனாதிபதி மைத்திரியாலவின் நூறுநாள்கள் வேலைத்திட்டத்துக்கு ஆதரவு வழங்கும் ஏனைய தலைவர்கள் ஜனாதிபதியின் குறிப்பிட்ட திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமானால் அதற்கு நாடாளுமன்றத்தின் ஆதரவு தேவை என்பதாலேயே ஜனாதிபதி சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை ஏற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதாகக் கூறுகின்றனர். ஆனால் அதற்காக ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட அரசியல்வாதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் பாதுகாப்பளிப்பது நாட்டின் பொது மக்களது எதிர்பார்ப்பைப் புறம்தள்ளும் ஒன்றாகும். சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவி தொடர்பில் அத்தகைய இணக்கப்பாடேதும் இடம்பெற்றிருக்குமானால் அது கவலைதருமொன்றே.

நாட்டு மக்களது இத்தகைய சந்தேகம் மற்றும் அச்சத்தை உறுதிப்படுத்தும் வகையிலேயே அண்மைய நாள்களின் செயற்பாடுகள் அமைகின்றன. ஊழல் மோசடிகளைக் கண்டறிவதற்காக பெரிய அளவில் சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுவருகின்றபோதிலும், அத்தகைய நடவடிக்கைகளில் பெரிய அளவிலான ஊழல் மோசடிகள் குறித்து கண்டறியப்பட்டதாக செய்தியெதுவும் வெளிவந்ததாகத் தோன்றவில்லை. ஏதோ அங்கொன்றும், இங்கொன்றும் என்ற வகையிலேயே சுற்றிவளைப்புக்களும் சோதனைகளும் இடம்பெறுவதாகவே கருத முடிகிறது. அத்தகைய விசாரணைகள்கூட சட்டதிட்ட வரம்புக்கு உட்பட்ட வகையிலான நடவடிக்கை என்ற விதத்தில் நடவடிக்கைகள் பிற்போடப்படுவதாக, அல்லது காலத்தை இழுத்தடிப்பவையாக அமைவதாகவே கருதத் தோன்றுகிறது.

அத்தகைய ஊழல் மோசடிகள் குறித்துக் கண்டறியப்படும் சந்தர்ப்பங்களிலும், அது குறிப்பிட்டதொரு பிரமுகருக்காக, வேறொரு தரப்பினரால் கூலி அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறதே தவிர, அந்தச் செயற்பாட்டின் மூல கர்த்தா எவரென உறுதிப்படுத்தப்படாத நிலையே காணப்படுவதாகக் கூறப்படுகிறது. இதனால் ஊழல் மோசடிகளை மேற்கொண்ட தரப்பினர், சட்டத்தினால் தண்டிக்கப்படாது மீண்டும் தமது அத்தகைய செயற்பாடுகளில் ஈடுபட வாய்ப்பு ஏற்பட்டு விடுமோ என்ற அச்சமும் சந்தேகமும் பொதுமக்கள் மத்தியில் நிலவுகிறது.

முன்னைய ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஊழல், மோசடி, மிரட்டல், அச்சுறுத்தல் போன்ற பல தரப்பட்ட சட்ட விரோதச் செயற்பாடுகளால் நாட்டின் சகல தரப்பினரும் அச்சத்துடனேயே வாழநேர்ந்தது. தாம் தோல்வியடைய நேர்ந்திருந்தால் தாமும் தமது குடும்பத்தினரும் கொலை செய்யப்பட்டிருப்போம் என்று ஜனாதிபதி மைத்திரிபாலவே கூறும் அளவுக்கு முன்னைய ஆட்சியாளர் தரப்பினரின் அடாவடித்தனங்களும் சண்டித்தனங்களும் உச்சம் பெற்றிருந்தன.

ஆனால் நாட்டு மக்களது பலத்துக்கு முன்னால் சில நாள்களுக்கிடையிலேயே முன்னைய அதிகாரத் தரப்பினரின் அதிகாரபலம் தலைகீழ் நிலைக்கு உள்ளாகியது. எவரும் எதிர்ப்பார்த்திராத விதத்தில் எழுச்சி பெற்ற மக்கள் பலத்தின் முன்னால், அரச அதிகாரம், குண்டர்கள்பலம், பணப்பலம் ஆகிய அனைத்தும் பின்வாங்கிக் கொண்டன. அந்தத் தரப்பினருக்கு, உரிய பாடம் புகட்டும் விதத்தில் நாட்டு மக்கள் அவர்களைத் தோற்கடித்தனர்.

சுயாதீன ஆணைக்குழுக்கள் எதுவும் செயற்படாத ஒரு நிலையிலேயே, நீதித்துறை பின்னடைவு கண்டிருந்த ஒரு நிலையிலேயே, நாட்டு மக்கள் முன்னைய ஆட்சியாளர்களுக்கு எதிராக, அணிதிரண்டு அச்சமின்றிச் செயற்பட்டு-அவர்களது அதிகாரத்தைப் பறித்தெடுத்து, நல்லாட்சி என்ற நம்பிக்கையூட்டிய புதிய மனிதர் ஒருவரிடம் அதிகாரத்தை ஒப்படைத்துள்ளனர்.

எனவே, தற்போது தலைதூக்கியுள்ள பிரச்சினை, நாட்டு மக்கள் எந்த மாற்றமொன்றுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்களோ, அந்த மாற்றத்தின் மூலம் உருவான புதிய அரசு, அவர்களது ஆத்மார்த்தமான எதிர்பார்ப்பை நிறைவேற்றி வைத்தாக வேண்டும் என்பதாகும்.

# கருத்து




## அடிக்கடி களவாடப்படும் சைக்கிள்

சில தினங்களுக்கு முன்னர் சுன்னாகம் நகரப் பகுதியிலுள்ள வங்கியொன்றுக்கு சைக்கிளில் சென்றிருந்தேன். சைக்கிளை வங்கியின் முன் நிறுத்திவிட்டு வங்கியினுள் சென்று அலுவல்களை முடித்துவிட்டு வந்து பார்த்தபோது எனது சைக்கிள் அவ்விடத்தில் இல்லாததைக் கண்டு அதிர்ச்சியடைந்தேன்.

அவ்விடத்தில் எங்கும் தேடியும் சைக்கிளைக் காணவில்லை. பின் வங்கியினுள் சென்று நடந்தவற்றைக்கூறி வங்கியின் பாதுகாப்புக் கமராவைப்பார்த்தபோது அங்கு ஒரு நபர் சுற்றித்திரிவதும், சைக்கிளுக்கு அருகில் சென்று பூட்டை உடைத்து அதனைத் திருடிச் செல்வதும் அதில் தெளிவாகப் பதிவாகியிருந்தது. பின்பு நான் இதனை ஆதாரமாகப் கொண்டு பொலிஸ் நிலையத்தில் நடந்தவற்றைக் கூறி முறைப்பாட்டைப் பதிவு செய்துவிட்டு வந்தேன்.

சுன்னாகம் நகரப் பகுதியில் அடிக்கடி பல சைக்கிள்கள் திருட்டுப் போயிருப்பதாகவும் இது வரை 15 சைக்கிள்கள் காணாமற் போயிருப்பதாகவும் நகரவாசிகள் தெரிவிக்கின்றனர். எனவே, இதனைத் தடுப்பதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுப்பார்களா?

*கோ.சுந்தரலிங்கம், சுன்னாகம்.*

## கட்டாக்காலிகளுக்கு கட்டுப்பாடு வேண்டும்

குருநகர்ப் பகுதியில் இரவு நேரங்களில் கட்டாக்காலிகளாக வீதிகளில் படுத்துறங்கும் வளர்ப்பு மிருகங்களால் இந்த வீதிகளினூடாக இரவு நேரங்களில் பயணிப்போர் மிகுந்த சிரமங்களை நாளாந்தம் அனுபவித்து வருகிறார்கள். இந்தப் பகுதிக் குடியிருப்பாளர்கள் சிலரால் வளர்க்கப்படும் ஆடுகள், நாய்கள் என்பன வீதிகளிலேயே படுத்து இரவுப் பொழுதைக் கழிக்கின்றன. வீதியால் வருபவர்களைப் பார்த்து நாய்கள் குரைப்பதுடன் அவர்களை நோக்கிக் கடிப்பதற்குப் பாய்ந்து வருவதால் பாதிக்கப்பட்டோர் பலர் கவலை தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் உள்ள சிலர் அதிகாலை வேளைகளில் இங்குள்ள வீதிகள் சிலவற்றினூடாக நடைப் பயிற்சியிலும் நாளாந்தம் ஈடுபட்டு வருகிறார்கள். இவர்களும் கட்டாக்காலி நாய்களால் கடிபட நேர்வதாகவும் தெரிவித்தனர். மேலும் இந்த மிருகங்கள் வீதிகளை அசிங்கப்படுத்துவதால் இந்த வீதிகளின் சுகாதாரமும் பாதிக் கப்பட்டு வருகிறது. வீதிகளில் பயணிப்போரின் நன்மையைக் கருத்திற்கொண்டு கால்நடைகளை வளர்ப்போர் தமது வீடுகளில் இவற்றைக் கட்டி வளர்க்க முன்வரவேண்டும் எனவும் தவறின் கட்டாக்காலிகளாக வீதிகளில் திரியும் மிருகங்களை அப்புறப்படுத்துவதற்கு யாழ். மாநகரசபை உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனப் பாதிக்கப்பட்டோர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

*க.யேசுதாஸ், குருநகர்.*

### கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம.

# சாண் ஏற முழம் சறுக்குதே !

பொதுமக்களுக்குச் சொந்தமான வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயம் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் 25 வருடங்களாக இருக்கின்றது. இந்தப் பெரும் நிலப்பரப்பு தங்கம் விளையும் பூமி. அந்தளவு தூரத்துக்கு செளிப்பான பிரதேசம், கடந்த காலங்களில் இராணுவத்தினரின் பிடியில் இருந்தாலும் நிலம் தரிசாகவே இருந்தது.

போர் முடிந்ததன் பின்னர் படையினருக்கு வேலையில்லை. இதனால் இங்கு தோட்டச் செய்கை ஆரம்பிக்கப்பட்டது. உல்லாச விடுதி ஆரம்பிக்கப் பட்டது. இவை எல்லாம் படையினரை ஆளணியாகக் கொண்டே செயற்படுத்தப்பட்டது. இதற்காகப் படையினருக்கு எந்த மேலதிக கொடுப்பனவும் கொடுக்கப் படவில்லை. இதனால் மிகக் குறைந்த செலவில் இராணுவத்தினால் இவற்றைச் செய்ய முடிந்தது. இது உள்ளூர்ச் சந்தையாளர்களுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியிருந்தது.

மஹிந்த அரசின் காலத்தில் இவை செய்யப்பட்டன. இவற்றுக்கு மேலாக, இராணுவத் தளபதிகளுக்கு பல ஏக்கர்கள் விஸ்தீரணமுள்ள காணிகளில் மாளிகை வீடுகள், ஜனாதிபதிக்கான வாசஸ்தலம், கோல்ப் விளையாட்டு மைதானம் என்று இன்னோரன்ன பல்வேறு வசதிகள் பொதுமக்களின் காணிகளில் ஏற்படுத்தப்பட்டன.

இந்த நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. மஹிந்த அரசு கவிழ்ந்து மைத்திரி அரசு பொறுப்பேற்றது. மைத்திரி பொறுப்பேற்றதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சந்திப்பை நடத்தினார். இந்தச் சந்திப்பில், இராணுவத்தினர் நடத்தி வரும் வியாபார நடவடிக்கைகள் நிறுத்தப்படும் என்றும், பொதுமக்களின் காணிகள் படிப்படியாக விடுவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

காணிகள் விடுவிப்பதற்குரிய பேச்சுக்கள் நடந்தாலும் செயலுருவில் எந்தவொரு காணியும் இன்று வரையில் விடுவிக்கப்படவில்லை. ஒரு நாளில் சரத்பொன்சேகாவுக்கு மன்னிப்புக் கொடுத்து, ஒரு நாள் பிரதம நீதியரசராக ஷிராணியை நியமிக்க முடிந்த மைத்திரி அரசுக்கு, இந்தக் காணி விடுவிப்புக்கு நேரம் எடுக்க வேண்டிய எந்த அவசியமும் இல்லை.

காணி விடுவிப்பில் மந்தம் காட்டப்படும் அதே வேளை, வலி.வடக்கில், மக்கள் காணியை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டிருக்கும் 'தல்செவன' விடுதியில் புதிய நீச்சல் தடாகத்தையும், கிளப்பையும் இராணுவத் தளபதி திறந்து வைத்திருக்கின்றார். இராணுவத்தினரின் வியாபார நடவடிக்கைகள் நிறுத்தப்படும் என்று அரசு தெரிவித்திருந்த நிலையில், இராணுவத்தினரால் நிர்வகிக்கப்படும் 'தல்செவன' விடுதி நவீனத்துவப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாடுகளைப் பார்க்கும் போது சாண் ஏற முழம் சறுக்குவதைப் போல்தான் இருக்கின்றது. தமிழ் மக்கள் சிறுபான்மையினர். அவர்களால் இந்த நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. இவ்வாறான கூற்றுக்கள் கடந்த தேர்தலில் பொய்த்துப் போயிருந்தன. நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் மே மாதம் நடக்க இருக்கின்றது என்பதை நினைவில் இருத்திக் கொண்டு, ஆகக் குறைந்தது சாண் ஏறாவிட்டாலும், முழம் சறுக்காவிட்டால்சரி.

பத்தி எழுத்து




## கூட்டெண் பலன்கள் 9-3

செவ்வாயில் குரு சேர்ந்த யோகம் உடைய இவர்கள் உயரமாக, சிவப்பாக அழகாக இருப்பர். கம்பீரமான வாட்ட சாட்டமான கவர்ச்சி உருவம் உடையவர்கள்.

தெய்வ பக்தி, பூசை, சாத்திர சம்பிரதாயங்களில் நம்பிக்கையிருக்கும். ஒழுக்கம், கட்டுப்பாடு இருக்கும். வாழ்க்கையில் ஏதாவதொரு நோக்கம் கொண்டு உழைப்பர். குடும்பப் பற்று, பாசம் இருக்கும். எடுத்த காரியத்தை எப்படியும் முடித்து விடுவர். அறப்பணி, கோயில் பணி என்று பொதுப்பணிகளில் ஈடுபடுவர்.

காதல் திருமணம் பிரச்சினையைத் தரும். தொழில், கலையறிவை விரும்பி அடைவர். திருமண பாக்கியம் உண்டு.

நல்ல துணை அமையும்.

ஆராயும் புத்தியும் சுயநல நோக்கமும் உடைய இவர்கள் நன்கு படிப்பர். படிப்பு அமையாவிடினும் அனுபவத்தில் தொழிலறிவை அதிகமாகப் பெற்றுக்கொள்வர். சிக்கனத்தை அறிவுறுத்துவர். தொடக்கத்தில் ஆரம்பித்த தொழிலை விடாமல் கடைசி வரை நடத்தி ஆதாயம் தேடுவார்கள்.

அணு விஞ்ஞானம் முதல் ஆத்திசூடி வரை அறியாத சங்கதிகளே இல்லை என இருப்பர்.

தோல்நோய், எக்ஸிமா, வயிறு தொடர்பானகோளாறு, போன்ற நோய்கள் தாக்கக் கூடும். கபம், வாதம் தொல்லை தரும்.

## கூட்டெண் பலன்கள் 9-4

இந்த எண்காரர்கள் செவ்வாயில் ராகு சேர்ந்த ஆதிக்கப் பலன் உடையவர்கள். உயரமாகவும் பருமனாகவும் இருப்பர். உடல் முழுக்க முடி நிறைந்திருக்கும்.

நல்லவரான இவர்கள் மிகவும் ஜாலியான பேர் வழியாக இருப்பார்கள். இரக்கமுள்ளவர்கள். பிரதிபலன் எதிர்பாராமல் பிறருக்கு உதவி செய்வர். ஊனமுற்றவர், அநாதைகள், ஏழைகள் என்றால் இவர்களுக்கு மிகவும் கருணை பிறக்கும். அதிகம் படிப்பர். நன்றாகப் பேசுவர். அறிவு தட்சணியம் உள்ளவர். எதையும் ஊன்றிக் கவனிப்பர். எவரையும் எதையும் சரியாக எடைபோட்டு விடுவர். யாரும் இவர்களை வெறுக்க முடியாது. பிறர் மகிழ்ச்சியில் இவர்கள் குறுக்கிட மாட்டார்கள்.

காதல் வசப்படுவர். திருமண வாழ்க்கை தள்ளிப் போகும். சிலருக்கு திருமணம் நடந்தாலும் நிலைக்காது. சகோதர சகோதரிகளிடம் அன்பு வைத்திருந்தாலும் எவருடனும் சேரமாட்டார்கள். பொலிஸ், இராணுவம், தீயணைப்புப் படை, மருத்துவமனையில் செவிலியர் எனப் பணிபுரிவர். எரிபொருள், எண்ணெய் வியா பாரம் செய்வர். அச்சகம், பத்திரிகை, நூலகம், பதிப்பகம் நடத்துவர். ஸ்டூடியோ நடத்துவர். கதை, கட்டுரை எழுது வார்கள். வாதசம்பந்தமானநோயும், உஷ்ணம் தொடர்பான நோயும் தாக்கும், வயிற்று வலி, கை, கால் முடங்கல், கல்லீரல் கெடுதல் என்பன ஏற்படும்.

# கண்ணீர் வடித்தால் அழகுகெடும்



சின்னத்திரை நாடகங்களில் வரும் பெண்களைப் போல எப்போதும் அழுது கொண்டே இருந்தால் அழகு குறையும் என்று சமீபத்திய ஓர் ஆய்வு தெரிவித்துள்ளது. மேலும் இதுபோன்ற பெண்களை ஆண்களுக்கு அறவே பிடிக்காது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு இரக்க குணம் அதிகம். எப்போதும் அதிகள்வு உணர்ச்சி வசப்படுவார்கள். சிறு கஷ்டம் என்றால் கூட உடனே அழுது விடுவார்கள். தமது பிரச்சினை மட்டுமன்றி பிறரின் துன்பத்துக்காகவும் அழுது விடுவார்கள்.

இந்த நிலையில் இஸ்ரேலை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் இதுதொடர்பானஆய்வொன்றை மேற்கொண்டனர். இதில் ஆண்களும், பெண்களும் பங்கேற்றனர். அவர்களில் பெண்களை மட்டும் தனிக் குழுவாகப் பிரித்துப் பரிசோதனை செய்தனர். அந்த குழுவில் மொத்தம் 60 பெண்கள் இருந்தனர். பெண்கள் அமர்ந்திருந்த தனி அறையில் மிகவும் மோசமான அழுகைக் காட்சிகள் கொண்ட திரைப்படம் திரையிடப்பட்டது. சுமார் அரை மணி நேரம் படம் ஓடியது. இதனால் பெண்களுக்கு கண்களில் கண்ணீர் வழியத் தொடங்கியது. அப்போது அறைக்குள் நுழைந்த ஆராய்ச்சியாளர்கள் படம் பார்த்துக் கண்ணீர் வடித்த பெண்களின் கண்ணீரைச் சோதனைக் குழாய்களில் சேகரித்தனர். கண்ணீர் வராத பெண்களுக்காக மற்றொரு சோதனைக் குழாயில் உப்பு கலந்த நீரை தயார் செய்தனர். பின்னர் கண்ணீர் வடிந்த பெண்களின் முகத்தில் உண்மையான கண்ணீரையும், கண்ணீர் வராத பெண்களின் முகத்தில் உப்புநீரையும் பேசியல் செய்து தடவினார்கள்.

இப்போது எவருக்கு உண்மையானகண்ணீர், எவருக்கு பொய்யான கண்ணீர் என்பது ஆய்வாளர்களைத் தவிர மற்றவர்களுக்கு தெரியவில்லை.

இந்த நிலையில் வெளியே இருந்த ஆண்கள் சிலரை உள்ளே அழைத்து அந்தப் பெண்களின் அருகில் சென்று பேசச் செய்தார்கள். அப்போது ஆண்களின் முகத்தில் ஏற்படும் மாறுதல்களைத் துல்லியமாக பதிவு செய்தனர். அதே வேளையில் ஆண்களுக்கு, காதல் உணர்வை தோற்றுவிக்கும் டெஸ்ட்ரோஜன் ஹோர்மோன் அவர்களது உடலில் எந்தளவு சுரக்கிறது என்பதையும் ஆய்வு செய்தனர். ஆய்வின் முடிவில் கண்ணீர் வடிக்கும் பெண்களை ஆண்களுக்கு பிடிக்காது என்றும், அவர்களது அழகு குறையும் என்றும் தெரியவந்தது. எனவே பெண்களே, அழுவது அழகல்ல. சிரித்த முகத்துடன் இருங்கள். துன்பம் எப்போதும் உங்களை நெருங்காது..



# பாதுகாப்பு உங்கள் கைகளில்...

இரவானாலும், பகலானாலும் ரயிலில் பயணம் செய்யும் போது ஆள்களே இல்லாத அல்லது ஒரு சிலர் மட்டுமே இருக்கும் பெட்டிகளில் ஏறாதீர்கள். ஆள்கள் இருக்கும் பக்கமே ஏறுங்கள்.

ஓட்டோவில் தனியே பயணம் செய்ய வேண்டிய தருணம் வந்தால், ஓட்டோவில் ஏறும் போதே தொலைபேசியில் உங்கள் வீட்டாருக்கோ இல்லை நண்பருக்கோ அழைத்துப் பேசத் தொடங்குங்கள். எங்கு இருந்து எங்கு செல்கிறீர்கள் என்பதைச் சொல்லி விட்டு தொடர்ந்து இறங்கும் இடம் வரும் வரை அழைப்பைத் துண்டிக்காமல் பேசிக் கொண்டே செல்லுங்கள்.

பஸ் நிலையம், ரயில் நிலையம், பஸ் தரிப்பிடம் என எங்கு நின்றாலும் ஏதேனும் ஒரு குடும்பம் நிற்கும் பக்கமோ இல்லை பெண்கள் கூட்டமாக நிற்கும் பக்கமோ நில்லுங்கள். தனியே நிற்காதீர்கள்.

இரவில் வீதியில் தனியாக நடக்க வேண்டி வந்தால், அச்சத்தோடு தலையை குனிந்த படி நடக்காதீர்கள். நிமிர்ந்து எல்லா பக்கமும் நோட்டம் விட்ட படி நடவுங்கள். கேலி கிண்டல் செய்யும் ஆண்களை எப்போதும் கண்டு கொள்ளாதீர்கள். முறைக்காதீர்கள். உங்கள் காதில் எதுவுமே விழாதது போல நினைத்துக் கொண்டு நடையைக்கட்டுங்கள். பெண்கள் தன் குடும்ப பொருளாதாரத்தை உயர்த்த வேண்டும் என்ற நல்ல நோக்கில் தான் சொந்த ஊரை விட்டு விடுதியில் தன் வாழ்க்கையைக் கழித்துக் கொண்டிருக்கிறார்கள். உங்களுக்கு உங்களை விட பெரிய பாதுகாப்பு யாருமில்லை என்பதை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள்.



ஓம் விஸ்வப் பிரம்மனே நமஹ

# 4 ஆம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 21.12.1948

விண்ணில் 19.01.2011

## அமரர் சந்திரா சிவகுருநாதன்

திதி 02-02-2015

(சதுர்த்தசி)

நாட்காட்டி சொல்கின்றது
ஆண்டுகள் நான்கு கடந்தனவென்று
ஆனாலும் ஆருயிர் அன்னையே
நீ கூறிய வார்த்தைகளும்
காட்டிய பரிவும் எம்மை
நம்ப விடவில்லை.......அதை
உருவமாய் உன்னை காணவில்லை
ஆனாலும் அன்னையே
அருவமாய் உன்னை உணர்கின்றோம்.......!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

"குருஸ்தான்"
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்

ஆக்கம்

# நகைச்சுவை ஆக்கங்களின் ஆசான்
# பொ.சண்முகநாதன்



இல்ங்கையில், தமிழில் நகைச் சுவை ஆக்கங்களை கடந்த ஐம்பது வருடங்களுக்கும் மேலாக எழுதி வரும் மூத்த எழுத்தாளர் பொ.சண் முகநாதன், இன்று (02.02.2015இல்) தமது எழுபத்தைந்தாவது வயதைப் பூர்த்தி செய்கிறார்.
அதனை முன்னிட்டு--
அவரது எழுத்துக்களின் சிறப்புக் குறித்து ஈழத்தின் முதன்மை எழுத் தாளர்களில் ஒருவரும் பிரபல விமர் சகருமான கே.எஸ்.சிவகுமாரன் தமது "சொன்னற் போல" என்ற நூலில், **பத்தி எழுத்தூடாக நகைச்சுவையும் சிந்தனையும்** என்ற தலைப்பில் எழுதிய நயப்புரை இங்கு பிரசுரமாகிறது. (ஆ-ர்)

முதுநிலை எழுத் தாளர் பொ.சண்முக நாதன் அனுபவம் வாய்ந்தஒருசிறந்த பத்தி எழுத்தாளருமாவார்.
யாழ்ப்பாணத்திலிருந்து வெளி யாகும் 'உதயன்' பத்திரிகையில் அவர் நெடுங்காலமாகப் பத்தி எழுத்தாளராக இருந்து வருகி றார். அவருடைய நகைச்சுவை, சிந்தனை ஆகியவற்றின் வெளிப் பாடாக பத்திகளில் தொகுப்பு இரண்டு நூல்களாக சென்னை மணிமேகலை பிரசுரத்தினா டாக வெளிவந்துள்ளன. அவற் றுள்ளே 2006 இல் வெளிவந்த நூலின் பெயர் "சிரிப்போம் சிந் திப்போம்".
அவருடையமுதலாவதுநூலுக்கு மதிப்புரை எழுதியது போன்றே, இந்த 214 பக்க நூலுக்கும் நான் கணிப்புரை வழங்குகிறேன். "சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் பண்பும், எழுத்தும் இலகுவாக எவருக்கும் சித்திக் கிறது எனச் சொல்ல முடியாது. இலகுவாகவும், எளிமையாக வும் எடுத்துக்கொண்ட பொரு ளைப் பரிவர்த்தனை செய்யும் ஆற்றல்பலருக்கு,எளிதில்வருவ தில்லை. இந்தப் பின்னணி யிலே, ஆழமான செய்திகளை, இலகுநடையில் வாசகரிடம் பேசுவது போன்று, நகைச் சுவை யையும் கலந்து பொ.சண்முக நாதன் எழுதக் கூடியவர்.
இவருடைய இரண்டாவது புத்த கத்திலே 49 'பத்திக் கட்டுரை கள்' சேர்க்கப்பட்டுள்ளன. முத லாவது பத்தி, "ஐயா" என்ற பேச்சு வழக்குச் சொற்பிரயோ கம் பற்றியது.
ஒக்ரோபர் முதலாம் திகதி (2007) எனக்கு 71 வயதாகி விடும். வயது முதிர்வு காரண மாகவும், நக்கலாகவும், மரியா தைக்காகவும் என்னை நண்பர் கள், இளைஞர்களும் "ஐயா" என்றும் "சிவகுமார்" என்றும் அன்புடனோ, அங்கதமாகவோ அழைப்பதுண்டு.
இந்த இரண்டு சொற்களுமே எனக்குப்பிடிக்காதவை.என்னை வெறுமனே 'சிவா' என்றோ, கே.எஸ்.சிவகுமாரன் என்றோ கூறுவதையே நான் விரும்புகி றேன். வெறுமனே "சிவகுமா ரன்" என்று அழைக்கப்படுவதை யும் நான் விரும்புவதில்லை.
இவற்றுக்கு எல்லாம் காரணங் கள் உள்ளன. ஈழத்து எழுத்து லகில் பல "சிவகுமார்"களும் இருக்கின்றார்கள்.உதாரணமாக பாலசுப்பிரமணியம் சிவகுமார் (சரிநிகர்) சிதம்பரப்பிள்ளை சிவகுமார், பத்திரிகையாளர் சிவகுமார், தமிழருவி சிவகுமா ரன், சிவலிங்கம் சிவகுமாரன், இன்னும் சிலர். எனவே "கே.எஸ். சிவகுமாரன்" என்றழைக்கப் படுவதையே நான் விரும்புகிறேன்.
இந்த "ஐயா" விவகாரம் பற்றி 'அங்கிள் சண்' என்று நமது எழுத்தாளர் பொ.சண்முகநாதன், தமது நூலிலே முதலாவது கட்டு ரையில் இவ்வாறு எழுதுகிறார்:–
"இப்பொழுதெல்லாம் "ஐயா" என்று அழைத்தால் அழைப்ப வர் மரியாதை கொடுக்கிறார் என்றோ அழைக்கப்படுபவர் மரியாதைப்படுத்தப்படுகிறார் என்றே சொல்ல முடியாது. "வய தானவர்" எனச் சுட்டும் ஒரு கேள்விச் சொல்லாகவே அதை எண்ண வேண்டியுள்ளது. (இந் தியாவில்) இந்த 'ஐயா' அவ மதிப்பு எப்பொழுதோ ஆரம்ப மாகிவிட்டது எனச் சொல்ல லாம். அங்கு பேருந்து நடத் துநர்கள், தள்ளுவண்டிக்காரர் கள் போன்றோர், 'ஏறய்யா', 'இறங்கைய்யா', 'போய்யா', 'வாய்யா' என்று சொல்லுவார் கள். நாமோ அதிலே பொதிந் துள்ள ஏளனத்தால் கூனி குறுக வேண்டும்..."
இவ்வாறு உண்மையைத் தமக் கேயுரிய பாணியில் எழுதும் பொ.ச.வின் 'சிரிப்போம் சிந் திப்போம்' என்ற நூலுக்கு முன் னாள் 'கலைச்செல்வி'யின் ஆசி ரியரும், சிறந்த எழுத்தாளர் களுள் ஒருவருமான சி.சிவ சரவணபவன் (சிற்பி) அணிந் துரை எழுதியிருக்கிறார்.
"வாசகர்களை எப்படியாவது சிரிக்க வைக்க வேண்டும் என் பதற்காக இல்லாதது பொல் லாதது"கள் எழுதாமல், அபத்த மான, நடக்கவே முடியாத கற்பனைகளுக்கு எழுத்து வடி வம் கொடுக்காமல், தான் கண்ட வற்றையும் கேட்டவற்றையும் வாசகர்களுக்கு ஏதோ ஒரு வகையில் பயன்படும் விதத்தில் எளிமையும், இனிமையும், தன் மையும், மென்மையும் கலந்த நடையில் 'சண் அங்கிள்' எழு திய இந்தக் 'கதைக் கட்டுரைகள்' சமகால சமுதாயக் கண்ணாடி யாகத் திகழ்கின்றன" என்று 'சிற்பி' வாழ்த்திருக்கிறார்.
"உதயன்", "சஞ்சீவி" பத்திரிகை களின்பிரதமஆசிரியர்ம.வ.கான மயில்நாதனின் அவதானிப்பும் இங்கு குறிப்பிடத்தக்கது.
"ஒரு நிகழ்வை அல்லது விட யத்தைப் பிரதானமாக எழுத வந்து, அதனோடு சேர்த்துப் பலப்பல தகவல்களையும் சங் கதிகளையும் ஆழ அகலமும் சுவையும் விரவி நிற்கச் சொல் லும் அவரது எழுத்துக்கள் தனி ரகமும் தனித்தரமும் மிக்கவை... இளம் சந்ததியினருக்கு அறி முகம் செய்யும் ஆவணங்களாக வும் திகழ்கின்றன என்பது மிகை யல்ல"
இந்தநூலிலே, அனேகமாகசகல கட்டுரைகளுமே சுவாரஸ்ய மாய் எழுதப்பட்டுள்ளன. எனக்கு மிகவும் பிடித்தவற்றுள், பின் வரும் கட்டுரைகள் நிறையத் தகவல்களைத் தருகின்றன.
மூத்த பத்திரிகையாளர்கள், யாழ்ப்பாணத்துப் பத்திரிகை கள், கணவர் ஓடிற்றர், குடை நிழலிலிருந்து, சைக்கிளும் ஒரு நாள் சிகரம் ஏறியது, உலகம் சுற்றும் வீடியோ கசெட், ஆட்டுப் பட்டித் தெரு மட்டும் ஏன் அப் படியே, மழை விட்டும் தேர்தல் தூவானம், நின்று போன அந்த நீண்ட பயணம், அகராதியில் இல்லாததும் உண்டா?, யாழ்ப் பாணத்திலிலும் ஒரு பஞ்சிகா வத்தை, ஆசைபற்றி அறைய லுற்றேன், ஏ–9 கண்டி வீதியிலி ருந்து அறம் செய்ய விரும்பு; ஆனால் புத்திஜீவிக்கும் அது பிடிக்குமா?, அடப்பாவிகளே... எங்கே போனீர்கள் இன்னும் சில.
இந்தப்புத்தகம் பழையவர்களும் புதியவர்களும் படித்து மகிழக் கூடிய தகவல் தொகுப்பு.

வணிகம்




# செலான் வங்கியின் பல்நாணய பயணிகள் அட்டை

செலான் வங்கியானது இலங்கையின் முதலாவது பல்– நாணய பயணிகள் அட்டையை (multi-currency Travel Car–) 2014 ஜூன் மாதத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது. அதனால் சர்வதேச பயண அனுபவமானது இப்போது புதிய பரிமாணத்திலான அணுகல்வசதி, பயன்பாடு மற்றும் பாதுகாப்பு தன்மை போன்றவற்றை கொண்டதாக மீள் வரையறை செய்யப்பட்டுள்ளது.
ஐக்கிய அமெரிக்க டொலர், ஸ்ரேலிங் பவுண்ட், யூரோ, சவூதி அரேபிய றியால் மற்றும் ஆஸ்திரேலிய டொலர் போன்ற பல்–நாணய அலகுகளை உள்ளடக்கியதாக விநியோகிக்கப்படுவதுடன் மைக்ரோ சிப் உள்ளடங்கி யுள்ள செலான் பயணிகள் அட்டையானது உலகின் எந்தவொரு பாகத்தில் இருந்தவாறும் மேற்குறிப்பிட்ட ஐந்து நாணய அலகுகளிலும் பயன்படுத்துனர்கள் ஏககாலத்தில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளக் கூடிய மிகவுயர்ந்த சௌகரியத்தை அளிக்கின்றது.
எந்த நாணய அலகை பயன்படுத்தவுள்ளார் என்பது தொடர்பில் வாடிக்கையாளர் வங்கிக்கு அறிவிக்க வேண் டிய அவசியமில்லை.
மாறாக தமக்கு விருப்பமுடைய எந்தவொரு நாணய அலகுக்காக உலகின் எந்தப் பாகத்திலும் இந்த அட்டையை இலகுவான முறையில் பயன்படுத்த முடியும் என்பதால் இது சிரமமற்றதுமாகும். இந்த அட்டையானது குறித்த நபர் சென்றடைகின்ற நாட்டின் நாணய அலகு போன்று இலகுவாக மாறிக் கொள்ளும் (பரிவர்த்தனையாகும்) சிறப்பியல்பைக் கொண்டது. இதனால், வாடிக்கையாளர்கள் நாணய மாற்றுக்காக கட்டணங்களைச் செலவிடுவது தவிர்க்கப்படுகின்றது.
முற்கொடுப்பனவு அடிப்படையிலான வீசா அங்கீகாரம் பெற்ற ஒரு அட்டையான இது உடனுக்குடன் உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்படும் வசதியை உங்களுக்காக தன்னுடன் கொண்டு வருகின்றது. அதுமட்டுமன்றி, வீசா அங்கீகாரம் பெற்ற 2.2 மில்லியன் ATM நிலையங்களில் இலவசமாக பணத்தை மீளப் பெறக்கூடிய மிக உன்னத சௌகரியம் மற்றும் உலகெங்குமுள்ள 30 மில்லியனுக் கும் அதிகமான வர்த்தக நிலையங்களின் ஊடாக கொடுக்கல்– வாங்கல்களை மேற்கொள்வதற்கான வசதி போன்றவற்றையும் இந்த அட்டை அளிக்கின்றது. இதற்கு மேலதிகமான அனுகூலமாக திகழும் தவறற்ற ஒன்லைன் பரிவர்த்தனை வசதியானது பொருள் கொள்வனவுசார் உலகத்தையே பாவனையாளருக்கு கொண்டுவந்து சேர்க் கின்றது.
சிரமங்களின்றி பயணம் மேற்கொள்வதன் முக்கியத் துவத்தை நாம் உணர்ந்து கொண்டுள்ள அதேநேரம் மன அழுத்தம் மற்றும் கவலை இல்லாத பயண அனுபவம் ஒன்றைப் பெற்றுக் கொள்ளவே ஒவ்வொருவரும் விரும்புகின்றனர் என்று நாம் நம்புகின்றோம்.
அந்த வகையில், வெளிநாட்டு நாணயங்களை பாதுகாப் பான முறையில் அணுகிப் பயன்படுத்தும் விதத்திலமைந்த சிரமமற்றதும் சௌகரியமானதுமான மிகச் சிறந்த பய ணத்தை இலங்கையருக்கு ஏற்பாடு செய்து கொடுப்பதற்கு வழிவகுக்கும் இந்தத் தீர்வை வழங்குவதையிட்டு நாம் பெருமிதம் அடைகின்றோம். – என்று செலான் வங்கியின் பொது முகாமையாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியு மான கபில ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

# அலரி மாளிகையில் இருந்தமை தவறே!

## மஹிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

கொழும்பு, பெப்.2

"ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டு வரும் சந்தர்ப்பத்தில், தேர்தல்கள் ஆணையாளராகிய நானோ அல்லது பிரதம நீதியரசரோ அலரி மாளிகையில் இருந்திருக்கக் கூடாது" என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.



"தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் வேட்பாளரான முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தங்கியிருந்த அலரி மாளிகைக்கு நானும் பிரதம நீதியரசரும் சென்றிருக்கக் கூடாது.

தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருக்கும் போது, அரச அதிகாரிகளான நானும், பிரதம நீதியரசரும் தேர்தலில் போட்டியிட்ட ஒரு வேட்பாளரின் வீட்டில் இருப்பது, தொழில் ஒழுக்க விதிகளுக்கு முரணானது "– என்று அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் தினமன்று இரவு பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் அலரி மாளிகையில் தங்கியிருந்தமை குறித்து, சிங்கள ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே தேர்தல்கள் ஆணையாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ற)

## போதை வர்த்தகத்தை ஒடுக்க நடவடிக்கை

### மைத்திரி அரசு தீர்மானம்

கொழும்பு, பெப்.2

போதைப் பொருள் வர்த்தகத்துக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு மைத்திரிபால தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது என்று கூறப்படுகின்றது.

அதற்காக மேல் மாகாண பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர தலைமையில் விசேட பொலிஸ் பிரிவு ஒன்று நிறுவப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

"போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுவோர், விநியோகம் செய்வோர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் தொடர்பிலும் விசாரணை நடத்தப்படவுள்ளது. போதைப் பொருள் கடத்தல் நடைபெறுகின்றது என்று சந்தேகிக்கப்படும் நாட்டின் அனைத்துப் பகுதிகளும் கண்காணிக்கப்படும்"– என்று சட்டம் ஒழுங்கு அமைச்சர் ஜோன் அமரதுங்க கூறினார்.

"சர்வதேச போதைப் பொருள் வர்த்தகத்தின் மத்திய நிலையங்களில் ஒன்றாகத் தற்போது இலங்கை மாறியுள்ளது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண நடவடிக்கைஎடுக்கப்படும்"– என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ற)

## அமைச்சர்களின் தொகையை குறைப்பதற்குத் தீர்மானம்

### 19ஆவது அரசமைப்பு திருத்தத்தில்

கொழும்பு, பெப்.2

நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள 19 ஆவது அரசமைப்பு திருத்தத்தின் கீழ் அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கையை தடுக்க 30ஆக மட்டுப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதித் தேர்தலின் போது வழங்கிய வாக்குறுதியின் படி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை திருத்தியமைக்கும் அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தை இந்த மாதம் நாடாளுமன்றத்தில் நிறை வேற்றிக் கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது.

19 ஆவது அரசமைப்பு சட்டத் திருத்தத்தின் கீழ் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்தல், சுயாதீன ஆணைக் குழுக்களை பலப்படுத்துதல் மற்றும் தேர்தல் முறையில் மாற்றத்தைக் கொண்டு வருதல் ஆகிய முக்கிய ஆலோசனைகள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்ளப்படவுள்ளன.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்தும் திட்டத்தின் கீழ் பதவிக் காலத்தை 4 ஆண்டுகளாகக் குறைத்தல், ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கு பொறுப்புக் கூறல், ஜனாதிபதி நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்துதல் போன்ற திருத்தங்கள் கொண்டு வரப்படவுள்ளன என்றும் அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ற)



மகாவலி அபிவிருத்தி அமைச்சரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த வியாழக்கிழமை மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சென்றார். அதிகார சபையால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். (ற)

## 235 பேருக்கு கடந்த ஆண்டு எயிட்ஸ் தொற்று

கொழும்பு, பெப்.2

2014ஆம் ஆண்டு இலங்கையில் எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸ் தொற்றுக்கு உள்ளான 235 பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாலியல் நோய்கள் மற்றும் எயிட்ஸ் தடுப்புத் தொடர்பான தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் பணிப்பாளர் சிசிர லியனகே கூறினார்.

இனங்காணப்பட்டவர்களில் பெரும்பாலானோர் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாலியல் தொழிலாளர்கள், போதை ஊசி மருந்துாட்டல்களைப் பயன்படுத்துவோர், சுற்றுலா வழிகாட்டிகள், கடற்கரை உதவியாளர்கள் எயிட்ஸ் தொற்றுக்கு உள்ளாகும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர். கடந்த ஆண்டு எயிட்ஸ் தொற்றுக்கு உள்ளான 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

இது தொடர்பான விழிப்புணர்வு வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன என்றும் என்றும் லியனகே குறிப்பிட்டார். (ற)

## பெருந்தெருக்கள் அமைச்சால் ரூ.50 பில்லியன் வீண் விரயம்

### விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாம்

கொழும்பு, பெப்.2

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கீழ் இயங்கி வந்த பெருந்தெருக்கள் அமைச்சால் சுமார் 50 பில்லியன் ரூபா வீண் விரயமாக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைக் காட்டிலும், 50 பில்லியன் ரூபா மேலதிகமாகச் செலவிடப்பட்டுள்ளது என்றும் தெவிக்கப்படுகின்றது.

இதில் பெருமளவு நிதி கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது செலவிடப்பட்டது என்றும் பெருந் தெருக்கள் அமைச்சால் கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட செலவுகளில் 70 சதவீதமானவை தேவையற்ற செலவுகள் என்றும் அமைச்சர் கபீர் காசிம் தெரிவித்துள்ளார்.

பொய்யான செலவுக் கணக்குகள் காட்டப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டுள்ள அவர், மொரட்டுவ பல்கலைக் கழக நிபுணர்களின் உதவியுடன் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் குறிப்பிட்டார். (ற)

## 100 ஆண்டு பழைமையான புத்தர் சிலை திருட்டு

கொழும்பு, பெப்.2

பதுளை அந்தெனிய கங்காராம புராண ரஜமகா விகாரையில் இருந்து சுமார் 100 வருடங்கள் பழைமையான, சமாதி நிலையில் காணப்படும் புத்தர் சிலை திருடப்பட்டுள்ளது. அத்துடன் சிறிய, பித்தளையிலான புத்தர் சிலைகள் இரண்டும் திருடப்பட்டுள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பதுளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற)

## 2 யானைக் குட்டிகளை ஒப்படைத்தார் கோத்தா

கொழும்பு, பெப்.2

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் சட்டரீதியாக இருந்ததாகக் கூறப்படும் யானைக் குட்டிகள் இரண்டையும் அவர் ஒப்படைத்துள்ளார் என்று சுற்றுலாத்துறை பிரதியமைச்சர் வசந்த சேனாநாயக்க தெரிவித்தார். இந்த இரண்டு யானைக் குட்டிகளும் பின்னவல சரணாலயத்துக்கே ஒப்படைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

இதிலொரு யானைக்குட்டி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால், கோத்தபாய ராஜபக்ஷவிடம் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டு யானைக் குட்டிகளையும் தம்மால் பராமரிக்க முடியாது என்று பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் தன்னிடம் தெரிவித்ததாக அமைச்சர் வசந்த சேனாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.



சரித்த, சாரிகா ஆகிய இரண்டு யானைக்குட்டிகளே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதில் சாரிகா என்ற யானைக்குட்டியே முன்னாள் ஜனாதிபதியால் வழங்கப்பட்டுள்ளது என்றும் பிரதியமைச்சர் மேலும் தெரிவித்தார். (ற)

# செய்திகள்

## மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், பெப்.2

கந்தரோடை வற்றாக்கைப்பதி விசாலாட்சி அம்பாள் சமேத ஸ்ரீ விஸ்வநாத சுவாமி கோவில் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தினை முன்னிட்டு எதிர்வரும் வியாழக்கிழமை காலை 6 மணிமுதல் விநாயக வழிபாடு ஆரம்பமாகி எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிமுதல் பி.ப 4 மணிவரை நடைபெறவுள்ளதாகவும் ஆலய பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர். (வ–10)

## தாமரை நூல் வெளியீட்டு விழா

மாங்குளம், பெப்.2

கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தின் "தாமரை" நூல் வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் பாடசாலையின் அதிபர் ச.நித்தியானந்தம் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவன் கலாநிதி முருகர் குணசிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக நெடுங்கேணி கோட்டக் கல்விப் பணிப்பாளர் ந.ரங்கநாதன், முன்னாள் அதிபர் ம.ச.பத்மநாதன், தாமரை மலரின் முதல் ஆசிரியர் எஸ்.சி.எஸ். சிதம்பரநாதன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ–422)

## மெய்வன்மைப் போட்டி



வரணி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மகளிர் விவகார பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கலந்து கொள்வார். (வ)

◆◆◆

அல்வாய் வடக்கு றோ.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு புனித சவேரியார் ஆலய முன்றிலில் அதிபர் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும், சிறப்பு விருந்தினர்களாக சற்கோட்டை பங்குத் தந்தை வண பிதா த.நிருபன் நிஷானந், வடமாகாண சபை உறுப்பினர்களான வே.சிவயோகம், ச.சுகிர்தன் ஆகியோர் கலந்து கொள்வர். (வ)

## 190 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு

யாழ்ப்பாணம்,பெப்.2

உடுவில் மகளிர் கல்லூரியின் 190 ஆவது ஆண்டு நிறைவு தினமும் எலைசா அக்னியூவின் பிறந்த தினமும் இன்று திங்கட்கிழமை பாடசாலை அதிபர் ஷிராணிமில்ஸ் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் நினைவு பிரார்த்தனையும், முத்திரை உறை வெளியீடும்,மாணவர்களின் நிகழ்வுகளும் 190 மாணவிகள் பங்குபற்றும் பாடல் நிகழ்வும் நடைபெறும்.

இந்த நிகழ்வுகளுக்கு அமெரிக்காவில் இருந்து வருகை தரும் முக்கிய பிரமுகர்கள் மற்றும் தபால் அமைச்சர், கல்வி இராஜாங்க அமைச்சர் ஆகியோர் முத்திரை உறைகளை வெளியிட்டு வைக்கவுள்ளனர். (ஒ)

## ஆலய கோபுரத்துக்கு இன்று அடிக்கல்

யாழ்ப்பாணம்,பெப்.2

திருநெல்வேலி வடக்கு பழங் கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் தெற்கு வாசல் கோபுரத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 7 மணி பூசையைத் தொடர்ந்து நடைபெறவுள்ளது. பொ. குலசிங்கம் இதற்கான நாள் கல்லை வைப்பார். (ஒ)


உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

செல்லா சினிமா யாழ்ப்பாணம்



40அடி அகலம் LED திரையில்
இப்பொழுது காண்பிக்கப்படுகிறது
டைரக்டர் சங்கரின் பிரமாண்டமான
சியான் விக்ரம், எமிஜாக்சன் நடிப்பில்
ஐ
காட்சி: 10.30, 2.30, 6.30, 9.30
முற்றிலும் குளிரூட்டப்பட்டது
பெப்ரவரி 5 முதல் அஜித் நடிக்கும் "என்னை அறிந்தால்"

**தேவை**
உரும்பிராயில் அமைந்துள்ள Beauty Pallour இற்கு அனுபவம் உள்ள வேலை ஆள் தேவை. (பெண்) (56411)
தொடர்புக்கு: 077 303 4425/ 021 205 4677

**விற்பனைக்கு**
YAxxxx தொடர் இலக்கமுடைய ஓட்டோ விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு: 077 303 4425 (56412)

**வேலையாள் தேவை**
வசந்தவம் டயர் வேக்ஸ் கடை ஒன்றுக்கு அனுபவமுள்ள வேலையாள் தேவை.
தொடர்பு: 129 C கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். (56418)

**விற்பனைக்கு**
ஒரு மாதம் மட்டும் பாவித்த 2 வருட உத்தரவாதத்துடன் சாம்சன் S5 கலக்சி போன், பனசொனிக் A/C, போட்டோ கொப்பி மெசின், ஜெனரேற்றர், சாப்பாட்டு மேசை, கதிரை என்பன விற்பனைக்குள்ளன.
தொடர்பு: 076 708 2370 (56418)

**தேவை**
03 மாதகாலத்துக்கு வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் தாயையும் மகனையும் பராமரிப்பதற்கு ஆள் தேவை. வைத்தியசாலை - கண்டி, சிங்களம் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்புக்கு: 077 716 2297 (56413)

**பணிப்பெண் தேவை**
யாழ்ப்பாணம் கந்தர்மடத்திலுள்ள வீட்டில் குழந்தைகளைப் பராமரிக்க திருமணமாகாத இளம்பெண் தேவை. நல்லூர், கல்வியங்காடு, திருநெல்வேலி பகுதியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 664 7977 (56418)

**வேலையாள்கள் தேவை**
சைவ உணவகம் இரண்டுக்கு கீழ்வரும் வேலையாள்கள் தேவை. மூன்று நேர உணவு/ தங்குமிடவசதி/ மாதாந்த சம்பளம்/ நிரந்தரத் தொழில் இவை அனைத்தும் ஒரே இடத்தில்.
1. சப்பிளையர் (உணவு பரிமாறுபவர்)
2. காசாளர்
3. பில்கிளாக்
4.மேற்பார்வையாளர்
5.றொட்டி போடுபவர்
6.ரீமேக்கர்
7.சமையல் உதவியாளர்
8.மரக்கறி வெட்டுபவர்
9.சுத்திகரிப்பாளர்
10. பிரதான சமையலாளர்
குறிப்பு:
இடம்பெயர்ந்தவர்களுக்கு
1. முன்னுரிமை கொடுக்கப்படும்.
2. உரிய மரியாதையுடன் கவனிக்கப்படுவர்.
தொடர்புக்கு: 077 791 7753 075 530 4521 (56417)

**மாபிள் பதித்தல்**
யாழ். நகரில் மிகக் குறைந்த கட்டணத்தில் தரமாகவும், உத்தரவாதத்துடனும் மாபிள்கள் பதித்துத்தரப்படும். (56432)
தொடர்பு: 077 877 1850, 077 351 1371 077 949 9626

**தேவை**
எமது ஸ்தாபனத்துக்கு இலங்கையில் பிரபல உற்பத்தி நிறுவனங்களின் உற்பத்திப்பொருள்களான அன்ரன் பி.வி.சி உற்பத்திகள், சென். அன்ரனிஸ் காட்வெயர் உற்பத்திப்பொருள்கள், மின்சாரப் பொருள்கள் ஆகியவற்றை யாழ்மாவட்டத்திற்கான பிரபல விநியோக நிறுவனத்திலிருந்து விற்பனை நிலையங்களுக்கு ஏற்றி இறக்கும் தொழிலில் விசேட அனுபவமுள்ள, ஆங்கில அறிவுள்ள 30 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் விரும்பத்தக்கது. 08.02.2015 இற்கு முன் தொடர்பு கொள்ளவும். (56432)
ESS JEY ELECTRICALS
9, Stanly Road, Jaffna.

**மாதகல் தூயலூர்து அன்னை திருத்தல வருடாந்த திருவிழா 15.02.2015**



06.02.2015 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் நவநாள்கள் ஆரம்பமாகி தினமும் மாலை 04.45 மணிக்கு திருச்செபமாலையும் நவநாள் வழிபாடும் நடைபெறும்.
14.02.2015 ஆம் திகதி சனி மாலை 06 மணிக்கு அன்னையின் திருச்சொரூப தேர்ப்பவனியும் நற்கருணை வழிபாடும் நடைபெறும்.
15.02.2015 ஆம் திகதி ஞாயிறு காலை 07 மணிக்கு திருநாள் திருப்பலி நடைபெறும். அன்னை வழியாக ஆண்டவன் அருளைப் பெற்று வாழ்வை வளமாக்க அன்புடன் அழைக்கின்றோம்.
பங்குத்தந்தை, பங்குமக்கள், மாதகல் (56253)

**இந்தியாவில் உயர்கல்வி**
ENGINEERING DEGREES
ANNA UNIVERSITY - INDIA
2013/2014 - A/L Maths பிரிவில் பரீட்சைக்கு தோற்றி பல்கலைக்கழக அனுமதி பெறமுடியாத மாணவர்கள். உலகலாவியரீதியில் பிரசித்திபெற்ற ANNA UNIVERSITY (Chennai, India) யில் பின்வரும் கற்கை நெறிகளில் சேர்ந்து நான்கு வருடங்களில் இலங்கை பல்கலைகழக மாணியக் குழுவினால் அங்கிகரிக்கப்பட்ட (UGC Approved) ENGINEER ஆகமுடியும்.
◆ CIVIL ◆ MECHANICAL ◆ COMPUTER SCIENCE
◆ INFORMATION TECHNOLOGY ◆ ELECTRICAL
◆ ELECTRONICS & COMMUNICATION
(BE - BACHELOR OF ENGINEERING - 4 YEARS)
மேற்கூறிய பாடநெறிகளை ANNA UNIVERSITY யின் இணைக்கல்லூரியான SSM COLLEGE OF ENGINEERING ல் (சேலம், தமிழ்நாடு) அனுமதி பெற்று கற்கமுடியும்.
Call : 0777 - 767 818 (தமிழில்)
SIC No. 01, Veverset Place, Wellawatte, Colombo 06.


**வெற்றித்தேர்வு வெளியீடகம்**
25 வருடங்களிற்கு மேலாக புலமைப்பரிசில் துறையில் அனுபவம்மிக்க வெற்றித்தேர்வு வளவாளர்களின் தயாரிப்பில்
ஆரம்ப வகுப்புகளில் பழநிலை அறிவு வளர
2015ஆம் ஆண்டிற்கான நாடளாவிய வெளியீடுகள் வெளிவருகின்றன.
☞ தரம் 5 - 20 வெற்றித்தேர்வுகள்
☞ தரம் 4 - 15 வெற்றித்தேர்வுகள்
(மேலதிக பயிற்சிக்காக இலவச பாடவினாப்பத்திரங்கள்)
☞ தரம் 1, தரம் 2, தரம் 3 பாடரீதியாக 12 வினாப்பத்திரங்களைக் கொண்ட தவணைக்கான பரீட்சை வழிகாட்டிகள்
☞ தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான வெற்றித்தேர்வு வினாவிடைத்தொகுப்பு புலமைப்பரிசில் வழிகாட்டி நூல்.
☞ தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான வெற்றித்தேர்வு சுற்றாடல்சார் செயற்பாடுகள் வழிகாட்டி நூல்.
☞ தரம் 3, தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான வாக்கியங்கள் எழுதப் பழகுவோம் வழிகாட்டி நூல்.
தேவையான பாடசாலைகள் உடன் தொடர்புகொள்ளவும்.
வினாப்பத்திரங்கள் நேரடியாக பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்படும்.
பாடசாலைகள் விசேட விலைக்கழிவுகளுடன் வெற்றித்தேர்வு வெளியீடுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.
தொடர்புகளுக்கு: 021 222 9016, 0775388471, 0773126807

**வெளிவந்துவிட்டது!**
வெற்றித்தேர்வு வெளியீட்டகத்தின்
புலமைப்பரிசில் வழிகாட்டி நூல்கள்
☞ தரம் 4, தரம் 5 வெற்றித்தேர்வு வினாவிடைத்தொகுப்பு
☞ தரம் 4, தரம் 5 வெற்றித்தேர்வு சுற்றாடல்சார் செயற்பாடுகள்
☞ தரம் 3, தரம் 4, தரம் 5 வாக்கியங்கள் எழுதப் பழகுவோம்
அனைத்துப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ள முடியும்.
தவறாமல் வாங்கிப் பயனடையுங்கள்.
பாடசாலைகள் விசேட விலைக்கழிவுடன் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு: நாடுமுழுவதும் : 021 222 9016 0775388471, 0773126807

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்



## தைப்பூச விழா - 03.02.2015 செவ்வாய்க்கிழமை



நயினாதீவு
ஸ்ரீ நாகபூஷணி
அம்மன் கோயிலில்
வழமைபோன்று இவ் வருடமும்
"தைப்பூச விழா"
மிகவும் சிறப்பாக
நடைபெறவுள்ளது

முற்பகல் 10.30 மணிக்கு - விசேட அபிஷேகம்
நண்பகல் 12.00 மணிக்கு - உச்சிக் காலப் பூசை
பிற்பகல் 12.30 மணிக்கு - விசேட வசந்த மண்டப பூசை
பிற்பகல் 1.30 மணிக்கு - அம்பாள் அழகிய திருமஞ்சத்தில் வீதியுலா வருதல்

அன்றைய தினம்;-


★ விசேட மங்கல வாத்தியம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது
★ வழமைபோல் விசேட படகு சேவையும், விசேட போக்குவரத்துப் பேருந்துச் சேவையும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.
★ நயினாதீவு அமுதசுரபி அன்னதான சபையினரால் அடியார்களுக்கு அன்னதானம் வழங்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
★ தம்பையா தாக சாந்தி நிலையத்தாரின் தாக சாந்திச் சேவையும் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது.

அடியார்கள் வருகைதந்து அம்பாளின் பேரருளைப் பெற்றேகுமாறு அன்போடு அழைக்கின்றோம்
பால், இளநீர் கொண்டுவரும் அடியவர்கள் அபிஷேக நேரத்திற்கு முன்பாக கோயிலுக்குச் சமுகமளிக்க வேண்டும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

- அறங்காவலர் சபை,
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்.

(C/19230)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு. ஆறுமுகம் ஜெயபாலசிங்கம்

திரு ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம் பெற்றமையையிட்டு அக மகிழ்ந்து எமது அன்பு கலந்த வாழ்த்துக் களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்பில் அரவணைக்கும் உத்தமனாய்
பண்பில் மாசற்ற மணிச் சுடராய்,
சொற்திறனில் ஈடு இணையற்ற
சொல் வீரனாய்
உதவி புரிவதில் உள்ளன்பு கொண்ட நேசனாய்
ஊருக்கோர் தொண்டனாய்
மாணவர்களின் கல்வி வளர்ச்சியில்
தன்னையே ஆகுதியாக்கநின்ற ஆசானாய்
வள்ளுவரின் பாதைதனில்
வாழ்ந்து காட்டுபவர்
வள்ளுவர் அக்கடமி இயக்குநராய்
எமை வழிப்படுத்தும் எம் அன்பான ஆசானுக்கு
பல்கோடி வாழ்த்துக்களும்
பணிவான பாராட்டுக்களும்

வாழ்த்துவோர்.
வள்ளுவர் அக்கடமி உரிமையாளர். ஆசிரியர்கள், மாணவர்கள், ஆளணியினர்.

## விசேட தரத்துக்கான பதவி உயர்வு

தென்மராட்சி,பெட்2 உள்ளூராட்சிச் சபைகளில் கடமையாற்றும் தொழில்நுட்ப அலுவலர்கள், பட வரைஞர்கள் போன்ற பதவிகளில் உள்ளவர்களுக்கு விசேட தரத்துக்கான பதவி உயர்வுகள் வழங்கப்படவுள்ளன.

கடந்த 2000 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து 2014 டிசெம்பர் 31ஆம் வரை இந்தத் தரங்களில் கடமையாற்றும் விசேட தர உத்தியோகத்தர்கள் மற்றும் விசேட தரத்துக்கு தகைமை கொண்ட உத்தியோகத்தர்கள் ஆகியோரின் விவரங்களை அனுப்பிவைக்குமாறு யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் சொன்ஸ் ரன்ரைன் ஜக்ஸீல் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அறிவித்துள்ளார். (வ-9)

## காரைநகர்
## கிழவன்காடு கலாமன்றம்
## மனோன்மணி கலையரங்கு
## திறப்பு விழா அழைப்பிதழ்

இடம் : கலாமன்றம், காரைநகர்
காலம் : 03.02.2015 செவ்வாய்க்கிழமை
காலை 11.00 மணி மாலை 04.00 மணி

தலைவர்
**திரு.ந.சோதிநாதன்** அவர்கள்
(தலைவர், கிழவன்காடு, கலாமன்றம், காரைநகர்)

நிகழ்ச்சி நிரல்

**காலை நிகழ்வுகள் மு.ப. 11.00 மணி**

* மு.ப. 11.00 - 12.35 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் திரு. சண்முகம் சிவஞானம் அவர்களினால் தனது தாயாரின் ஞாபகார்த்தமாக அமைத்து வழங்கிய 'மனோன்மணி கலையரங்கு' சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தல்.

கலாமன்றத்துக்கானகலையரங்கு, மன்றக் கீதம் மற்றும் மன்றக்கொடி என்பனவும் அங்குரார்ப்பணம் செய்தல்.

**மாலை நிகழ்வுகள் பி.ப.04.00 மணி**

* மங்கல விளக்கேற்றல்
* வேதபாராயணம் : வேதவிற்பன்னர்கள்
* திருமுறை ஓதல்
* மங்கல இசை : ஈழத்தின் பிரபல தவில் நாதஸ்வர கலைஞர்கள்
* புஸ்பாஞ்சலி : கலாமன்ற நடனத்துறை மாணவிகள்
* வரவேற்புரை
* ஆசியுரை
* தலைமையுரை
* வாழ்த்துரைகள்

**திருமதி ரூபினி வரதலிங்கம்** அவர்கள்
(மேலதிக அரசாங்க அதிபர், யாழ்மாவட்டம்)
**செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்** அவர்கள்
(தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை)
**திரு.ப.விக்னேஸ்வரன் அவர்கள்**
(ஓய்வுநிலை வடமாகாண கல்விப் பணிப்பாளர்)

* கௌரவிப்பு
* இசைவேள்வி: யாழ் பிரபல கர்நாடகக் கலைஞர்கள்
* சிறப்புப் பட்டிமண்டபம்

**நாமிருக்கும் நாடு நமது என்று அறிந்தோமா?**

| அறிந்தோம்! | அறியவில்லை! |
|---|---|
| திரு.செ.சொபிஷன் | திரு.அ.வாசுதேவா |
| திரு.தெ.ஹர்ஷன் | திரு.ந.ஐங்கரன் |


நடுவர்: கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்கள்
(அமைப்பாளர், அகில இலங்கை கம்பன் கழகம்)

* நன்றியுரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (56388)

**கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்.**

# உலகப்பெருமஞ்சத்திருவிழா
## அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோயில்





காலம்: 03.02.2015 நாளை செவ்வாய்க்கிழமை
மாலை 6.00 மணிக்கு வசந்த மண்டபப்பூசை
7.00 மணிக்கு மின்சாரதீபங்களினால் அலங்கரிக்கப்பட்ட
உலகப்பெரு மஞ்சத்தில்
முருகப் பெருமான் வீதிவலம் வரும் காட்சியும்
விசேட மேளக்கச்சேரியும் இடம்பெறும்.
அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குமரன் கட்டடப் பொருள் விற்பனையாளர்
கல், மணல், சீமெந்து, கம்பி,
பெயின்ற் வகைகள் ஆகியவற்றை
மொத்தமாகவும்,சில்லறையாகவும் பெற்றிட
கந்தசாமி கோயிலடி, இணுவில் மேற்கு.
T.P:077 400 2263, 077 175 4667, 021 790 4672

கஜானனன்
பந்தல் சேவை
ஸ்ரேசன் வீதி,
சிவன்கோயிலடி
சுன்னாகம்.

CIS Computer Centre
கணினிப் பயிற்சி நிறுவனம்
Certificate Courses Diploma Courses
ICT For 10&11
English 1-11 Spoken Sinhalnd English
021 492 0491 கே.கே.எஸ் வீதி, இணுவில்
(56366)(4.7.3)

கஜசங்கவி சென்ரர் அன் பிறின்டேர்ஸ்
இந்தியாவிலிருந்து இறக்குமதி
செய்யப்பட்ட திருமண,
பூப்புனித நீராட்டு விழா
அழைப்பிதழ்களை
மலிவாக பெற்றிட
இல.237, கே.கே.எஸ்.றோட்,
யாழ்ப்பாணம். T.P:021 222 7885



# செய்திகள்

## தேர்தல் குண்டல்ல வரவு-செலவு திட்டம்

அமைச்சர் நந்திமித்ர தெரிவிப்பு

கொழும்பு, பெப்.2

வரவு– செலவுத் திட்டத்தின் மூலம் மக்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணம் தேர்தலுக்காக போடும் குண்டு அல்ல என கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் நந்திமித்ர ஏக்கநாயக்க தெரிவித்தார்.

எதிர்வரும் தேர்தலுக்குப் பின்னர் அத்தியாவசிய பொருள்களின் விலை அதிகரிக்கும் என சில கட்சிகள் பரப்புரை செய்வதில் எந்தவித உண்மையும் இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட அமைச்சர், இந்தக்கருத்தைத் தெரிவித்துள்ளார். (ந)

## பாண் விலை குறைப்பு சர்வதேசத்தின் சூழ்ச்சி

இப்படிக் கூறுகின்றது தேசிய சுதந்திர முன்னணி

புதிய அரசின் இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தின் ஊடாக பாண் விலையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தமை, சர்வதேச சூழ்ச்சியின் ஒரு பகுதி என தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

முன்னணியின் மத்திய செயற்குழு உறுப்பினர் பியசிறிவிஜயநாயக்க, நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய போதே இந்தக் கருத்தை வெளியிட்டார்.

கோதுமை மாவின் விலையை குறைத்ததற்கான பிரதிபயன் அமெரிக்க விவசாயிகளுக்கு கிடைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். கடந்தகாலங்களில் கோதுமை மாவால் உற்பத்திசெய்யப்பட்ட உணவுப் பொருள்களை உட்கொள்ள வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டது.

இது தவிர, அதனால் ஏற்படும் நோய்கள் குறித்து எச்சரித்தார்கள். கோதுமை மாவின் விலையை குறைக்கும் அதே வேளை, அரிசியின் விலையை அதிகரிப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

அமெரிக்காவின் விவசாயிகள் நன்மையடையும் நிலையில், இலங்கை மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ந)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி E.R.அருஜூனன்
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி எலிசபெத் ஜேம்ஸ்**
அவர்களின் மறைவினையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தை வெளிப்படுத்துவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கின்றோம். (56435)

பாடசாலைச் சமூகம்
யா/ கரம்பொன் சண்முகநாத மகாவித்தியாலயம்.

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 | 02 |
| 06 | 02 |
| 1951 | 2009 |

**அமரர் ஆறுமுகம் திருநாவுக்கரசு**

ஆண்டுகள் ஆறு கடந்து சென்றாலும்
ஆறாத்துயர் இன்னும் ஓயவில்லை
நித்தம் புலம்புகின்றோம் உம் திருமுகத்தை
காணாமல் உங்கள் குரல் கேளாதா எம் காதில்
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

என்றும் நினைவில்

16B, 3 ஆம்கட்டை,
அரியாலை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவலைகள்



| உருவாக | ஒளியாக |
|---|---|
| 14 | 11 |
| 12 | 02 |
| 1948 | 2014 |

திதி : பூர்வபக்க திரயோதசி

**திருமதி மகேஸ்வரி இராஜலிங்கம்**

அல்லும் பகலும் எம்மை ஆதரித்தாயே !
எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு சென்றதேனோ!
கருணை நிறைந்த உங்கள் முகம் காண கவலையுடன் தேடுகின்றோம்
இறையடி தொண்டு செய்ததால் தானோ
இறைவன் உங்களை தன்னோடு கொண்டு சென்றான்
துயர் உற்ற வேளையில் எம் துயர் துடைத்தீர்கள்
இன்று எங்கள் துயர் பகிரவோ எம்மோடு தாயே நீங்கள் இல்லை
ஆண்டொன்று ஆனதம்மா உங்கள் அரவணைப்பை நாங்கள் இழந்து......!
அம்மா உங்கள் நீங்காத நினைவலைகளுடன்
இறைவனைக் கேட்கின்றோம்
கருணை நிறைந்த கடவுளே மீண்டும் ஒரு கருவறை - தந்தால்
எம் அன்னையின் வயிற்றில் உதிக்கும் வரத்தைத் தந்திடுவாய்!

"ஈஸ்வரி இல்லம்"
25/6, 1ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## ஆண்டுகள் எட்டில் உங்கள் நினைவுகளுடன்



மகிமையில்
02.02.2007

**சூசைப்பிள்ளை வேதநாயகம்**


இப்புவியில் நீங்கள் வாழ்ந்த அந்த நாட்கள் கலந்து விட்டது எங்கள் நினைவுளில். உங்கள் நினைவுகளின் வேதனையின் மத்தியில் ஓர் தேற்றுதலின் சத்தம் எமக்கு

"அவர் சகலத்தையும் அதனதன் காலத்தில் நேர்த்தியாய் செய்கின்றார்....
தேவன் செய்வது எதுவோ அது என்றைக்கும் நிலைக்கும்" பிரசங்கி 3:11:14

இல. 671, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவுகள் சுமந்து
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்



### அமரர் சின்னையா கந்தசாமி

கரணவாய் மத்தியைப் பிறப்பிடமாகவும், கரணவாய் குருக்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா கந்தசாமி (31.01.2015) சனிக்கிழமை காலமாகினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - சின்னாச்சி தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான பொன் னையா - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும், தனலட்சுமியின் அன்புக் கணவரும், ரூபராணி (சுவிஸ்), உதய ராணி, உதயசங்கர் (இலங்கை வங்கி - யாழ்ப்பாணம்) ஆகியோ ரின் அன்புத் தந்தையும், கிருஷ்ணசாமியின் சகோதரரும், இராஜசேகர் (சுவிஸ்), காந்தரூபன் (உதவித் தபாலதிபர், கரவெட்டி), விஜிதா அவர்களின் அன்பு மாமனாரும், ஆர்த்திகா (சுவிஸ்), டிலக்சிஜா, பிருந்தாபன், பிரியங்கன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2015) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங் குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்,

குருக்கட்டு, கரணவாய் தெற்கு,
கரவெட்டி. (54192)

தகவல்: குடும்பத்தினர்.
T.P:021 320 2710

### சின்னவன் கதிரேசு

கோண்டாவில் கிழக்கு நாராயணன் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னவன் கதிரேசு 01.02. 2015 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னவன் - தங்கமுத்து தம்பதியினரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான வீரன் - நாகம்மா தம்பதிகளின் மருமகனும் தெய்வானையின் பாசமிகு கணவ னும், முருகேசுவின் சகோதரனும், வாசுதேவன் (ஓய்வுபெற்ற உத்தி யோகத்தர் - இலங்கை புகையிரதத்திணைக்களம்), திருமதி ந.நட்பினி (ஆசிரியை - யா/ கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வா.கிருபாலினி, ந.நல்லசிங்கம் (கியுமெடிக்கா சர்வதேச நிறுவனம் - மானிப்பாய்) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிமல்ராஜ், பகிஸ்ரன், மயூரிக்கா, கோபிநாத், டிந்துஷா, றொஷானி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2015) திங்கட்கிழமை நண்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கொட்டைக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாராயணன் வீதி,
கோண்டாவில் கிழக்கு.
077 611 6054 (56440)

தகவல்:
குடும்பத்தினர்.

# செய்திகள்

## அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கவனவீர்ப்பு போராட்டம்

### நாளை வவுனியா நகர சபை மைதானத்தில்

யாழ்ப்பாணம், பெப்.2

அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரியும், காணாமல் போகச்செய்யப்பட்டவர்கள்தொடர்பில் பொறுப்புக் கூறக் கோரியும் வவுனியாவில் நாளை கவன வீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

வவுனியா நகர சபை மைதானத்தில் நடத்தப்படவுள்ள இந்த கவன வீர்ப்பு போராட்டத்தை வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவுடன் இணைந்து, நாங்கள் இயக்கத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்த கவனவீர்ப்புப் போராட்டம் குறித்து நாங்கள் இயக்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை 67 ஆவது சுதந்திர நாளைக் கொண்டாடத் தயாராகி விட்டது. ஆயினும் ஒவ்வொரு இலங்கைப் பிரஜையினதும் சுதந்திரத்துக்கும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாகவும், இலங்கையிலுள்ள அனைத்து குடியினங்களாலும் நிராகரிக்கப்பட்டும் உள்ள 'பயங்கரவாத தடைச்சட்டம்' இன்னமும் நீக்கப்படவில்லை.

இந்தச் சட்டம் ஒன்றே இலங்கையில் இன, மொழி சமய கலாசார வேறுபாடின்றி,பல ஆயிரம் இளைஞர்கள்யுவதிகளின் எதிர்காலத்தை சூனியமாக்கியது. பல ஆயிரம் இளைஞர்கள் யுவதிகள், தடுப்புக் காவல்களுக்கும் சிறைக் கூடங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டார்கள். கொண்டு செல்லப்பட்டவர்களில் பலர் காணாமல் போகச் செய்யப்பட்டார்கள்.

'பயங்கரவாத தடைச்சட்டம்' எத்தகைய காலதாமதங்களும் இன்றி இரத்துச் செய்யப்படல்வேண்டும்.

'அரசியல் கைதிகள்' எனும் சொல் பிரயோகமே இலங்கையில் புழக்கத்தில் இல்லாதவாறு அனைத்து கைதிகளும் மறுபேச்சின்றி விடுதலை செய்யப்படவேண்டும்.


இரகசிய முகாம்கள், இலங்கையின் எந்தெந்த பகுதிகளில் செயல்பட்டன. அவற்றை நிர்வகித்துக் கொண்டிருந்தவர்கள் யார்' என்பன குறித்து மக்களுக்கு வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

'கட்டாயப்படுத்தப்பட்டு கடத்தப்பட்ட காணாமற் போகச் செய்யப்பட்டவர்கள்' தொடர்பில் பொறுப்புக் கூறப்படல் வேண்டும்.

மனித்துவத்துக்கு எதிரான வன்முறைகள் குற்றங்களினால் 'பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு 'நீதி மற்றும் இழப்பீடுகள்' வழங்கப்பட வேண்டும்.

இவற்றை வலியுறுத்தி வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவுட்ன் இணைந்து நாளை கவனவீர்ப்புப் போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளோம்.

குறித்த கவனவீர்ப்புப் போராட்டத்தில் அனைவரையும் கலந்து கொள்ளமாறு அழைக்கின்றோம். – என்றுள்ளது. (ற)



*வேகக் கட்டுப்பாட்டை இழந்த கார் ஒன்று வீதியை விட்டு விலகி மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. இந்தச் சம்பவம் வடமராட்சி, வல்லை வெளியில் நடந்துள்ளது. காரில் பயணித்த இருவர் இதில் படுகாயமடைந்தனர்.* (ற-4)


**நயினையில் தைப்பூசத் திருவிழா**

ஸ்ரீ நாகம்மாளை நாடி வரும் அடியார்களுக்கு
அமுதசுரபியில் சிறப்பு அன்னதானம்



தைப்பூசத் திருநாள் 03.02.2015
செவ்வாய்க்கிழமை
திருமஞ்சம் அமர்ந்து வரும்
அன்னையவள் அருள் பெறவே
அனைவரும் வருக! அமுதசுபியில்
அமுதமுண்டு மகிழ்க!
அடியார்கள் தங்குவதற்காக
அன்னபூரணி இறை பணிகள்
தங்ககமும் சேவையாற்றுகின்றது.

பிரதான சாலை,
நயினாதீவு 02
தொ.பே: 021 321 3575

நிர்வாகம்,
ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி
அன்னதான சபை



**UDUVIL GIRLS' COLLEGE REMEMBERS**



**ELIZA AGNEW**
**(BORN FEBRUARY 2, 1809)**
**PRINCIPAL 1839 -1880**

"In the path of righteousness is life, and in its pathway there is no death.
Proverbs 12:28

(c/19237)


## பலம்மிக்க மஹிந்த அரசை தக்கசமயத்தில் கவிழ்த்தோம்

### அமைச்சர் ரிஷாத் பதியுதீன் பெருமிதம்

கொழும்பு, பெப்.2

முஸ்லிம் சமூகத்துக்கு பல வழிகளிலும் துன்பம் விளைவித்து வந்த பலம் பொருந்திய மஹிந்த அரசை காலம் பார்த்து கவிழ்த்துள்ளோம் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

"முஸ்லிம் சமூகத்துக்கு கடந்த அரசு பல்வேறு வழிகளிலும் அச் சுறுத்தல்களையும் துரோகங்களையும் செய்து வந்த போதும் அரசுக்குள் இருந்து கொண்டு சமூகத்துக்கான பல போராட்டங்களையும் அழுத்தங்களையும் செய்ய வேண்டிய அபிவிருத்தி வேலைகளையும் மேற்கொண்டே வந்தோம்."– என்றும் அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

"கடந்த அரசு பலம் பொருந்திய தொரு நிலையிலேயே இருந்து வந்தது. இதனால் அரசைவிட்டு வெளியேறி மக்கள் உரிமை களை வெல்வதற்கோ அல்லது அரசைகவிழ்க்கவோ அக்கால சூழ்நிலைகள் பொருத்தமானதாக அமையவில்லை.

அதனால் தான் அரசில் இருந்து கொண்டு மக்களுக்கு செய்ய வேண்டிய உச்சக்கட்ட அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வந்ததுடன் சமூகத்துக்கான அச்சுறுத்தல்கள் ஏற்பட்ட வேளைகளில் உரிமைக் குரலாகவும் எமது கட்சியின் தலைமைத்துவம் இருந்து வந்துள்ளது.

ஆனால் முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளுக்காக உருவாக்கப்பட்ட ஏனைய பழைமை வாய்ந்ததும் அதிகடிப்படியான முஸ்லிம்களின் வாக்குப் பலத்தைப் பெற்று பலம் பொருந்திய அரசியல் கட்சிகள் சமூகத்துக்கான எந்த வித அபிவிருத்திகளையோ அல்லது சமூகத்தின் உரிமைக்காகக் குரல் கொடுக்கவோ இருக்கவில்லை.

கடந்த அரசின் போது தம்புள்ள பள்ளிவாசல், கிராண்ட்பாஸ் பள்ளிவாசல், அளுத்கம மற்றும் வர்த்தக நிலையங்கள் போன்றவற்றில் திட்டமிட்ட முறையில் தாக்குதல்கள் நடத்தப்பட்ட போது உள்ளிருந்து கொண்டு பல வழிகளிலும் அரசுக்கு அழுத்தங்கள் கொடுத்துவந்தோம். 1983 ஆம் ஆண்டுக்குப் பிறகு முஸ்லிம் சமூகத்துக்கு எதிரான பெரும் வன்செயல்கள் உங்களது ஆட்சியிலேதான் இடம் பெற்றுள்ளது என அமைச்சரவையில் கலந்து கொண்ட ஜனாதிபதியிடம் தைரியமாக எடுத்துரைத்த போது, ஜனாதிபதி ஆத்திர மடைந்து வெளியேறி விட்டார்.

மிகக் குறுகியதொரு காலத்தினுள் எமது கட்சி பெரும் பரிணாம வளர்ச்சி கண்டுள்ளது. இதனால்சமூகத்துக்கான முடியுமான பணிகளை மேற்கொண்டு வருகின்றோம். எமது சமூகப் பணியை ஏற்றுக்கொண்டு இன்று நாட்டின் நாலா திசைகளிலும் மக்கள் எமது கட்சியின் பக்கம்வந்து இணைந்து கொண்டிருக்கின்றனர்."– என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

## யாழ்.சிறையில் 8ஆவது நாளாகவும் உணவு தவிர்ப்பு போராட்டம்

யாழ்.சிறைச்சாலையில் உள்ள 8 கைதிகள் இன்று எட்டாவது நாளாகவும் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். தம்மை விடுதலை செய்ய வேண்டும் அல்லது நீதிமன்றில் முற்படுத்த வேண்டும் என்று கோரியே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை இராணுவ மேஜர் உட்பட 8 பேர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர். கடந்த வியாழக்கிழமையிலிருந்து அவர்கள் ஒரு நேர உணவுடன் (இரவு மாத்திரம்) போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்று சிறைச்சாலைத் தரப்புத் தெரிவிக்கிறது. யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, கொழும்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

## வடமாகாண கல்வி அபிவிருத்திக் குழுவை கலைக்க வேண்டும்

### இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

அரசியலுக்காகப் பயன்படுத்தப்பட்ட வடமாகாண கல்வி அபிவிருத்திக் குழுவைக் கலைத்து கடந்த காலங்களில் அது மேற்கொண்ட அநீதியான செயல்கள் தொடர்பில் உரிய விசாரணை நடத்தப் பட வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது. இது தொடர்பில் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் கருத்துத் தெரிவிக்கையில்,

மஹிந்த ராஜபக்ஷவுக்காக அமைச்சரின் ஏற்பாட்டில் அரசியலுக்காக உருவாக்கப்பட்ட வடமாகாண கல்வி அபிவிருத்திக் குழுவைக் கலைக்க வேண்டும். அது கடந்த காலங்களில் மேற்கொண்ட அநீதியான நடவடிக்கைகள் தொடர்பில் உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும். அதற்கென ஒரு குழு நியமித்தாவது அதனை விசாரிக்க வேண்டும் – என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-4)

# ரணிலின் நியமனம் சட்டவிரோதமானது

## சர்ச்சையைக் கிளப்புகிறார் சரத் என். சில்வா

கொழும்பு, பெப்.2

சட்டவிரோதமான முறையிலேயே ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டார் என்று முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா சர்ச்சையைக் கிளப்பியுள்ளார்.

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலின் பின்னர் முன்னாள் பிரதமர் டி.எம். ஜயரத்னவும் அப்போதைய அமைச்சர்களும் மிகவும் நாகரீகமான முறையில் அமைதியைப் பேணியுள்ளதாகவும், அவர்கள் எதிர்ப்பை வெளியிட்டிருந்தால் பெரும் குழப்பங்கள் ஏற்பட்டிருக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக தெரிவு செய்யப்பட்ட விதம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என அவர் தெரிவித்துள்ளார்.

பிரதமராக பதவி வகித்த டி.எம் ஜயரத்ன பதவி விலகவில்லை, பதவியிலிருந்து விலக்கப்படவும் இல்லை இவ்வாறான ஒரு பின்னணியில் புதிதாக ஒருவரை பிரதமராக நியமிக்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீளவும் பதவியில் அமர்த்தப்பட்ட விதம் தவறானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். நீதிமன்றம் ஒன்றால் மட்டுமே மொஹான் பீரிஸின் நியமனத்தைஇரத்துசெய்திருக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சட்டத்தை மதிக்கும் நபர் என்ற போதிலும்,அவருக்கு அருகாமையில் இருப்பவர்கள் அவரை பிழையாக வழிநடத்தியுள்ளனர் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். நல்லாட்சி என்பது சட்டத்துக்கு மதிப்பளிக்கும் நிலைமையையே குறிக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த அரசு செய்த பிழைகளை இந்த அரசும் செய்வதைத் தாம் விரும்பவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

## தொடர்ச்சிகள்

### சர்வதேச

மேற்கொள்ளப்படும் என்று அறிவித்துள்ளது. இந்த நிலையிலேயே பான் கீ–மூன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவரின் பேச்சாளர் எரிகான்கோ இதுகுறித்துக் கூறும்போது,

"இலங்கையில் போருக்குப் பின்னர் சமாதானம் மற்றும் நல்லிணக்க விடயங்களில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதேபோன்று நாட்டின் ஜனநாயகம், அபிவிருத்தியிலும் கணிசமான மாற்றங்களைக் காண முடிகின்றது. இந்த மாற்றங்களுக்கு ஐ.நா. ஆதரவுகளை வழங்கியிருந்தது. இந்த ஆதரவைத் தொடரவே ஐ.நா. விரும்புகின்றது."– என்று தெரிவித்தார்.

"இலங்கை அரசு வகுத்துள்ள புதிய, பொறுப்புக் கூறக்கூடியதான உள்நாட்டுப் பொறிமுறை தொடர்பில் ஐ.நா. செயலாளர் கவனம் செலுத்தி வருகின்றார். இதேபோன்று இலங்கையின் மனித உரிமைகள் விவகார முன்னேற்றங்களுக்கு மனித உரிமைகள் சபையின் ஆணையாளரும் ஆதரவுகளை வழங்குகிறார். எனினும் மனித உரிமைகள் விடயத்தில் இலங்கைக்கு சில சிக்கல்கள் உள்ளன. இந்த நிலையில் எதிர்வரும் மார்ச் மாதம் நடக்கும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் தனது விடயங்கள் தொடர்பில் இலங்கை கருத்துத் தெரிவிக்க வேண்டியிருக்கும். ஐக்கிய நாடுகள் சபை, போருக்குப் பிந்திய நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதற்கு இலங்கைக்கு தொடர்ந்தும் உதவிவழங்கும். இலங்கை அரசு புதிய உள்நாட்டுப் பொறிமுறையை முன்னெடுப்பது குறித்து செயலாளர் நாயகம் அறிந்துள்ளார். அவர் இதனை அவதானமாக ஆராய்வார். இலங்கை, நம்பகத்தன்மை மிக்க பொறிமுறை களை ஏற்படுத்துவதன் அவசியத்தை அவர் வலியுறுத்தியுள்ளார்.– என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

### வல்வைக்

உள்ள 40 இற்கும் மேற்பட்ட படகுகளில் மீனவர்கள் இரவு கடலுக்குச் சென்றனர். அவர்கள் வீசிய வலைகள் இந்திய இழுவைப் படகுகளால் அறுத்து வீசப்பட்டன. இந்திய மீனவர்களின் படகுகள் வல்வெட்டித்துறை கரையைக் கிட்டவாக வந்து திரும்பின.

இலங்கைக் கடற்படையினர் ரோந்துக் காவலிலும் ஈடுபட்டிருந்தனர். ஆனால் இந்திய மீனவர்கள் சுதந்திரமாக இலங்கைக் கடல் எல்லைக்குள் வந்து சென்றனர். இவர்களின் இழுவை மடி தொழில் முறையால் எமது கடல்வளம் முற்றாக அழிக்கப்படுகிறது.

இது தொடர்பில் கடற்றொழில் சமாசம், நீரியல் வளத்திணைக்களம் ஆகிவற்றுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத பட்சத்தில் மீனவர்கள் இணைந்து அடுத்த கட்ட நடவடிக்கைகளில் குதிப்பதைத் தவிர வேறு வழியில்லை – என்றார் அவர்.

இதேவேளை மாதகல் மற்றும் தலைமன்னார் கடற்பரப்பிலும் இந்திய மீனவர்களின் இழுவைப் படகுக்ளின் ஆக்கிரமிப்பு கடந்த சில தினங்களாக அதிகரித்துள்ளன என்று மீனவர்கள் முறையிடுகிறார்கள். மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சில இறுக்கமான நடவடிக்கைகள் காரணமாகக் குறைந்திருந்த இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பு, மைத்திரி அரசு பதவியேற்றதிலிருந்து மீண்டும் பெருக ஆரம்பித்து விட்டது என்று மீனவர்கள் குறைப்படுகின்றனர்.

எல்லைதாண்டி நுழையும் இந்திய மீனவர்களைப் பிடிப்பதற்கான உத்தரவுகள் எவையும் தமக்கு இல்லாததால் தம்மால் எதுவும் செய்ய முடியாதுள்ளது என்று கரையோரங்களில் இருக்கும் கடற்படையினர் தம்மிடம் தெரிவிக்கின்றனர் என்றும் மீனவர்கள் கூறுகின்றனர். வாரத்தில் சனிக்கிழமை,திங்கட்கிழமை, புதன்கிழமை ஆகிய நாள்களில் இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பு கட்டுமீறிச் செல்வதாகவும் அவர்கள் கூறுகின்றனர். (உ–14)

### கொழும்பு

அரசின் கீழ் வருவதால் அந்த விடயத்தில் எம்மால் தலையிட முடியாது. அனைத்து வகையான தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறையையும் தடுக்க நாம் முயற்சிக்கிறோம். ஆனால் இங்கு, எமது மீனவர்களும் அதற்கு ஒத்துழைப்புத் தருவதில்லை. இருந்தாலும் எமது மீனவர்களின் கோரிக்கைக்கு அமைவாக, இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்புக் குறித்து யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியுள்ளோம்.

இரு நாடுகளுக்கும் இடையில் நல்லுறவைப் பேணும் வகையில் மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர்களிடம் கேட்கப்பட்டுள்ளது. வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இந்தியாவுக்குச் சென்றிருந்தபோது மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் புதுடில்லியில் பேச்சு நடத்தவும் இரு தரப்புகளும் இணங்கியுள்ளன. அதற்கான திகதி இன்னும் குறிப்பிடப் படவில்லை.

எப்படி இருந்தாலும் எமது பகுதியின் கடல்வளத்தை பாதுகாக்கவும் தடைசெய்யப்பட்ட மீன்பிடித் தொழில்களையும், இந்திய மீனவர்களின் அத்துமீறலையும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்திக் கொழும்பு அரசுடன் விரைவில் கலந்துரையாடவுள்ளோம் – என்றார். (உ–14)

### மைத்திரி

குறித்தும் அவர் இந்தச் சந்திப்பில் சுட்டிக் காட்டவுள்ளார் என்றும் தெரிய வருகின்றது.

முதற்கட்டமாக அவர் காலை 10 மணிக்கு வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுடன் பேச்சு நடத்தவுள்ளார். அதன்பின்னர் அவர்கள் இருவரும் இணைந்து வெளிவிவகார அமைச்சில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்துவர். அதன்பின்னர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் நிஷா கலந்துரையாடுவார்.

இந்தச் சந்திப்புகளின் பின்னர் சிவில் சமூகப் பிரதிநிதிகள், சமயத் தலைவர்கள் ஆகியோரையும் அவர் சந்திக்கவுள்ளார் என்று அறியமுடிகின்றது. நாளை அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் பேச்சு நடத்துவார்.

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர், அமெரிக்காவின் உயர்மட்ட இராஜதந்திரியொருவர் கொழும்புவரும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும். ஜெனிவாக் கூட்டத் தொடர் நெருங்கும் வேளையில் நிஷாவின் இலங்கைப் பயணம் முக்கியத்துவமிக்கதாகக் கருதப் படுகிறது. தெற்காசியாவுக்கான பிரதி உதவி இராஜாங்கச் செயலாளர் அடுல் கசாப்பும் நிஷாவுடன் வந்துள்ளார்.

மஹிந்த ஆட்சிக்காலத்தில் இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கை அமெரிக்கா எதிர்ப்புப் போக்கைக் கடைப்பிடிக்கும் வகையிலேயே அமைந்திருந்தது என அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டினர். குறிப்பாக, இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் அமெரிக்காதான் முன்நின்று செயற்பட்டது.

இந்தப் பின்னணியில், இந்தச் சந்திப்பில் இரு நாடுகளுக்குமிடையிலான சுமுக உறவை மீளக் கட்டியெழுப்புவது குறித்தும் நிஷாவும், இலங்கை அதிகாரிகளும் கூடுதல் கவனம் செலுத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ற–சி)

### குடாநாட்டுக்கும்

இந்தப் பயணத்துக்கான திட்டமிடல் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகளில், இருநாட்டு அதிகாரிகளும் தற்போது தீவிரமாக இறங்கியுள்ளனர். இலங்கையின் அரசியல் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தவுள்ள இந்தியப் பிரதமர், யாழ்ப்பாணத்துக்கும் வந்து நிலைமைகளை நேரில் பார்வையிடுவார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கான ஒழுங்குகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

2013ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை யாழ்ப்பாணத்துக்கு வருமாறு வடக்கு முதலமைச்சர் அழைத்திருந்தார். அதனை அப்போதைய இந்தியப் பிரதமரும் ஏற்றுக்கொண்டிருந்தார். இருப்பினும் பொதுநலவாய மாநாட்டில் அவர் பங்கேற்கவில்லை. இதனால் இறுதி வரையில் அப்போதைய பிரதமர் யாழ்ப்பாணத்துக்கு வரவில்லை. (உ–5)

### விலகினார்

அடுத்து அவர் பதவி விலகும் முடிவை எடுத்தார் என்று அவரது அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இருந்த போதிலும் தான் முழுநேர சட்டத்தரணியாக செயற்பட விரும்புவதால் பதவியில் இருந்து விலகிக் கொள்கிறார் என்று முஸ்தபா தெரிவித்தார். பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதியிடம் கொடுத்ததன் பின்னர் பைஸர் முஸ்தபா வெளிநாடு சென்று விட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ–10)

### பதலளிக்க

னோரைக் கொண்ட குழுவினருக்கு முகாம் ஒன்றில் பயிற்சி அளித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார். கடந்த வியாழக்கிழமை நடந்த அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் சந்திப்பிலேயே அமைச்சர் ராஜித சேனாரத்ன இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பாக, இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீரவிடம் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது. ஆயினும் அதுகுறித்து அவர் கருத்து வெளியிட மறுத்துள்ளார். (ற–5)

### நால்வரின்

கின்றன.

இதேவேளை, மு.காவின் கோட்டைகளில் ஒன்றான கல்முனையைச் சேர்ந்த ஒருவரே முதலமைச்சராக வரவேண்டும் என்ற கோரிக்கையும் வலியுறுத்தப்பட்டு வருகிறது. இதனால் முதலமைச்சர் பதவிக்காக பரிசீலிக்கப்படும் பெயர்களில் ஜெமீலின் பெயரும் உள்வாங்கப்பட்டுள்ளது.

கல்முனை நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸுக்கு அமைச்சுப் பதவி வழங்காத நிலையில் அதே இடத்தைச் சேர்ந்த ஜெமீலை முதலமைச்சராக்க வேண்டும் என்பதே ஒரு சில தரப்பினரின் கோரிக்கையாக உள்ளது. இருந்தபோதிலும் அக்கரைப்பற்றில் கட்சியை பலப்படுத்தும் நோக்கில் தவம் என்ற அல்தவாமுன் பெயரும் பரிசீலனையில் இருப்பதாக கட்சி உயர்பீடத்தினர் தெரிவிக்கின்றனர்.

ஹபீஸ் நஸீர், மன்சூர், ஜெமீல், தவம் ஆகிய நால்வரில் ஒருவரே கிழக்கு மாகாண முதலமைச்சராக நியமிக்கப்படுவர் என தெரிகிறது. (உ–10)

# விளையாட்டு



## மீண்டும் ஒரு தடவை வாய்ப்பை தவறவிட்டார் செரபோவா.

மெல்பேர்ணில் நடைபெற்று வரும் ஆஸ்திரேலிய ரென்னிஸ் மகளிர் ஒற்றையர் பிரிவில் அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் கிண்ணம் வென்றுள்ளார்.
இறுதியாட்டத்தில் ரஷ்ய வீராங்கனை செரபோவாவை வீழ்த்தி அமெரிக்க வீராங்கனை செரீனா தனது 19ஆவது கிராண்ட் ஸ்லாம் சம்பியன் பட்டத்தையும், 6ஆவது ஆஸ்திரேலிய கிண்ணத்தையும் வென்றார். இதைவிட மரியா செரபோவாவுக்கு எதிராக 16ஆவது நேரடி வெற்றியைப் பெற்றார் செரீனா.
மேலும் 33 வயதில் கிராண்ட் ஸ்லாம் பட்டம் வென்ற ஒரே வீராங்கனையும் ஆனார் செரீனா வில்லியம்ஸ். இந்த இறுதியாட்டத்தில் செரினாவால் அடிக்கப்பட்ட சில அடிகளில் பந்து மணிக்கு 200 கி.மீ. வேகத்தையும் தாண்டி சீறிப்பாய்ந்தது. செரபோவாவின் ஆகக்கூடிய வேக அடி மணிக்கு 178 கி.மீ என்பது குறிப்பிடத்தக்கது. (ற–ரி)



## அப்பாவாக போகிறார் டோனி

இந்திய அணித்தலைவர் டோனி விரைவில் அப்பாவாக போகிறார் என்ற செய்தி தற்பொழுது இந்திய ரசிகர்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஆஸ்திரேலியா சென்றது இந்திய அணி. தொடர்ந்து பல தொடர்களில் விளையாடி வருகின்றது. தொடர்ந்து உலகக் கிண்ணத்திலும் ஆடவுள்ளது. இந்த உலக்கிண்ணத் தொடர் டோனிக்கு, மறக்க முடியாததாக அமையவுள்ளது. அதாவது, தொடர் நடக்கும் போது இடையில் டோனி அப்பா ஆகிவிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதனால்தான், வழக்கமாக டோனி எங்கு சென்றாலும் நிழலாக செல்லும் அவரது மனைவி சாக்சி, கடந்த 7 முதல் 8 மாதங்களாக வீட்டிலேயே உள்ளார்.
ஆஸ்திரேலியாவில் இடைவிடாது தொடர்களில் பங்கேற்றுக் கொண்டிருந்தாலும், தொடர்ந்து தனது சாக்சியின் நலம் விசாரித்துக் கொண்டுதான் உள்ளாராம் டோனி. (ற–ரி)

## தமிழில் உலகக்கிண்ணம்

### பெண்களுக்கு தலையிடி, ஆண்களுக்கு மிக மகிழ்ச்சி

உலகக்கிண்ணத் தொடரின் ஆட்டங்களை நேரடியாக ஒளிபரப்பி அதனை தமிழில் வர்ணனை செய்யவுள்ளது விஜய் தொலைக்காட்சி.
ஐ.சி.சி இன் பதினொராவது உலகக் கிண்ணத் தொடரை நியூஸிலாந்து மற்றும் ஆஸ்திரேலிய நாடுகள் இணைந்து இந்த மாதம் 11 ஆம் திகதியில் இருந்து அடுத்த மாதம் 29ஆம் திகதி வரை நடத்துகின்றன. இந்தநிலையில் உலகக்கிண்ண தொடரின் ஆட்டங்களை நேரடியாக தமிழ்மொழியில் ஒளிபரப்பு செய்யவேண்டும் என்று பல்வேறுபட்ட கோரிக்கைகள் விடுக்கப்பட்ட நிலையில் ஐ.சி.சி. அந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளது. இதனையடுத்து ஆட்டங்கள்ள தமிழ் மொழியில் ஒளிபரப்பு செய்யும் உரிமத்துக்காக ஏலத்துடன் கூடிய விண்ணப்பங்களை விடுக்குமாறு ஐ.சி.சி. உலகத்தமிழ் தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கு தெரிவித்திருந்தது. இதனையடுத்து இந்தஉரிமத்தை பல்வேறுபட்ட போட்டிகளுக்கு மத்தியில் இந்தியாவின் விஜய் தொலைக்காட்சி பெற்றுள்ளது.




ஐ.சி.சி இன் ஆட்டங்கள் அனைத்தையும் விஜய் தொலைக்காட்சி நேரடி ஒளிபரப்பை செய்ய உள்ளதனால், அந்த தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் தொடர்நாடகங்கள் ஆட்டநேரங்களில் ஒளிபரப்பப்படமுடியாத நிலைமை தோன்றியுள்ளது. இருப்பினும் விஜய் தொலைக்காட்சி தனக்கென கிளை அலைவரிசை ஒன்றை ஆரம்பித்து அதன் மூலம் ஆட்டங்களை ஒளிபரப்பினால் தொடர்நாடகங்கள் தொடர்ந்தும் தனது ரசிகர்களை மகிழ்விக்க முடியும். எது எப்படியோ இந்த உலகக்கிண்ணத் தொடரின் வர்ணனையை நாம் தமிழில் கேட்க முடியும். (ற)




ஆஸ்திரேலிய ரென்னிஸ் கலப்பு இரட்டையர் பிரிவில், இந்தியாவின் லியாண்டர் பயஸ் – சுவிற்ஸர்லாந்தின் மார்ட்டினா ஹிங்கிஸ் ஜோடி இறுதியாட்டத்தில் சிறப்பாக செயற்பட்டு கிண்ணம் வென்று அசத்தியுள்ளனர்.
பயஸ் – மார்ட்டினா ஜோடி இறுதி ஆட்டத்தில் மிளாண் டெனோவிக் – டேனியல் ஜோடியை எதிர்த்து ஆடியது. ஆரம்பம் முதல் பயஸ் – மார்ட்டினா ஜோடி ஆட்டத்தில் பலமான தாக்கத்தை ஏற்படுத்த தவறவில்லை. இதனால் மூன்றாவது பகுதி ஆட்டத்துக்கு இடம்வைக்காமல் அந்த அணி கிண்ணம் வென்று அசத்தியது. (ற–ரி)

## கிண்ணம் வென்றது





# இரண்டு தொடக்க விழாக்களுடன் ஆரம்பமாகிறது உலகக்கிண்ணம்



உலகக்கிண்ண தொடருக்காக ஆஸ்திரேலியாவின் மெல்போர்ண், நியூஸிலாந்தின் கிறைஸ்ட்சர்ச் என, இரு மைதானங்களில் ஒரே நேரத்தில் தொடக்க விழாக்கள் நடக்கவுள்ளன.

சர்வதேச கிரிக்கெட் சபையின் 11ஆவது உலகக்கிண்ண தொடர் ஆஸ்திரேலியா, நியூஸிலாந்தில் எதிர்வரும் பெப்ரவரி 14 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. மார்ச் 29ஆம் திகதி வரையிலான இத்தொடரில் 44 நாள்களில் 49 ஆட்டங்கள் நடக்கவுள்ளன. அதற்கான தொடக்க விழா இரண்டு நாள் முன்னதாக வரும் பெப்ரவரி 12ஆம் திகதி, மெல்போர்ண், கிறைஸ்ட்சர்ச் என இரு இடங்களில் நடக்கவுள்ளன. இலங்கை நேரப்படி காலை 11.00 மணிக்கு இந்தக்கோலாகல விழா ஆரம்பமாகி மாலை 3.30 மணிக்கு முடியும்.

மெல்போர்ணில் உள்ள சிட்னி மையர் மியூசிக் பவுல் என்ற திறந்தவெளி மைதானத்தில் நடக்கும் விழாவில், உலகக்கிண்ணத் தொடரில் பங்கேற்கும் வீரர்கள், முன்னாள் 'ஜாம்பவான்கள்' என பல நட்சத்திரங்கள் கலந்து கொள்கின்றனர். பின் ஆஸ்திரேலிய கலாசாரத்தை வெளிப்படுத்தும் வகையில் கலை நிகழ்ச்சிகள் நடக்கின்றன. இறுதியில், வாணவேடிக்கையுடன் துவக்க விழா முடிகிறது.

இதுகுறித்து விக்டோரியா மாகாணத்தின் சுற்றுலா, விளையாட்டுத் துறை அமைச்சர் ஜான் எரென் கூறுகையில், 'உலகக்கிண்ண தொடரின் தொடக்க விழா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள் மோதும் முதல் போட்டி மற்றும் இறுதியாட்டம் என, அனைத்தும் மெல்போர்ணில் நடக்கவுள்ளது மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது. உலகம் முழுவதிலும் உள்ள ரசிகர்கள், மெல்போர்ணை சேர்ந்தவர்கள் இந்த விழாவைக் காண, சிட்னி மையர் மியூசிக் பவுலில் திரளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.' என்றார்.

மொத்தம் 30 ஆயிரம் பேர் அமரும் வகையிலான இம்மைதானத்தில், தொடக்கவிழாவைக் காணவரும் ரசிகர்களுக்கு கட்டணம் எதுவும் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆஸ்திரேலியாவில் நடக்கும் அதே மாலை நேரத்தில் நியூஸிலாந்தின் கிறைஸ்ட்சர்ச் நகரில் துவக்க விழா நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கடந்த 2011இல் ஏற்பட்ட பூகம்பத்தால் சீரழிந்த இந்த நகரத்துக்கு அங்கீகாரம் கிடைக்கும் வகையில் இங்கு நடக்கவுள்ள விழாவில், நியூஸிலாந்தின் முன்னாள் வீரர் ரிச்சர்ட் ஹாட்லீ, ஸ்டீபன் பிளமிங் உள்ளிட்ட பலர் பங்கேற்கின்றனர்.

தவிர, நியூஸிலாந்தின் முன்னணி கலைஞர்கள் பங்கேற்கும் பல நிகழ்ச்சிகளும் நடக்கவுள்ளன. இங்கும் ரசிகர்களுக்கு அனுமதி இலவசம் தான். (ற–ரி)

# மக்ஸ்வெல் விஸ்வரூபம்

## கிண்ணம் வென்றது ஆஸ்திரேலியா!



95 ஓட்டங்கள், 4 இலக்குகள் எனசகலதுறைகளிலும்மக்ஸ்வெலின்சிறப்பான ஆட்டத்தினால் முத்தரப்பு தொடரின் இறுதியாட்டத்தில் 122 ஓட்டங்களால் இங்கிலாந்தை வீழ்த்தி கிண்ணத்தை கைப்பற்றியது ஆஸ்திரேலியா.

ஆஸ்திரேலியா, இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையில் தற்பொழுது நடைபெற்றுவரும் முத்தரப்பு தொடரின் இறுதியாட்டத்தில் நேற்று ஆஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள் மோதின. வரலாற்று ரீதியாக இரு அணிகளும் துடுப்பாட்டத்தில் போட்டி மனப்பான்மை கொண்டவை என்பதனாலும், உலக்கிண்ணத்துக்கான தயார்ப்படுத்தல் ஆட்டமாக இந்த ஆட்டம் அமைந்ததனாலும், மூன்று பலம்பொருந் திய அணிகளின் முத்தரப்பு தொடர் என்பதனாலும் பல்வேறுபட்ட அழுத்தங்கள் மத்தியில் கிண்ணத்தை கைப்பற்றவேண்டும் என்ற எண்ணத்தில் இரு அணிகளும் களமிறங்கின.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி ஆஸ்திரேலியாவை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. ஆரம்ப வீரராகக் களமிறங்கிய பின்ச் ஓட்டங்கள் எதனையும் பெறாது முதல் பந்துப்பரிமாற்றத்திலேயே வெளியேறினார். மறுமுனையில் சிமித் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினாலும், வோர்ணர் 12, பெய்லி 2 என சொற்ப ஓட்டங்களுடன் வெளியேறினர். தொடர்ந்து சிமித்தும் வெளியேற ஆஸ்திரேலிய அணி 4 இலக்குகள் இழப்பிற்கு 60 ஓட்டங்களை பெற்றிருந்தது. அடுத்துக் கூட்டுச்சேர்ந்த மக்ஸ்வெல் மற்றும் மார்ஸ் அதிரடியாக ஆடி ஆஸ்திரேலியாவின் ஓட்டங்களை துரிதமாக அதிகரித்துக் கொண்டிருந்தனர். இணைப்பாட்டமாக 141 ஓட்டங்களை பகிர்ந்த வேளையில் மக்ஸ்வெல் 95 ஓட்டங்களுடன் வெளியேறினார். தொடர்ந்து மார்ஸ் 60 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்ப ஆஸ்திரேலிய அணி 43.1பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 217 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. தொடர்ந்து வந்த பின்வரிசை வீரரான பலக்நெர் 24 பந்துகளில் அரைச்சதம் கடக்க ஆஸ்திரேலிய அணி 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 278 ஓட்டங்களைக் குவித்தது.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக பிறோட் 3 இலக்குகளையும் அண்டர்சன் 2இலக்குகளையும்பின்மற்றும்அலிதலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

280 ஓட்டங்கள் என்ற எட்டக்கூடிய இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணியால் முதல் மூன்று பந்துப்பரிமாற்றங்கள் மட்டுமே ஆதிக்கம் செலுத்த முடிந்தது. பெல் 8, ரெய்லர் 4, மோர்கன் 0 என ஒற்றை இலக்கங்களுடன் வெளியேற இங்கிலாந்து அணி 46 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்து தவித்தது. மத்திய வரிசை வீரர்களான றூட் 25, பட்லர் 17, வோக்ஸ் 1 என ஆட்டமிழக்க இங்கிலாந்து அணி ஒரு கட்டத்தில் 130 ஓட்டங்களுக்கு 8 இலக்குகளை இழந்திருந்தது. தொடர்ந்து போபாரா 33 ஓட்டங்களுடனும் பின்ச் 6 ஓட்டங்களுடனும் வெளியேற இங்கிலாந்து அணி 39.1 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 166 ஓட்டங்களை மட்டுமே பெற்று 122 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது. பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக மக்ஸ்வெல் 4 இலக்குகளையும் ஜோன்சன் 3 இலக்குகளையும் ஹசில்வூட் 2 இலக்குகளையும் பல்க்நெர் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக மக்ஸ்வெல்லும் தொடர் ஆட்டநாயகனாக ஸ்ரார்க்கும் தெரிவானார்கள். (ற–ரி)




# அதிர்ஷ்டமில்லா ராஜாக்கள்

உலகக்கிண்ணத்தை வெல்ல முடியாமல் போன தலைசிறந்த 12 வீரர்களின் பட்டியலை பாகிஸ்தான் அணியின் முன்னாள் அணித்தலைவர் இன்ஜமாம்– உல்–ஹக் பதிவு செய்துள்ளார்.

கிரிக்கெட் துறையில் பல்வேறு காலகட்டத்தில் ஜொலித்த பல முன்னணி வீரர்கள் பலருக்கு உலகக்கிண்ணத்தை கையில் ஏந்திப் பிடிக்கும் அதிர்ஷ்டம் இல்லாமல் போயிருக்கிறது.

அந்த வகையில் 12 வீரர்களின் பட்டியலை 1992ம் ஆண்டு உலகக்கிண்ணம் வென்ற பாகிஸ்தான் அணியில் இடம் பிடித்தவரும், அந்த அணியின் முன்னாள் அணித்தலைவருமான இன்ஜமாம்–உல்–ஹக், ஐ.சி.சி. இணையத் தளத்தில் வெளியிட்டுள்ளார்.

திறமை இருந்தும் அதிர்ஷ்டம் இல்லாத வீரர்கள் பட்டியலில் சௌரவ் கங்குலி, ராகுல் டிராவிட், கும்பிளே (இந்தியா), சயீத் அன்வர், வக்கார் யூனிஸ் (பாகிஸ்தான்), பிரையன் லாரா, அம்புரோஸ் (மேற்கிந்திய தீவுகள்), மார்ட்டின் குரோவ், (நியூஸிலாந்து), இயான் போத்தம் (இங்கிலாந்து), காலிஸ், ஆலன் டொனால்டு, ஜான்டி ரோட்ஸ் (தென்னாபிரிக்கா) ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

2003ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வெல்ல கங்குலி, டிராவிட் ஆகியோருக்கு நல்ல வாய்ப்பு இருந்ததாகவும், ஆனால் அதனை அப்போதைய ஆஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கி பொண்டிங் தகர்த்து விட்டதாகவும் இன்ஜமாம் தெரிவித்துள்ளார். (ற)



## சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை வாங்குவதா?

### திரிஷாவின் வருங்கால கணவருக்கு மிரட்டல்

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை வாங்கக் கூடாது என்று நடிகை திரிஷாவின் வருங்கால கணவர் வருண் மணியனுக்கு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் சென்னையில் பிரபல தமிழ் நடிகை திரிஷாவுக்கும், பட அதிபர் வருண் மணியனுக்கும் திருமண நிச்சயதார்த்தம் நடந்தது.

இதைத் தொடர்ந்து ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் உள்ள சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை வருண் மணியன் வாங்கப் போவதாக பரபரப்பு செய்திகள் வெளியாகின. ஆனால் அதற்கு மறுப்பு தெரிவித்த வருண் மணியன், அந்த செய்தி வெறும் வதந்தி தான் என்று கூறியிருந்தார்.

இந்நிலையில் சென்னை தேனாம்பேட்டை பொலிஸ் நிலையத்தில் வருண் மணியன் பரபரப்பு முறைப்பாடு ஒன்றை அளித்துள்ளார்.

அந்த மனுவில், சென்னை அணியை விலைக்கு வாங்கக் கூடாது என்றும், வாங்கினால் பல்வேறு விளைவுகளை சந்திக்க நேரிடும் எனவும் தொலைபேசி மூலம் மிரட்டல் வந்ததாக குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக தேனாம்பேட்டை பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

**விக்ரம் - ராஜன் - கங்கு வெற்றிக்கிண்ணம்**

## சென்றலைட்ஸ் வேகத்தில் சரிந்தது கே.ஸி.ஸி.ஸி.

யாழ்ப்பாணம்,பெப்.2

விக்ரம் – ராஜன் – கங்கு ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக கொக்குவில் வளர்மதி முன்னேற்ற கழக சனசமூக நிலையம் நடத்தும் 30 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுத் தொடரில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணிக்கும், சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையே நடந்த ஆட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி 2 இலக்குகளால் வெற்றிபெற்றது.

இந்த ஆட்டம் நேற்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடந்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணியினர் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணியினரின் துல்லியமான பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாது திணறினர். மள மளவென இலக்குகள் வீழ்த்தப்பட்ட, 27 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் கே.ஸி.ஸி.ஸி. அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 78 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

அதிகபட்சமாக ஜெயரூபன் 18 ஓட்டங்களையும், ஆதித்தன் 14 ஓட்டங்களையும் பெற்றனர்.

சென்றலைட்ஸ் அணியைச் சேர்ந்த வதுன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 16 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 4 இலக்குகளைக் கைப்பற்றினார். அதேபோன்று கோகுலன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 11 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 2 இலக்குகளையும், ஜெரிக்துஷாந் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 10 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 2 இலக்குகளையும். டார்வின் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 11 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

79 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய சென்றலைட்ஸ் அணியினர் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். கே.ஸி.ஸி.ஸி. அணியினரின் பந்துவீச்சை சாமர்த்தியமாக எதிர்கொண்ட சென்றலைட்ஸ் துடுப்பாட்ட வீரர்கள் 22.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 82 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டினர்.

அதிகபட்சமாக டார்வின் 15 ஓட்டங்களையும், கோகுலன் ஆட்டமிழக்காமல் 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

கே.ஸி.ஸி.ஸி. அணியின் பந்தவீச்சாளர்களில் பவித்திரன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 11 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 4 இலக்குகளைக் கைப்பற்றினார். பார்த்தீபன் 4 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 11 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 3 இலக்குகளையும், சந்தியன் 4 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 6 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள். (ந–23)

**விசேட கருத்தரங்குகள்**

சட்டமாணித் தெரிவு
செவ்,புதன்
காலை9.00-3.00மணிவரை

SLAS
செ,புதன்,சனி,ஞாயிறு
காலை 9.00-4.00 வரை

GS,EB க்கு
செவ்,புதன்
பி.ப 1.00-5.00மணிவரை

T.P:0754164564

யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புக்கள்
பிரிவு யாழ்நகர்


**வேலை ஆட்கள் தேவை**

யாழ் நகரில் கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள புடைவை வியாபார நிலையத்திற்கு விற்பனை பிரதிநிதிகள் தேவை(ஆண்கள்) முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன் உரிமை வழங்கப்படும்.சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்

தொடர்பு:0718679111 0212228383

**வெளிவந்து விட்டது**

**CLASS WORK BOOK ENGLISH GRADE 6**




2015புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக **K.V.PRINTERS** வெளியிட்ட**Class Work Book English Grade 6** புத்தகம் தற்பொழுது சகல புத்தகசாலைகளிலும் உடனடியாக பெற்றுக்கொள்ளளாம்.

**K.V.PRINTERS**
**355/2 Clock Tower Road Jaffna**
**TP:NO : 0217200237**

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

BCHS

**தைப் பொங்கலை முன்னிட்டு குறைந்த கட்டணங்களில் கற்கை நெறிகள்**

இன்னும் சில நாட்களில் நீங்கள் பல்கலைக்கழகம் செல்லவேண்டும், படித்துப் பட்டதாரியாக வேண்டும் அல்லது வேறு உயர் கற்கை நெறிகளைக் கற்க வேண்டும் அல்லது போட்டித் தொழிற்சந்தையிலே நல்ல வேலை வாய்ப்பை பெற வேண்டும், இவ்வாறான உங்களின் கனவுகள் நனவாக வேண்டுமெனில், நீங்கள் வாழ்க்கையில் வளம்பெற வேண்டுமெனில் தற்போதைய காலகட்டத்தில் ஆங்கில அறிவு மிக, மிக அவசியமானது

**Spoken English With Grammar - Quick Learning Course**

- சர்வதேச தராதரத்திற்கேற்ற பாடத்திட்டம். Duration: (1 1/2 Months)
- கற்கைநெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.
- விரிவுரைகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video) நடைபெறுகின்றது.
- ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.

**நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும்.**

**Diploma In English** Duration: (2 Months)

தற்காலத்திலே ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. உயர் கல்வி கற்பதாயினும் சரி, அலுவலகத்தில் வேலை புரிவதாயினும்சரி, Internet, E-mail, Internet Chatting மற்றும் நாளாந்த வாழ்க்கையிலே இலத்திரனியல் சாதனங்களை பாவிப்பதிலும் சரி ஆங்கிலத்தின் தேவையை யாரும் புறந்தள்ளமுடியாது. இதை நாம் நன்கு உணர்ந்து எல்லோரும் இலகுவில் கற்கக்கூடிய விதத்தில் ஒரு பாடத்திட்டத்தினைப் புதிய தொழில்நுட்பங்களுடன் (Audio & Video-System) அமைத்துள்ளோம்.

**B1 Exam** Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானதுடன் IELTS-4.5இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்றமுடியும். Duration: (2 Months)

**IELTS** Acadamic/General We do Official Online Registration for Exam Candidates Duration: (2 Months)
(International English Language Testing System)
Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.

**We gurantee success rate 6.5 band and above**

**A1 Exam** Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது (City & Guilds)
சான்றிதழின் கால எல்லை வரையறையற்றது
நம்பிக்கைக்குரிய சர்வதேசப் பரீட்சை
ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது Duration: (2 Months)

05/02/2015 @ 9am
04/02/2015 @ 12.30pm
05/02/2015 @ 3pm
06/02/2015 @ 9am

No.15, Sirambiyadi Lane, Off Stanley road (Above Sathosa SM), Jaffna.
Tel : 021-2224550
Head Office: No.30 15/2, W.A. D. Silva Mawatha, Colombo -06. Tel : 0112500207
Hot Lines : 0777585913, 0777222422, 0714299935

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111



**தெல்லிப்பளை கிழக்கு - வீராங்கொடை கவளாவத்தை அருள்மிகு ஞானவைரவர் சுவாமி கோயில்.**

புனருத்தாரண அஷ்ட பந்தன பஞ்ச குண்ட பக்ஷ
பிரதிஷ்டா பெருஞ்சாந்தி
**மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்**

கிரியைகள் ஆரம்பம்:-05.02.2015 (வியாழக் கிழமை)
எண்ணெய்காப்பு:- 07.02.2015 (சனிக்கிழமை மு.ப. 7.00 - பி.ப. 5.00 மணி வரை)
கும்பாபிஷேகம்:- 08.02.2015 (ஞாயிற்றுக்கிழமை - மு.ப. 8.40 - மு.ப. 10.00 மணி)
தொடர்ந்து 15 தினங்கள் மண்டலாபிஷேகம் இடம் பெற்று இறுதி நாளாகிய 22.02.2015 அன்று 1008 சங்காபிஷேகம் இடம்பெறும்
கவளாவத்தை அருள்மிகு ஞானவைரவர் தேவஸ்தான நிர்வாகத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.02.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.